
கல்கி



KALKI 12-2-1961 30 கா



கேசப்
பராமரிப்பின்
ரகசியம்
ஸ்வஸ்திக்
பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்
தயாரிப்பாளர்: ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
லிமிடெட், பம்பாய்
SHILPI SOM ID

கல்கி பொருளடக்கம்

சார்வரி, மாசி 1 ※ பிப்ரவரி 12, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

புகையிலையின் வரலாறு... 3



புகையிலையைப்பற்றிய அறிவும் உபயோகமும் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிலும், இங்கிலாந்திலும், பிற நாடுகளிலும் பரவியது. உருளைக் கிழங்கு, தக்காளி இனத்தைச் சேர்ந்த அதனை 1508—ல் போர்ச்சுக்கேசியர் நம் நாட்டிற்குக் கொணர்ந்தனர். அதுமுதல் புகையிலை இந்திய மண் மீது தழைத்து வந்துள்ளது. இந்தியாவில் இன்று புகையிலை உற்பத்திக்குப் பிரதானமான மாகாணங்கள்: பம்பாய், பீகார், ஆந்திரம், வங்காளம், சென்னை, மைசூர் ஆகியவையே.



பனாமா


ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT.703 TM.

Greens' Advtg.



மலர் 20 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 28

கூலிப் பிரசாரம்

"காங்கிரஸ்காரர் சிலர் தங்கள் கட்சியைச் சேர்ந்த பதவியிலிருக்கும் வேறு சிலருடைய நடவடிக்கைகளைப் பற்றிப் பகிரங்கமாகக் கண்டித்துப் பேசுவதும் அவர்களைப் பற்றிப் பத்திரிகை வாயிலாகத் தூற்றுவதும் தவிர்க்கப்படவேண்டும். இல்லாவிட்டால் அப்படிப்பட்டவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்" என்று போபால் நகரத்தில் சமீபத்தில் காங்கிரஸ் தலைவர் திரு சஞ்சீவரெட்டி தமது கட்சிக்காரர்களை எச்சரித்திருக்கிறார்.

காங்கிரஸ் ஆளும் கட்சியாக மட்டும் இராமலிருந்தால் இம்மாதிரி காங்கிரஸ் தலைவர் தமது கட்சியினருக்கு விடுத்துள்ள எச்சரிக்கையைப் பற்றியோ பயமுறுத்தலைப் பற்றியோ யாரும் பொருட்படுத்த வேண்டியதில்லை. அது அவர்கள் பாடு என்று விட்டு விடலாம்.

ஆனால், காங்கிரஸ் ஆளும் கட்சி. இக்கட்சித் தலைவர்கள் அரசாங்கத்தில் பல உயர் பதவி வகிக்கிறார்கள். இதன் அங்கத்தினர்களெல்லோரும், கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, அவர்கள் நாட்டின் பூரண சுதந்திரம் பெற்ற பிரஜைகளும்கூட. பிரஜைகள் என்ற முறையில் அரசாங்க அலுவல்களைப் பற்றியும், அவற்றை நிர்வகிக்கும் அமைச்சர்களைப் பற்றியும் பேசும் உரிமை உள்ளவர்கள்.

காங்கிரஸ் நிர்வாகத்தில் நேர்மையும் உண்மையும் அப்படிப் பிரமாதமான ஸ்தானம் வகித்துவிடவில்லை. லஞ்சமும் ஊழலும் மலிந்துகிடக்கின்றன. இது எல்லோரும் அறிந்ததே. இதைப் பற்றித் தெரிந்தவுடனே ஒரு பொறுப்புள்ள பிரஜையின் கடமை அதை அம்பலப்படுத்தி, நிர்வாகத்திலிருந்து இம்மாதிரி அநீதிகளைக் கெல்லி எறிந்துவிட முயற்சி செய்வதுதான். இதுதான் ஜனநாயக முறை. எந்தக் குடியரசு நாட்டிலும் ஒரு பிரஜையின் முதல் கடமை.

ஆனால், காங்கிரஸ் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி என்ன சொல்லுகிறார் பாருங்கள்! "நாட்டுப் பிரஜைகளுக்குள்ள கடமைகளை நீங்கள் மறந்து விடுங்கள்; லஞ்சம், ஊழல் போன்ற விஷயங்கள் உங்கள் கவனத்திற்கு வந்தாலும், அவற்றைப் பற்றிப் பகிரங்கமாகப் பேசிக் கொண்டிருக்காதீர்கள்" என்கிறார். கட்சியின் கட்டுப்பாடு, கட்சி ஒற்றுமை என்ற பெயரில் லஞ்சம், ஊழல் போன்றவைகளைக்கூடத் தடுக்க முற்படக் கூடாது என்கிறார். கட்சி அங்கத்தினர்களுக்கு இவைபற்றித் தெரிந்தாலும் கூடப் பேசக் கூடாது என்கிறார். நாட்டின் வலிமை வாய்ந்த ஒரு கட்சியின் பொறுப்புள்ள தலைவர் கட்டுப்பாடு என்பதற்கு என்ன பொருள் கூறுகிறார் பாருங்கள்!

காங்கிரஸ் கட்சி அரசியலில் மக்கள் பார்வையிலிருந்து மறைக்கவேண்டிய விஷயங்கள் பல இருப்பதை திரு சஞ்சீவ ரெட்டி உணர்ந்திருப்பதே இம்மாதிரி எச்சரிக்கைக்குக் காரணம். தம்முடைய கட்சி நன்றாக வேலை செய்திருக்கிறது, அதன் செயல் பெருமைப்படக் கூடியது என்று ஒரு தலைவர் மனமார எண்ணினால் அவர் இப்படிப் பேசியிருக்கமாட்டார். தம் கட்சிக்காரர்களை அழைத்து, "உங்கள் நடவடிக்கைகளைப் பற்றிப் பத்திரிகை வாயிலாகவும் பகிரங்கமாகவும் பேசாமல் மறைத்தே வைத்துக் கொள்ளுங்கள்" என்றுதான் கூறியிருப்பாரா? உண்மையை எடுத்துச் சொல்லுங்கள்; உங்கள் செயல்களைப் பற்றிப் பறைசாற்றுங்கள்; இக்கு எட்டும் பலமாகக்

கேட்கும்படி உங்கள் சாதனைகளை உரத்த குரலில் ஆயிரம் மேடைகளில் மூலை முடுக்குகள் எல்லாம் பிரகடனம் செய்யுங்கள் என்றல்லவா கட்டளையிட்டிருப்பார்! எது எப்படியானாலும் மேடைகளென்னவோ தயாராகிக் கொண்டுதான் இருக்கின்றன.

மக்கள் முன்னிலையில் குறைகளை அலசித் தமது கட்சியின் மானத்தை வாங்கக் கூடாது என்று போபாலில் திரு சஞ்சீவ ரெட்டி தமது அதிகாரக் குரலை எழுப்பிய அதே சமயம் சென்னை முதல் மந்திரி திரு காமராஜ், கட்சிப் பிரசாரம் செய்வதற்காகச் சம்பளம் கொடுத்து, முழுநேரத் தொண்டர்களை அமர்த்தப் போவதாக மதுரையில் தெரிவித்தார். அத்துடன் இதற்காக அந்த ஒரு மாவட்டத்தில் மட்டும் ஏழு லட்சம் ரூபாய் நிதி திரட்டி விருப்பதாகவும் கூறினார்.

இப்படிக் கூலி கொடுத்துப் பிரசாரத்துக்காக நியமிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சிச் சேவகர்களிடமிருந்து எந்த மாதிரிப் பிரசாரத்தை எதிர்பார்க்க முடியும்? சம்பளமில்லாத கட்சி அங்கத்தினர்களுக்கில்லாத பேச்சு உரிமை சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை பார்க்கும் இவர்களுக்கு மட்டும் வந்து விடுமா? காங்கிரஸ் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டியின் 'கட்டுப்பாட்டுக்கிசைந்த கடமை' என்னும் கருத்துக்கு இணங்க, மக்கள் கவனத்திலிருந்து மறைக்க வேண்டியதை மறைத்து சாதகமாக உள்ளதை மட்டும் எடுத்துச் சொல்லிப்பிரசாரம் செய்தால்தானே அவர்கள் வாங்கும் சம்பளம் ஜீரணமாகும்? கட்சியின் கௌரவத்தைக் காக்க உண்மையை மறைப்பது ஒரு கொள்கையாக ஆகிவிட்டால், கட்சியின் பெயரால் இன்னும் என்னென்ன அதிக்கிரமங்கள்தான் நடக்காது?

காங்கிரஸ் கட்சி ஏன் பதவியிலிருந்து விரட்டப்பட வேண்டும் என்பதைத் தமக்கே உரிய சிந்தனைத் தெளிவுடனும் சொல் வன்மையுடனும் எடுத்துக் கூறி வருகிறார் தலைவர் ராஜாஜி. இப்போது காங்கிரஸ் தலைவர் 'கட்சிக் கட்டுப்பாட்டுக்காக மூடிமறைக்க வேண்டிய நிர்வாக ஊழல்களை அம்பலப்படுத்துவோர் தண்டிக்கப்படுவார்கள்' என்று பயமுறுத்துவதே காங்கிரஸை ஏன் வெளியேற்ற வேண்டும் என்பதை ராஜாஜி கூறுவதை விட மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது.

தன்னைப் பற்றிய உண்மைகளை வெளியே சொல்ல வெட்கப்படுகிறது காங்கிரஸ் கட்சி. மூடி மறைக்க வேண்டிய ஊழல்கள் மலிந்தது காங்கிரஸ் கட்சி. நிர்வாகத்தில் உள்ள நேர்மையின்மை, அநீதி, அக்கிரமம் முதலிய ஊழல்களை எடுத்துச் சொல்லக்கூடாது என்று வாயைக் கட்டித் தமது கட்சிக்காரர்களுக்கே பிரஜா உரிமையை மறுக்கிறது இக்கட்சி. இந்த நிலையில், முழு நேரச் சம்பள ஊழியர்களை அமர்த்தி அடுத்த தேர்தலுக்குப் பிரசார தந்திரங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது காங்கிரஸ். உண்மையைச் சொல்லிப் பிரசாரம் செய்வதற்குப் பதிலாக, எந்தப் பொய்யைச் சொன்னால் கட்சியின் கௌரவம் நிலைக்குமோ, எப்படிச் சொன்னால் வோட்டுகள் கிடைக்குமோ அப்படிப் பிரசாரம் நடக்கும். பொய் சொல்லி மக்களை ஏமாற்றுவதற்குச் சம்பள ஆட்கள் போட்டு வேலை நடத்தப் போகிறார்கள். இதற்குப் பிடிக்கும் ஏராளமான செலவுக்கு அரசு செலுத்தும் கட்சி அமோகமான அதிகார பலத்தை உபயோகித்து, லைசென்சு, பெர்மிட் போன்ற ஆயுதங்களைப் பிரயோகம் செய்து பணம் வசூலிக்கின்றது.

ஆளும் கட்சியின் அட்டகாசத்திற்கும் ஒரு முடிவு வேண்டாமா?

சர்க்காரும் சர்க்கரையும்

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகைக்கு முன் சர்க்கரை கிடைக்குமோ கிடைக்காதோ என்று அச்சப்பட்ட நிலை இருந்தது. கட்டுப்பாடும், கோட்டாவும், கியூவரிசையும் அவசியந்தான் என்று கருதப்பட்டது. ஆனால் இப்போது சர்க்கரைக்குத் தேக்கம்தான் ஏற்பட்டு விட்டிருக்கிறதாம். பற்றாக்குறை இருந்த போது நிலைமையைச் சமாளிக்க மாதம் 11,000 டன் வீதம் வட இந்திய ஆலைச் சர்க்கரையை மத்திய அரசாங்கத்தினர் சென்னை ராஜ்யத்துக்கு அனுப்பி வைத்தார்கள். இப்போது அவர்களுடைய சர்க்கரை தேவை இல்லை. அனுப்பினாலும் வைத்துக் கொள்ளுவதற்கு இடமில்லை. இரண்டு மாதத்துக்காவது அனுப்ப வேண்டாம் என்று சென்னை அரசாங்கம் சொல்லி விட்டது. இந்தத் தகவலை அமைச்சர் திரு பக்தவத்சலம் சட்டசபையில் வெளியிட்டார்.



செய்தி தெரியுமா....?
சாமா
சென்னை ராஜ்யத்தில் நல்ல முறையில் நிர்வாகம் நடைபெற்று வருகிறது என்ற நல்ல பெயரைச் சர்க்கார் ஊழியர்களாகிய நீங்கள் காப்பாற்ற வேண்டும்.
அந்த நல்ல பெயரை நாங்கள் தான் வாங்கித் தந்தோம். காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு.
காமராஜ்
சென்னை ராஜ்ய நிர்வாகம்
"துண்டுப் பிரசுரங்களால் சர்க்காரை மாற்ற முடியாது. ஓட்டுக்களால்தான் சர்க்காரை மாற்ற வேண்டும்" — ராஜாஜி
துண்டுப் பிரசுரங்கள் மண்ணோடு போய் விடும்....
ஓட்டுக்கள்தான் காங்கிரஸை மண்ணைக் கவ்வச் செய்யும்!
ஒரு முறை விழாவுக்கு நான் சென்ற போது ஏராளமான ஈக்கள் தான் எனக்கு விருந்தளிக்கப்பட்டது
— சுகாதார மந்திரி மாணிக்க வேலு.
ஜாதி வெறி
லஞ்சம்
பதவி
காங்கிரஸ்
இந்தியாவின் ஒரு தேசிய பட்சியாக எந்தப் பட்சியைத் தேர்ந்தெடுப்பது என்பதைப் பற்றி ஆராய்ச்சி நடக்கிறது.
— செய்தி.
அன்ன (மிதம்) பட்சி

ஒரு மாதத்துக்குள் இப்படி ஒரு மாறுதலா என்று எண்ணுவது இயற்கையே. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. சென்னை ராஜ்யத்தில் எட்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இந்து பழைய ஆலைகள் ஆண்டுதோறும் உற்பத்தி செய்து கொண்டிருப்பவை. 1960-61ல் மூன்று புதிய ஆலைகள் உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டன. இவை எல்லாம் சேர்ந்து நமது தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ள உதவும். மேலும் அடுத்த ஆண்டில் மற்றொரு ஆலையும் வரப்போகிறது. எனவே இனி சர்க்கரை கிடைக்காது என்ற நிலை ஏற்படக் காரணமில்லை.

ஆனால், சர்க்கரை வாங்கும் மக்களுக்கு விலை குறைந்திருக்கிறதா என்றால் அது தான் இல்லை. பொருளாதார வல்லுநர்கள் உற்பத்திப் பெருக்கினால் விலை குறையும் என்று வலியுறுத்துகின்றனர். ஆனால் சர்க்கரை விஷயத்தில், (மற்ற துறைகளிலும் இதே அனுபவம்தான்) ஆண்டுக்கு 32,000 டன் உற்பத்தியாகிக் கொண்டிருந்த போதும் ஆண்டுக்கு 127,000 டன் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிற போதும் விலை மட்டும் ஒரே சீராக உயர்ந்தேதான் நிற்கிறது. ஆலைகளைக் கேட்டால் கரும்புக்கு அதிக விலை சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, அதைக் குறைக்கா விட்டால் விலை குறையாது என்கிறார்கள். மற்றும் சில ஆலைக் கம்பெனிகளோ, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் சர்க்கரை விற்பனையால் ஏற்படும் நஷ்டத்தை உள்நாட்டில் வசூலிக்காமல் யாரிடம் வசூலிப்பது என்கின்றன. அரசியல்வாதிகளைக் கேட்டால் அச்சடித்து நோட்டு வழங்கிப் பொருளாதாரம் நிலைபெறும் நாட்டில் விலைகள் உயராமல் குறையவா செய்யும் என்று சப்பை கட்டுகிறார்கள். அரசாங்கமோ என்றால் அதன் போக்கே அலாதி. அவர்களுக்கு எக்ஸைஸ் வரி மூலம் கிடைக்கும் பணம் அவசியத் தேவையாகும். இந்த ஆண்டில் வரிகளை மேலும் உயர்த்த ஆரம்பிக்க வேண்டும் என்று கொக்கரிக்கிறார்கள். இந்த நிலையில் விலைகள் எவ்வாறு இறங்கும்?

காங்கிரஸ் பொருளாதாரத்தில் உற்பத்தி உயர்வுக்கும் விலை குறைவதற்கும் சம்பந்தமே இல்லை. கடும் உழைப்பு வேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று மக்களை உற்சாகப் படுத்துகின்றனர். பொதுமக்களின் நலனுக்காகப் பாடுபடுவதாகச் சொல்லி, அவர்களின் உழைப்பின் பலனைக் கொண்டு ஆளும் கட்சியின் ஆதிக்கத்தை வலிமைப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இப்படி மக்களை ஏமாற்றி வரும் ஒரு கட்சியை எத்தனை காலத்திற்குத்தான் பதவியிலிருத்தி வைப்பது?

என்ன சேதி?

பொறுப்பற்ற பதில்கள்

சுப்ரீம் கோர்ட் நீதிபதி நியமனத்தில்கூடத் தமது சிபாரிசை சர்க்கார் நாடுவதாகத் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கூறியிருக்கிறாராம். இதுபற்றிச் சென்னை மேல் சட்டசபையில் டாக்டர் ஏ. ஸ்ரீநிவாசன் கேட்டபோது, தொழில் மந்திரி 'யாராவது எதையாவது சொல்லிக் கொண்டிருந்தால் அதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?' என்ற பாணியில் பதில் சொல்லியிருக்கிறார். காங்கிரஸே பேச்சாகவும், காமராஜே மூச்சாகவும் போராடும் நாயக்கரை அவ்வளவு எளிதில் 'யாரோ' என்று தள்ளிவிட முடியுமா? பெரும் பதவி நியமனங்களில் கூடத் தம்மைக் கலந்தாலோசிப்பதாக அவர் சொல்லி விருப்பதையுந்தான் 'ஏதோ விஷயம்' என்று அல்பமாகப் பாவித்துப் புறக்கணித்துவிட முடியுமா? திரு காமராஜர் பகிரங்கமாக இதை அங்கீகரிக்காவிட்டாலும் அல்லது மறுத்தாலும் கூட மக்கள் மனத்திலிருந்து இதை அகற்றுவது கஷ்டம்.

நிதி மந்திரியும் வேறொரு விஷயத்தில் இவ்வாறே தம் பொறுப்பை உணராது விடையளித்திருக்கிறார். ஓய்வு பெற்ற ஐந்து அதிகாரிகளின் பதவிக் காலத்தைச் சர்க்கார் நீடித்திருப்பதாகவும், எந்த அடிப்படையின் மீது இது செய்யப்பட்டிருக்கிறது என்றும் அதே அங்கத்தினர் மேல்சபையில் கேட்டார். அதற்கு கனம் நிதி மந்திரியார் "மந்திரிமார்கள் மனம் போனபடி இவ்வாறு செய்திருக்கிறார்கள் என்று தோன்றினால் அப்படியே வைத்துக் கொள்ளலாம்" என்று சொன்னாராம். எவ்வளவு அகந்தையும், ஆணவமும் இருந்தால் இப்படிப்பட்ட விடை எழுந்திருக்கும்? அதிகார இயந்திரம் தம் வீட்டுச் சொத்து என்றும் சட்டசபை தமது விளையாட்டு மைதானம் என்றும் அவர் எண்ணுகிறார் போலும்!

கைத்தறி வாரம்

ஆண்டு தோறும் கொண்டாடப்படும் கைத்தறி வாரம் இந்த ஆண்டிலும் பிப்ரவரி ஐந்திலிருந்து ஒரு வாரத்

திரு எஸ். பார்த்தசாரதி

ஹிந்து தினசரிப் பத்திரிகையின் பதிப்பாசிரியரும் கஸ்தூரி ஸன்ஸ் ஸ்தாபனத்தின் டைரக்டருமான திரு பார்த்தசாரதி தமது முப்பத்து மூன்றாவது வயதில் அகால மரணமடைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். கஸ்தூரி சீனிவாசனுடைய மூத்த புதல்வரான திரு பார்த்தசாரதி இளவயதிலேயே பட்டம் பெற்றுத் தகப்பனாரின் பத்திரிகைத் தொழிலிலேயே தாமும் ஈடுபட்டு இப்பத்திரிகையின் வாரப்பதிப்பைத் தமது நேரடிப் பொறுப்பில் நடத்திவந்தார். அவருடைய மேற்பார்வையிலும் நிர்வாகத்திலும் பல புதிய அம்சங்களைப் புகுத்தி வாரப்பதிப்பை மிகவும் கவர்ச்சிகரமாகவும் உபயோகமுள்ளதாயும் செய்தார். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய மேல் நாடுகளுக்குச் சென்று பத்திரிகைத் துறையில் உயர் அனுபவங்கள் பலவற்றைப் பெற்றார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஹிந்து பத்திரிகையின் பதிப்பாசிரியராகப் பொறுப்பு ஏற்றுப் பணியாற்றி வந்தார். அவருடைய அனுபவமும் ஆர்வமும் முற்போக்கு மனப்பான்மையும் அவரது முன்னோர்களால் ஆரம்பித்து இன்று நாட்டிலேயே சிறந்த முறையில் நடந்துவரும் ஹிந்துப் பத்திரிகைக்கு மிகவும் பயன்பட்டிருக்கும். ஆகவே இத்துணை இளவயதில் அவர் காலமானது மிகவும் துயரம் தருவதாகும். எல்லோரிடமும் சரளமாகப் பழகும் தன்மையுள்ளவராதலால் அவருக்குப் பல துறைகளில் நண்பர்கள் உண்டு. அவர் நோய்வாய்ப்பட்டிருந்தது சில நாட்கள்தான் என்றாலும் நவீன மருத்துவத் துறையில் ஏற்பட்ட அபூர்வ சிகிச்சை முறைகள்கூட அவர் விஷயத்தில் பயனளிக்காமல் போயின. அவருடைய பிரிவால் துயரத்திலாழ்ந்திருக்கும் அவரது அன்னையாருக்கும் மனைவி மக்களுக்கும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



துக்கு நடைபெறுகிறது. கைத்தறி ஜவுளி வகைகளின் விற்பனை ஒருபுறம் இருக்க, நெசவாளிகளின் நிலைமையை நினைத்துப் பார்க்க இது ஒரு சந்தர்ப்பம். நம் நாட்டில் 28 லட்சம் கைத்தறி நெசவாளிகள் இருக்கின்றனர். அவர்களில் 12 லட்சம் பேர்கள்தான் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து தொழில் நடத்துபவர்கள். மற்ற 16 லட்சம் நெசவாளர்கள் தனிப்பட்ட முறையில், கிடைத்த வேலையைக் கொண்டு சொற்ப வருவாயில் நாளை ஓட்டிக் கொண்டு செல்லுகின்றனர். சங்கங்களில் சேர்ந்துள்ளவர் பாடு கொண்டாட்டமோ என்று எண்ணிவிட வேண்டாம். அவர்களிலும் பாதிப்பேர்களுக்கு மட்டுமே வேலை கொடுக்க முடிகிறதாம். மற்றப் பாதி நெசவாளிகள் வேலை இன்மையால் தங்கள் தறிகளை மூடியே வைத்திருக்க வேண்டியிருக்கிறதாம். தனிப்பட்ட நெசவாளர்களைப் போலவே, இவர்களும் வாடுகின்றனர். இவர்களது நிலைமையை உயர்த்தப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும், இது வரையில் அவர்களைப் பொறுத்தமட்டில் எதுவும் உருப்படியான பலனைத் தரவில்லை. ஏனெனில், இந் நடவடிக்கைகள் எல்லாம் மேலெழுந்தவாரியாக இருப்பவைதான். கைத்தறி நெசவாளிகள் உற்பத்தி செய்யும் புடவை, வேஷ்டிகளில் முக்கால் பாகம், உள்நாட்டு மார்க்கெட்டில், ஆலைகள் உற்பத்தி செய்யும் புடவை, வேஷ்டிகளின் கடுமையான போட்டிக்கு ஆளாகின்றன. அரசாங்கத்தின் உதவியின்றி இதை அவர்களால் சமாளிக்க முடியவில்லை. அதனால் தான் தலைவர் ராஜாஜி அவர்கள் புடவை, வேஷ்டிகளின் உற்பத்தி முழுவதையும் கைத்தறி நெசவாளர்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்று பல காலமாக வற்புறுத்துகிறார். சென்னை, ஆந்திர ராஜ்யங்களும் இந்தச் சிபாரிசை ஆதரித்திருக்கின்றன. ஏனெனில் கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் இந்த இரண்டு ராஜ்யங்களில்தான் இருக்கின்றனர். ஆனால் எதைச் செய்தால் பலன் கிடைக்குமோ, நெசவாளிகளின் உண்மை நிலைமை உயருமோ, அதை நமது மத்திய அரசாங்கம் இன்னமும் செய்யவில்லை. ஆண்டுதோறும், கைத்தறி வாரம் கொண்டாடி அவர்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டு அவர்கள் ஆத்ம திருப்தி அடைந்து விடுகின்றனர்.

சிவராத்திரி மகிமை

சிவாலயங்களில் ஈசுவரனுடைய சந்நிதானத்தின் கர்ப்பக்கிருஹ விமானங்களுக்குப் பின்புறம் மேற்கு நோக்கி "லிங்கோத்பவ" மூர்த்தியின் பிம்பம் இருக்கிறது. லிங்கோத்பவ மூர்த்தி என்பது பரமசிவனுடைய அறுபத்துநான்கு மூர்த்தங்களுள் ஒன்று. சிவனுடைய உருவம் மான், மழுவுடன் இருக்கிறது. சிரஸும், பாதமும் கண்களுக்குப் புலப்படா. கீழே வராஹமூர்த்தி காணப்படுவார். மேலே ஹம்ஸமூர்த்தி காணப்படுவார்.

ஆதியும் அந்தமும் இல்லாத ஜோதி சொரூபமே இவ்விதம் லிங்கோத்பவ மூர்த்தியாக நள்ளிரவில் விச்வரூபம் எடுத்த நன்னாள் சிவராத்திரி ஆகும். இப்பேர்ப்பட்ட ஒளிப் பிழம்பைக்காண பிரும்மா அன்னபட்சியாக ஆகாய மார்க்கத்தில் பறந்தும் மகாவிஷ்ணு வராக மூர்த்தியாகப் பாதாளத்தில் சென்றும், இருவரும் இறைவனின் அடிமுடி காண இயலாமல் தோல்வி அடைந்தனர்.

சகல பிரும்மாண்டமும் சிவலிங்க சொரூபம். பாதாளம் முதல் ஆகாச பரியந்தம் எல்லையற்ற ஆனந்தரூபமாகப் பிரகாசிக்கின்ற ஸ்படிக லிங்கத்திற்கு சிவராத்திரி புனித நாளில் நான்கு காலமும் அபிஷேகம் செய்யவேண்டும். அபிஷேகம் செய்வதற்குமுன், "இப்பேர்ப்பட்ட லிங்கத்தின் சிரஸில் பூரண சந்திரகலை இருக்கிறது. சந்திர கலையினின்றும் அமிருதம் ஒழுகுகிறது. அதனால் பிரும்மானந்தம் உண்டாகிறது. சகல உலகமும் அந்த ஒளிமயமான லிங்க வடிவம்தான். அந்த லிங்கம் அமிருதத்தினால் நனைக்கப்பட்டுக் குளிர்ச்சி அடையும்போது உலகம் முழுவதும் குளிர்ச்சி அடைகிறது" என்று தியானித்துப் பின்னர் அபிஷேகம் செய்யவேண்டும்.

நாம் யாரை அதிகமாக நினைக்கிறோமோ அப்போது அவராகவே மாறிவிடுவோம். சித்தத்தில் கொஞ்சம்கூடச் சலனம் இல்லாமல் ஆனந்தரூபியான ஈசுவரனைச் சதா நினைத்தால் நாமும் அவ்விதமே ஆகிவிட முடியும். ஏற்றின விளக்கு காற்று இல்லாதபோது எப்படி ஆடாமல் அசையாமல் துல்லியமாய்ப் பிரகாசிக்கிறதோ அதைப்போலவே நம் மனத்தில் சலனம் இல்லாதபோது ஈசுவரனும் பிரகாசிக்கிறான்.

ஸ்படிகலிங்க மூர்த்தியான ஸ்ரீ சந்திரமௌளீச்வரனை இந்தச் சிவராத்திரிப் புனிதகாலத்தில் உபவாசம் இருந்து, இரவு கண் உறங்காமல் தியானித்து வழிபட்டால் சகல சௌபாக்கியங்களையும் அடைவோம்.

— ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடிபீடம்

சுதந்திர நிதி

கல்கியில் ராஜாஜி அவர்கள் விடுத்திருந்த வேண்டுகோளுக்கு இணங்கிக் கீழ்க்கண்ட அன்பர்கள் சுதந்திர நிதிக்குப் பொருளுதவி செய்திருக்கிறார்கள்.

(ஜனவரி 30-ந் தேதி முதல் பிப்ரவரி 4-ந் தேதி முடிய)

டி. எஸ். கே. மூர்த்தி ...	4 00	ஆர். எஸ். ரங்காச்சாரி ...	5 00
எம். கே. எஸ். ராவ் ...	1 00	ஆர். எஸ். வி. ராவ் ...	2 00
ஆர். கிருஷ்ணமூர்த்தி ...	25 00	ஆர். ரவி & சி. டி. ராஜகோபால்	2 00
எஸ். எஸ். ஆர். சாரி ...	5 00	டி. செல்வம் ...	1 99
சாமி வெங்கட்ராமய்யர் ...	5 00	எஸ். அப்துல் ஹாஸன் ...	1 00
எஸ். எம். ரத்தினசபாபதி ...	5 00	டி. கே. நாராயண சிங் ...	2 00
கே. நடராஜன் ...	2 00	என். வெங்கடேச முதலியார் ...	2 00
கே. ஷண்முகம் பிள்ளை ...	2 00	ச. கு. ஜெயராம செட்டியார் ...	2 00
ராஜாஜி பக்தன் ...	25 00	எம். வேணுகோபாலன் ...	2 00
எஸ். கிருஷ்ணகுமார் ...	3 00	கே. தேவகி அம்மாள் ...	2 00
கே. கே. மஹாதேவன் ...	1 00	வி. பட்டம்மாள் ...	1 00
சி. பி. எஸ். மணி ஐயர் ...	25 00	கே. ஆர். நாராயணன் ...	2 00
வி. தேசிகன் ...	5 00	10-1-61 முதல் 28-1-61 முடிய	998 05
ஏ. என். சீநிவாச ராவ் ...	1 00		
ஆர். சிவசுப்பிரமணியம் ...	5 00	மொத்தம் வரவு	1137 04

நல்வாழ்க்கையை அளிக்கும் சிறந்த பண்டிகை

சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

உலகத்திலுள்ள எல்லா ஜீவன்களும் 'சுகம் வேண்டும், துக்கம் வேண்டாம்' என நினைக்கின்றனர். படித்தவன், படிக்காதவன், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருமே இம்மாதிரி நினைப்பதைக் காண்கிறோம். ஆனால், 'சுகத்தை அடைவதற்கும், துக்கத்தைத் தடுப்பதற்கும் எது வழி' என்பதை எல்லோராலும் அறிய இயலாது. அந்த வழியை நமது முனிவர்கள் வேதங்களிலிருந்து பலவகைகளாகக் கூறியுள்ளனர். நாமாகவே வேதங்களிலிருந்து தெரிந்துகொள்வதைக் காட்டிலும் முனிவர்கள் தெரிந்து கூறுவதைக் கேட்பது நமக்குச் சுலபமாகும். முனிவர்கள் வேதங்களில் கூறியதைத் தாங்கள் செய்து பார்த்து நற்பயன்களை அனுபவித்துப் பிறகு நமக்குக் கூறியுள்ளனர். அந்த அனுபவங்களைக் கூறியிருக்கும் நூல்களுக்கே 'ஸ்ம்ருதி' எனப் பெயர்.

முனிவர்கள் நமது வாழ்க்கையை நல்லதாகச் செய்வதற்குக் கூறிய பல பண்டிகைகளுக்குள் 'மஹா சிவராத்திரி' என்னும் பண்டிகை மிகச் சிறந்ததாகும். மாக சுக்ல கிருஷ்ண சதுர்த்தசி அன்று இந்தப் பண்டிகையைக் கொண்டாடும்படி முனிவர்கள் கூறியுள்ளனர்.

இந்தப் புண்ணிய தினத்து நள்ளிரவில்தான் லிங்க ரூபியாய் பூமியில் ஸ்ரீ பரமசிவன் ஆவிர்பவித்தார். அதனால்தான் இதற்கு 'மஹாசிவராத்திரி' எனப் பெயர்.

இப்பண்டிகையின் சிறப்பைப் பற்றி ஸ்ரீ பரமேச்வரனே பார்வதி தேவிக்குக் கூறுகிறார்:

येनैव कथ्यमानेन यमो विद्रवतां व्रजेत् ।
शिवरात्रिस्तु सा ज्ञेया सर्वयज्ञोत्तमोत्तमा ॥

न तीर्थैस्तद्भवेत् पुण्यं शिवरात्रिव्रतं परम् ।
शिवरात्रिसमं नास्ति व्रतानामुत्तमं व्रतम् ॥

अज्ञानात् ज्ञानतो वाऽपि कृत्वा मोक्षमवाप्नुयात् ।
सर्वमङ्गलशीला च सर्वामङ्गलनाशिनी ।
भुक्तिमुक्तिप्रदा चैषा सत्यं सत्यं वरानने ॥

மஹா சிவராத்திரி விரதத்தைப் பற்றிப் பேசுகிறவர்களுக்கு யம பயமில்லை. பல யாகங்களைச் செய்வதைக் காட்டிலும், இப்பண்டிகையை அனுஷ்டிப்பது மிகவும் புண்ணியமாகும். சிவராத்திரி விரதத்தால் கிடைக்கும் நற்பயன், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடினால்கூடக் கிட்டாது. சிவராத்திரிக்கு ஒப்பான வேறு சிறந்த விரதம் எதுவுமில்லை. தெரிந்தோ, தெரியாமலோ இந்தப் பண்டிகையைச் செய்கிறவன், ஸர்வ துக்கங்களிலிருந்தும் விடுபட்டு விடுவான். ஸர்வ மங்களங்களையும் அளித்து, ஸர்வ அமங்களங்களையும் போக்க வல்லமையுள்ள விரதமாகும். இவ்வுலகில் எல்லா சுகங்களையும் அளித்து, பரலோகத்திலும் நல்ல சுகங்களையும் அளிக்கும். அழகு வாய்ந்த முகமுள்ள, ஓ, பார்வதியே! இது சத்தியம்!! இது சத்தியம்!!!''

காட்டில் ஒரு வேடன் இரவில் மிருகங்களைப் பிடிப்பதற்காக, பில்வ மரத்திலிருந்து கொண்டு, தூக்கம் வராமலிருப்பதற்காக, பில்வதளங்களைப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டு இருந்தான். அந்த மரத்தடியில் புதைந்திருந்த சிவலிங்கத்தின் தலையில் அவை விழுந்தன. அதனால் அவன் நல்ல கதியை அடைந்து விட்டான். அந்த வேடன், வேதத்தையோ, தவத்தையோ, ஜபத்தையோ, யோகத்தையோ அறியாதவன். இவனே நற்கதியை அடைந்தான் என்றால், வேதத்தின் பெருமையைத் தெரிந்து செய்கின்றவர் சிறந்த நற்பயனை அடைவார்கள் என்பதில் ஐயமென்ன?

இந்தச் சிவராத்திரி தினத்தில் ஸர்வ ஜாதியினரும் உபவாசமிருந்து இரவில் ஸ்நானம் செய்து, தனது வீட்டிலோ, கோவிலிலோ ஸ்ரீ பரமசிவனுக்கு அபிஷேகம், அர்ச்சனை, நமஸ்காரம், ஸ்தோத்திரம் முதலியவற்றைப் பக்தியுடன் செய்வது வழக்கம். தன் வீட்டில் சிவனைப் பூஜிப்பவர்கள்கூட சிவராத்திரியன்று ஆலயத்துக்குச் சென்று சிவனை தரிசிப்பது வழக்கம். இந்தப் பரிசுத்தமான நாளில் ஒரு முறை பஞ்சாட்சர மந்திரத்தை ஜபித்தால் கோடி முறை ஜபித்த புண்ணியமாகும்.

இம்மாதிரி மகத்தான பயனை அளிக்கும் சிவராத்திரி விரதத்தை யாவரும் அனுஷ்டிக்க வேண்டும். சிவநாமத்தையாவது நிரம்ப ஜபிக்க வேண்டும். பரமசிவன் காலனைக் காலால் உதைத்து விரட்டியவனாகையால் இந்த சிவாராதனத்தைச் செய்கின்றவர்களுக்கு யமபயம் கிடையாது. பாபங்கள் யாவும் நிச்சயம் விலகி விடும். பரமசிவனுடைய அருளுக்குப் பாத்திரமாவார்கள்.

கல்வி வேறு, படிப்பு வேறு. கல்வியானது புத்தி, ஆத்மா சிறப்புப் பெறச் சீர்ப்பட்டு நிற்பது. வெறும் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது மட்டிலும் அதைத் தந்து விடாது. தண்ணீர் மட்டும் ஆகாரமாகி விடாது. ஆனாலும் அவசியமானதுதான். ஆயினும் அதைவிட உணவு முக்கியமானது. அதைப்போலவே எழுதப் படிக்கத் தெரிவது மட்டும் கல்வியைப் பெற்றதாகாது. - ராஜாஜி

நம்மாழ்வார் பாடிய

பக்தி நெறி

ராஜாஜி

57

கொண்ட பெண்டிர், மக்கள்,
உற்றார், சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டது அல்லால்,
காதல் மற்று யாதும் இல்லை;
எண்திசையும், கீழும், மேலும்,
முற்றவும் உண்ட பிரான்
தொண்டரோமாய் உய்யல் அல்லால்,
இல்லை கண்டீர்—துணையே.

எம்பெருமான் ஒருவனே துணை. அவனை விட்டு மனைவி மக்கள் உறவினர் சுற்றத்தார் முதலியவர்கள் துணை ஆகமாட்டார்கள். கையில் பொருள் இருந்து அதைக் கண்ட போது அவர்கள் அன்புள்ளவர்கள் ஆவார்கள். அவ்வளவே. உண்மை அன்பு அவர்களிடம் இடையாது. அவர்களை நம்பி ஏமாந்து போக வேண்டாம் என்று சங்கரர் பஜ கோவிந்தத்தில் பாடியது போல் ஆழ்வாரும் உபதேசிக்கிறார். எம்பெருமானுக்கு அடியார்களாகிப் பிழையுங்கள் என்கிறார்.

கண்டதோடு அல்லால்—இவனைக் கண்டபோது சிநேகிப்பார், அவ்வளவே, உண்மைச் சிநேகம் அல்ல. கையிலே பொருள் கண்டபோது சிநேகிப்பர் என்றும் வியாக்கியானம்.

* * *

உண்மைத் துணை எம்பெருமான் ஒருவனே. மற்றவர்களைப் பற்றுதல் பயனில்லை.

துணையும் சார்வும் ஆகுவார்போல்,
சுற்றத்தவர் பிறரும்
அணைய வந்த ஆக்கம் உண்டேல்,
அட்டைகள் போல் சுவைப்பர்;
கணை ஒன்றாலே ஏழ் மரமும்
எய்த எம்கார் முகிலைப்
புணை என்று உய்யப் போகல்
அல்லால் இல்லை கண்டீர்,
பொருளே.

உபகாரரைப் போலே இருந்து தம் காரியங்களையே முடித்துக் கொள்வார்கள் சுற்றத்தார்களும் பிறரும்.

சார்வு — புகலிடம். கார்முகில் — நீர்மேகம் போல் பரம உதாரன்.

எம்பெருமான் புணை என்று உய்யப் போகல் அல்லால் இல்லை கண்டீர் பொருள்—எம்பெருமானைத் தஞ்சமாகப் பற்றி உஜ்ஜீவித்துப் போங்கள். அவ்வாறன்றி மற்றவர்களைப் பற்றினால் ஒரு பயனும் இல்லை.

* * *

அவன் ஒருவனே அரண் என்கிறார்.

பொருள் கை உண்டாய்ச் செல்லக்
காணில், போற்றி என்று ஏற்று
எழுவர்;
இருள் கொள் துன்பத்து இன்மை
காணில், என்னே! என்பாரும்
இல்லை;
மருள் கொள் செய்கை அசுரர் மங்க,
வடமதுரைப் பிறந்தாற்கு
அருள் கொள் ஆளாய் உய்யல்
அல்லால், இல்லை கண்டீர்,
அரணே.

கையிலே பொருள் இருப்பதைக் கண்டால் புகழ்ந்து வாழ்த்தி ஏதேனும் பெற்றுக் கொண்டு செல்வார்கள். வறுமை உண்டாகித் துன்பப்பட்டு எல்லாம் இருள் மூடிய நிலையில் இருப்பின் ஏன் என்று கேட்கமாட்டார்கள். ஆதலால் கண்ணபிரான் அருளைப் பெற அவனடியார்களாவீர். அதுதான் உண்மைப் பாதுகாப்பு. மற்றவர்களை நம்பி மோசம் போகாதீர். பயன் உள்ள போது பந்துக்கள் கொண்டாடுவார்கள். ஆபத்து வந்த காலத்தில் ஏன் என்று கூடப் பார்க்க மாட்டார்கள்.

மற்றொன்று இல்லை; சுருங்கச்
சொன்னோம்:
மாநிலத்து எவ் உயிர்க்கும்
சிற்ற வேண்டா: சிந்திப்பே
அமையும் கண்டீர்கள்: அந்தோ!

குற்றம் அன்று: எங்கள் பெற்றத்
  தாயன், வடமதுரைப் பிறந்தான்
குற்றம் இல் சீர்கற்று, வைகல்
  வாழ்தல் கண்டீர், குணமே.

சிற்ற வேண்டா—அலைந்து திரிதல் வேண்டாம்; வருந்த வேண்டாம். சிந்திப்பே அமையும்—பகவானைச் சிந்தித்தல் ஒன்றே போதும். வார்த்தைகள் வேண்டா — வணங்குதல் வேண்டாம். மற்றொன்றில்லை — வேறொரு வழியும் வேண்டாம்.

'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய' என்று கீதை சரம சுலோகத்தில் சொன்னது போல் ஆழ்வார் இப்பாசுரத்தில் மற்றொன்று இல்லை என்கிறார். 'சிற்ற வேண்டா' என்பது அந்த சரம சுலோகத்தில் 'மாசுச:' என்று பகவான் சொன்னதற்கு ஆழ்வாருடைய தமிழ்.

பெற்றத்து ஆயன்—கோபாலன்—பெற்றம்—பசு. பசுவை மேய்ப்பவன்.

'மன்மநாபவ' என்று பகவான் சொன்னதை ஆழ்வார் 'சிந்திப்பே அமையும்' என்கிறார்.

எவ்வுயிர்க்கும் — குறித்த ஒரு சிலருக்கு மாத்திரம் அல்ல. எல்லாருக்கும் உரிய.

எங்கள் கோபாலனுடைய கல்யாண குணங்களைக் கற்று வாழ்நாட்களைக் கழியுங்கள்.

குற்றம் அன்று—இப்படிச் செய்வதில் உங்களுக்கு ஒரு குற்றமும் உண்டாகாதே, ஏன் இந்த நல்ல காரியத்தைச் செய்ய மாட்டீர்கள் என்று வருந்திக் கேட்கிறார்.

*   *   *

நானே புகலிடம் என்னும் உண்மையை நிலைநிறுத்துவதற்காகக் கண்ணன் அவதரித்தான். பூபாரம் நீக்குவதற்காக வடமதுரையில் அவதரித்தான். அவனுடைய திருவடிகளிலே சரணம் என்று விழுங்கள். உங்களுடையதாக நீங்கள் நினைக்கும் பொருள் எல்லாம் அவனுடைய பொருள். சகலமும் அவனே. 'ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்' என்று உபநிஷத்தில் சொல்லப்பட்டது போல் நீங்கள் செய்ய வேண்டிய கடன் அனைத்தும் அவனுடைய பாரம் என்று அவன் மேல் போட்டுவிடுங்கள். உய்யப்பெறுவீர்கள் என்று ஆழ்வார் பாடுகிறார்.

கண்ணன் அல்லால், இல்லை கண்டீர்
  சரண்: அது நிற்க, வந்து
மண்ணின் பாரம் நீக்குதற்கே,
  வடமதுரைப் பிறந்தான்
திண்ணமா நும் உடைமை உண்டேல்,
  அவன் அடி சேர்த்து உய்ம்மினோ:
எண்ண வேண்டா: நும்மது ஆதும்
  அவன் அன்றி, மற்று இல்லையே.

அஞ்ஞானத்தால் உங்களுடைய பொருள் என்று எண்ணிக் கொண்டு பற்று வைத்துக் கொள்ளாதீர். அனைத்தையும் அவன் திருவடியில் சமர்ப்பித்து உன்னுடைய பாரம் என்று விட்டு விடுங்கள் என்கிறார்.

'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ' என்று கீதாசார்யன் கடைசியில் உபதேசித்ததை ஆழ்வார் அழகிய தமிழில் இப்பாசுரத்தில் சொல்லுகிறார்.

இந்தப் பாசுரங்களுக்கு ஈட்டின் மூன்றுரை மிக்க அழகு பொருந்தியதாகும். தனக்கு நலத்தைக் கூறிய விபீஷணனை ராவணன் விரட்டி விட்டான். அவன் ஸ்ரீராமனிடம் சரண் புகுந்தான். பெற்ற தகப்பனே பிரஹ்லாதனுக்குப் பகைவனாகி விட்ட போது வந்து உதவினான் ஹரி. சுக்ரீவன் தன் தமையனால் நோவுற்ற போது ஸ்ரீராமன் வந்து அவனுக்கு உதவினான். மாதா பிதாக்கள் கைவிட்ட ஜயந்தனுக்கு அவன்மேல் பிரும்மாஸ்திரம் தொடுத்த ஸ்ரீராமனேயல்லவோ புகல் ஆனான். இந்தக் காகாசுரன் கதையைச் சுந்தர காண்டத்தில் பிராட்டி அநுமானுக்குச் சொல்லுகிறார்: "அந்தக் காகாசுரன் தகப்பனாலும் முனிவர்களாலும் தேவர்களாலும் விடப்பட்டவனாய், மூன்று உலகங்களிலும் திரிந்து திரிந்து அந்தப் பெருமானையே சரணமாக அடைந்தான்."

சுந்தர காண்டம் 38 : 33

துரௌபதி சபையில் அவமதிக்கப்பட்டு நின்ற காலத்தில் கணவன்மார்

ஐவரும் தரையைக் கீறிக் கொண்டு இருக்க, வெகு தூரத்தில் இருந்த கிருஷ்ணனை 'கோவிந்தா' என்று அழைத்து அழுதாள் அதைப் பற்றிப் பிறகு கண்ணன் சொல்லுகிறான்: அவள் அப்படி அழைத்து அழுதது என் மனத்தினின்றும் நீங்கவில்லை. நினைத்து நினைத்து வட்டிக்கு வட்டி ஏறின கடன்போல் அது என்னைப் புண்படுத்துகிறது என்றான் கண்ணன்.

பாரதம் உத்தியோக பர்வம் 58 : 22

அருச்சுனன் என் கடமையை என்னால் செய்ய முடியவில்லை என்று சோகத்தில் ஆழ்ந்தபோது, "உன்னுடைய எல்லாப் பாரங்களையும் என் தலையில் போட்டு உன்னுடைய கடமையைச் செய். உன்னுடைய பகைக் கூட்டத்தை யெல்லாம் நான் போக்கித் தருகிறேன்" என்றான் அல்லவா பகவான். இப்படி பகவானே நிருபாதிகபந்து, அதாவது ஒரு காரணத்தைப் பற்றாமல் உதவும் பந்து. அவனையே பற்றப் பாருங்கோள்.

"கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறரும் கண்டதோடு பட்டது அல்லால் காதல் மற்று யாதும் இல்லை. எண் திசையும் கீழும் மேலும் முற்றவும் உண்ட பிரான் தொண்டரோமாய் உய்யல் அல்லால் இல்லை கண்டீர் துணையே" என்று ஆரம்பித்து அவனே துணை, அவனே சரண் அவனுக்கு அடிமையாவதே பொருள், அதுவே அரண், அதுவே சாமர்த்தியம், இன்பம், குணம், எல்லாம் மற்று ஏதுமல்ல என்று பத்துப் பாசுரங்கள் பாடுகிறார் ஆழ்வார்.

ஸ்ரீ காஞ்சி கைலாசநாதர் ஆலயம்

சிவராத்திரி வைபவம்

சுமார் ஆயிரத்து இருநூறு வருடங்களுக்கு முன் ஒரு தமிழரசன் மனத்தினில் பக்தியும் கலையுணர்ச்சியும் கலந்து அளித்த கனவு ஒன்று. அது சிற்பியின் உளியின் மூலமாக ஓர் உன்னத ஆலயமாக அமைந்து இன்றும் நமக்குக் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தாக அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு வருஷமும் சிவராத்திரி அன்று இரவு காஞ்சிபுரத்தின் தென்மேற்கு எல்லையில் உலகத்தின் வர்ண ஜாலங்கள் எதுவும் புலப்படாத அந்த நேரத்தில், ஒளித்தேர் ஒன்று அஞ்ஞான இருளில் எழுந்த உண்மையின் திருக்கோலம் போலப் பளிச்சென உயர்ந்து நின்று கம்பீரமாகக் காட்சியளிக்கும்.

லட்ச தீப அலங்காரத்துடன் கூடிய காஞ்சி கைலாசநாதரின் ஆலயத்தைத்தான் சொல்கிறோம்.


எள் போட்டால் எள் விழாத கூட்டத்தைக் கடந்து உட்புறம் சென்று ஆண்டவனின் சன்னிதியில் நின்றால் அப்போது கிடைக்கும் ஆனந்தத்தின் அளவைச் சொல்வது அரிது. அங்கு, மந்திர கோஷத்தினிடையே, பக்தர்களின் ஆராதனை ஒலிக்கு மத்தியிலே வீற்றுப் பன்முறுவல் பூக்கும் ஸ்ரீ கைலாசநாதரின் சிவலிங்கத் தோற்றம் நம் உள்ளத்திலும் புகுந்து நிறைந்துவிடும். பதினாறு முகங்களும் கற்பூர ஆரத்தியில் பளபளக்கும்போது சிவபிரான் தன் கருணைக் கடாக்ஷத்தை எல்லாத் திக்குகளிலும் வீசி அருள்புரிவது போல் தோன்றும்.

ராஜசிம்ம பல்லவனும், பிறகு மூன்றும் மகேந்திர வர்மனும் சமைத்த இந்தப் புராதனக் கோயில் இன்றும் காண்போரைக் கவர்கின்றது. பல ஆண்டுகளின் காற்றும் மழையும் கற்களின் மீது தம்முடைய ஆதிக்கத்தைச் செலுத்தியிருந்தாலும் கலை உருவங்களின் அழகைத் தாக்க முடியவில்லை. பெரியோர்கள் பலர் செய்த பூஜையும் பக்தர்களின் தோத்திரங்களின் புனித ஒலியும் கூடி ஏற்படுத்திய விந்தைதான் அது. தெய்வ சாந்நித்தியம் ஒன்றே இவ்வரிய கலைப்பேழையைக் காப்பாற்றி வருகிறது.

இத்தகைய மேலான செல்வம் என்றும் நிலையாக நிற்கப் பக்தர்கள் உதவ வேண்டும். ஆண்டுதோறும் மகா சிவராத்திரியை முன்விட்டு நான்கு நாட்கள் தொடர்ந்து லட்சார்ச்சனை சிறப்பாக நடக்கிறது. லட்ச தீப வைபவமும் மிகச் சிறப்பு வாய்ந்தது. இக் கைங்கர்யத்துக்கு அளிக்கும் நன்கொடை ஆண்டவனுக்குச் செலுத்தும் அஞ்சலி மட்டுமல்ல, கலை உலகுக்குக் காப்புமாகும்.

அன்பர்கள் யாவரும் தத்தமக்கு இயன்ற அளவுக்கு நிதி தந்து ஐயனின் புற ஒளித் தோற்ற அமைப்புக்கும், அடியார்களின் உள்ளொளிப் பெருக்குக்கும் உதவ வேண்டும்.


ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி 10-2-1961 முதல் 13-2-1961 வரை கைலாசநாதர் ஆலயத்தில் லட்சார்ச்சனை நடக்கிறது. சகஸ்ரநாம அர்ச்சனைக்கு ரூபாய் ஐந்து வீதம் மானேஜிங் டிரஸ்டி, கைலாசநாதர் தேவஸ்தானம், காஞ்சிபுரம் என்ற விலாசத்துக்குப் பக்தர்கள் அனுப்பி பகவத் பிரசாதத்துக்குப் பாத்திரமாகலாம்.













ஸ்வராஜ்யா பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ காசா சுப்பாராவ் அவர்கள் சமீபத்தில் நோய்வாய்ப்பட்டிருந்து உடல்நலம் பெற்றதற்குப் பாராட்டவும் அவரது 65வது பிறந்ததினத்தைக்கொண்டாடவும் சென்ற 28-1-61ல் கல்கிப் பூங்காவில் தேனீர் விருந்து நடந்தது. அச்சமயம் 'ஸ்வராஜ்யா'வில் 'ஸைட்லைட்ஸ்' என்ற பகுதியில் ராஜாஜி அவர்களைப் பற்றி ஸ்ரீ காஸா எழுதியுள்ளவற்றை வியாசா பப்ளிகேஷன்ஸ் தொகுத்து புத்தகமாக வெளியிட்டது. 1. ஸ்ரீ காஸா. 2. ராஜாஜியும் ஸ்ரீ ரங்கநாதனும் காசாவும். 3. ஸ்ரீ ரகுநாதய்யர் காஸாவுக்கு மாலையிடுகிறார். 4. ராஜாஜிக்கு மாலையிட்டு மகிழ்கிறார் காஸா. பின்னால் நிற்பவர், புத்தகத்தை வெளியிட்ட ஸ்ரீ காளிதாஸ். 5. அமெரிக்க ஸ்தானிகர் ஸ்ரீ ஸைமன்ஸ், ஸ்ரீ சதாசிவம் ஆகியோருடன் ஸ்ரீ காஸா. 6. காஸா உடல்நலம் பெறச்செய்வனே மருத்துவப்பணிபுரிந்த டாக்டர் சத்தியநாராயணு. 7. ஸ்ரீ ரகுநாதய்யர் காஸாவுக்குப் பல்லாண்டுகூறுகிறார். 8. ராஜாஜியின் ஆனந்தம். 9. ஸ்ரீ ஸைமன்ஸ் உரை. 10. ஸ்ரீ க. சந்தானமும் ஸ்ரீ சஞ்சீவிராவும். 11. குதூகல வைபவத்தில் குழந்தைகள்.











அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்

சோமு

11. ஒரு தமிழரின் கல்லறை!

பெப்ருவரி மாதத்தின் இரண்டாவது வாரத்திலே போப் அறிஞரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துவதில் ஒரு பொருத்தம் இருக்கிறது. ஏனென்றால் அந்த அறிஞர் இவ்வுலகினின்றும் மறைந்த தினம் பெப்ருவரி பதினோராந் தேதி!

திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததோடு பேருலகு மக்களுக்குத் தமிழ் இலக்கியத்தின் சிறப்புகளை யெல்லாம் அளவற்ற பக்தியோடு எடுத்துச் சொன்னவரும், தம்மை ஒரு தமிழன் என்று அழைத்துக் கொள்வதிலே பெருமை யடைந்தவருமான ஆங்கிலப் பெருமகனார் ரெவெரெண்ட் ஜி. யூ. போப், 1908-ம் ஆண்டில் பெப்ருவரி பதினோராந் தேதி ஆக்ஸ்போர்ட் நகரத்தில் மரணமடைந்தார். அவருடைய கல்லறையிலே அவரைத் "தென் இந்தியாவின் போப்" என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள்! இந்தக் கல்லறையைத் தேடித்தான் ஆக்ஸ்போர்டில் நான் பல இடங்களில் சுற்றியலைந்தேன்.

லண்டன் நகரத்தில் எனக்குத் தெரிந்த நண்பர்களிடமெல்லாம் விசாரித்துங்கூடப் போப் அறிஞரின் கல்லறை ஆக்ஸ்போர்டில் எங்கேயிருக்கிறது என்று யாராலும் சொல்ல முடியவில்லை. இது எனக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது! ஆங்கில இலக்கிய ஆசிரியர்களின் திருநாமங்களை நினைவு நிலையங்களிலே அத்தனை கண்காணிப்போடு பாதுகாத்து வருகிற பிரிட்டிஷ் வட்டாரத்தில், வாழ்வு முழுதும் தமிழுக்காக உழைத்த ஓர் ஆங்கிலேயரைப் பற்றிச் சரியான குறிப்பு கிடைக்காமற் போனது. ஏமாற்றத்தோடு துயரத்தையுமே தந்தது! என்றாலும் ஆக்ஸ்போர்ட் சென்று எப்படியும் விசாரித்துக் கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கை என் மனத்தில் பூரணமாக இருந்தது. ஏனென்றால் இந்த ஆங்கிலேய அறிஞர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் தமிழ் தெலுங்கு ஆகிய மொழிகளின் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1888-ம் ஆண்டில் ஆக்ஸ்போர்ட்டிலுள்ள பாலியல் (Balliol college) கல்லூரியின் மத குருவாக நியமனம் பெற்றுப் பல்லாண்டுகள் தமிழ் மொழிக்கு அருந்தொண்டுகள் புரிந்தவர். 1906-ம் ஆண்டில் 'ராயல் ஏஷியாடிக் சொஸைட்டி' இவருடைய தென்னிந்திய மொழி ஆராய்ச்சியை வியந்து தங்கப் பதக்கமும் பரிசளித்துப் பாராட்டியது. எனவே, ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் மிக எளிதில் தகவல் கிடைக்கும் என்று நம்பினேன். அதனால்தான் 'க்ரைஸ்ட் சர்ச்' பூங்காவில் அதிக நேரம் செலவழித்துவிடாமல் அங்கிருந்து அவசரமாகக் கிளம்பினேன்.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்துக்குள்ளே சென்று நமது நாட்டு மொழிகளின் தலைவராக உள்ள பேராசிரியரைத் தொலைபேசி மூலம் கூப்பிட்டு விசாரித்தார் என் நண்பர். இவர் டெலிபோன் செய்த வேளையின் பிசகோ அல்லது தமிழ் செய்த 'கண்ணாம்பூச்சி' விளையாட்டோ, அந்தப் பேராசிரியருக்குமே தகவல் தெரியவில்லை!

"உங்களுக்கு நன்றாகத் தெரியுமா? போப்பின் கல்லறை ஆக்ஸ்போர்டிலேதான் இருக்கிறதா? இருக்குமானால் இவருக்குத் தெரியாமல் இராதே!" என்றெல்லாம் என்னுடைய நண்பர் எனக்குக் குறுக்குக் கேள்விகள் போட்டார். பதில் பேசாமல் "லண்டனுக்குத் திரும்புவோம்!" என்றேன் பெருத்த ஏமாற்றத்தோடு.

தமிழ் நாட்டுக்குத் திரும்பிவந்த பிறகு, "ஆக்ஸ்போர்ட் சென்றேன். ஆனால் போப்பின் கல்லறையைக் காணவில்லை" என்று தமிழன்பர்களிடம் எந்த முகத்தோடு சொல்லுவேன் என்று மெய்யாகவே வருந்தினேன்.

லண்டனுக்குத் திரும்பியதும் முதலாவது வேலையாகப் பி. பி. ஸி.யின் நூல் நிலையத்திலேயுள்ள மொழி வரலாற்றுப் புத்தகங்களைப் புரட்டினேன். போப் அறிஞரின் திருக்குறள் மொழிபெயர்ப்பு அங்கே யிருந்தது. சில வரலாற்றுக் குறிப்புக்களும் அகப்பட்டன. என்றாலும் ஏற்கனவே நம்முடைய நாட்டில் படித்துள்ள செய்திகளுக்குமேல் போப்பைப் பற்றிப் புதிதாக ஒன்றும் அகப்படவில்லை. ஆனால் போப்பின் கல்லறை ஆக்ஸ்போர்டிலேதான் இருக்கிறது என்ற மகத்தான உண்மைமட்டும் மீண்டும் அந்தப் புத்தகங்களிலே உறுதியாயிற்று.

சில வாரங்கள் கழித்து எனது ஸ்காட்லாந்து யாத்திரையின்போது "யார்க்" என்ற

நகரத்திலேயுள்ள மிகப் பெரிய நகராண்மை நூல் நிலையத்துக்கு நான் சென்ற சமயம் மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தினேன். நூல் நிலையத்தின் அதிபர் மிகவும் ஒத்தாசை செய்தார். பிரிட்டிஷ் "ஹூ இஸ் ஹூ" என்ற ஒரு வரலாற்று நூலில் ஆங்கிலேயர்களிலே பெருஞ் சாதனைகள் புரிந்துள்ள பிரமுகர்களின் வரலாற்றுக் குறிப்புகளை அச்சிட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்புகளைப் படித்துப் பார்த்ததில், போப் அறிஞரின் சமாதி ஆக்ஸ்போர்டில் "செயின்ட் செபல்கர் செமெட்டரி" என்ற கல்லறைக் கூடத்தில் இருக்கிறது என்று தெரிய வந்தது. இந்தக் கல்லறைக் கூடம் 'வால்ட்டன் தெரு' என்ற ஒரு பழைய வீதியில் இருப்பதாகவும் தெரிந்து கொண்டேன்.

ஸ்காட்லாந்திலிருந்து லண்டன் திரும்பும் பாதையில் ஆக்ஸ்போர்ட் வழியாகவே வந்தேன். ஆனால் ஆக்ஸ்போர்ட் எல்லைக்குள் வந்தபோது எங்கள் மோட்டார் வண்டி ஒரு விபத்துக்குள்ளே சிக்கியதும், தெய்விகமாக நாங்கள் தப்பித்து லண்டன் போய்ச் சேர்ந்ததும் ஒரு தனி அத்தியாயம்!

"முக்காலும் மூன்று முறை" என்று நம்முடைய நாட்டில் ஒரு பழமொழி உண்டல்லவா! அப்படி மூன்றும் முறையாக ஆக்ஸ்போர்ட் சென்றபோதுதான் கொலம்பஸும், வாஸ்கோடகாமாவும் போல் நானும் என்னோடு வந்த கோபாலகிருஷ்ணன் என்ற நண்பரும் வெற்றிக்கொடி நாட்டினோம்.

ஆம்; மூன்றும் முறை சென்றபோது, என் கையில் எல்லாத் தகவல்களும் இருந்தன. துணைக்கும் ஒரு தமிழ் இளைஞர் வந்து சேர்ந்தார். கோபாலகிருஷ்ணன் என்று பெயர். மதுரைத் தியாகராயர் கல்லூரித் தலைவர் வரதாச்சாரி யவர்களின் புதல்வர். க்ளாஸ்கோவில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்திலே மேற்படிப்புக்காகச் சென்றிருக்கிறார். இவர் திடீரென்று ஒரு நாள் லண்டனுக்கு வந்து சேர்ந்தார். அன்று விடுமுறை நாளாக இருந்ததால், இரண்டு பேருமாக ஆக்ஸ்போர்ட் புறப்பட்டோம்.

நாங்கள் ஆக்ஸ்போர்ட் போய்ச் சேரும் போது மத்தியானம் பன்னிரண்டு மணி. வால்ட்டன் தெருவை விசாரித்துக்கொண்டு சென்றோம். "செயின்ட் செபல்கர் செமெட்டரி"க்குப் போனால், அங்கே வாசல் அடைத்து இரண்டு கதவுகளும் பூட்டிக் கிடந்தன!! பெருத்த ஏமாற்றமாகப் போய் விடவே, எதிர் வரிசையிலே இருந்த ஒரு சிகரெட் கடைக்குப் போய்த் தகவல் கேட்டோம். அங்கே ஒரு கிழவி அம்மாள் உட்கார்ந்து வியாபாரம் செய்துகொண்டிருந்தாள். எங்களை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்தாள்! எங்கள் முகத்திலே விருந்த கவலைக் குறியைக் கண்டு மிகவும் பரிவோடு சொன்னாள். "நண்பரே! உங்களுக்காக மிகவும் அனுதாபப்படுகிறேன். இப்பொழுது இந்தக் கல்லறைக் கூடத்தைப் பூட்டி விட்டார்கள். இங்கே நாலாயிரம் கல்லறைகள் இருக்கின்றன. பன்னிரண்டாயிரம் பேர்களை அடக்கம் செய்திருக்கிறார்கள். இனிமேல் நிச்சயம் இடம் கிடையாது என்று இந்தக் கூடத்தையே அடைத்து விட்டார்கள்!"



பாதிரியாராக விளங்கியதால் "போப்பையர்" என்று இனிய முறையிலே அழைக்கப்பட்ட தமிழ் அறிஞர் ரெவரெண்ட் ஜி. யூ. போப்

இவ்வாறு அந்த அம்மாள் சொன்னதும் என்னுடைய கவலை எப்படி விருந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளுங்கள்!

"நண்பரே! உங்களுடைய முன்னோர் ஒருவர் இங்கே அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்பது உங்கள் கவலையிலிருந்து எனக்குப் புரிகிறது. நீங்கள் ஒன்று செய்து பாருங்கள்! கல்லறைகளின் பாதுகாவலர் முகப்பிலேயே குடியிருக்கிறார். போய் உங்கள் மூதாதையரின் சமாதிக்கு அஞ்சலி செலுத்த வந்திருப்பதாகச் சொல்லிப் பாருங்கள்!" என்று கூறினார் அந்தக் கிழவி அம்மாள்.

"கட்டாயம் சொல்கிறேன். இங்கேயுள்ள கல்லறையில் அமர நித்திரை செய்கிறவர் என்னுடைய மூதாதையர்தான்! என்னுடைய மூதாதையர் மட்டுமில்லை. தமிழன் ஒவ்வொருவனுக்கும், தென்னிந்தியன் ஒவ்வொருவனுக்குமே மூதாதையர் அவர். கட்டாயம் காவலாளியிடம் சொல்லுகிறேன்!" என்று கூறிவிட்டுக் காவலாளியைப் போய்ப் பார்த்து, அவருடைய அனுமதியோடு உள்ளே சென்றோம்!

நாலாயிரம் கல்லறைகளில் போப்பின் கல்லறை எது என்று கண்டுபிடிப்பது எளிய காரியமா? மூடப்பட்ட கல்லறைக் கூட

மானதால் பதிவுப் புத்தகமும் கல்லறைகளின் விவரப் பட்டியலும் அங்கேயில்லை! நானும் கோபாலகிருஷ்ணனும் போப்பின் பெயர் தென்படுகிறதா என்று ஆளுக்கொரு மூலையிலே தேடினோம். அகப்படவில்லை!

மீண்டும் காவலாளியிடம் வந்து சொன்னோம். "இங்கே நாங்கள் தேடுகிற கல்லறை ஒரு தமிழ் ஆசிரியரின் கல்லறை. பாலியல் கல்லூரியிலே பணியாற்றியவர் அவர்! நீங்கள் அதைக் கண்டுபிடித்துக் கொடுத்து விட்டால் எங்கள் ஆனந்தத்தை எப்படி வெளியிடுவோமோ, தெரியாது!" என்றெல்லாம் கூறினேன். உடனே காவலாளியும் எங்களோடு வந்து தேடினார்.

எங்களுடைய திண்டாட்டத்தைப் பார்த்துப் போப் அறிஞரின் ஆத்மாவுக்கே இரக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் எங்கோ ஒரு புதருக்குள்ளே இருந்து காவலாளி கூப்பாடு போட்டார் "பீஓபீஇ" (POPE) என்று! ஓடிப்போய்ப் பார்த்தோம்! வாசலின் முகப்பிலேயே வலது புறத்திலே வளர்ந்து நின்ற ஒரு 'யூ' (YEW) மரத்தின் அடியில், செடியும் கொடியுமாகப் பின்னிப் படர்ந்து மறைத்துக் கொண்டிருந்த ஒரு பெரிய புதரின் கீழ், சலவைக் கல்லினால் ஆன கல்லறை இருந்தது. காவலாளி எங்களுக்காக அந்தப் புதரைச் சற்றுக் களைந்ததும், எழுத்துக்கள் மங்கலாகத் தெரிய ஆரம்பித்தன.

கோபாலகிருஷ்ணன் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்தார். கைக்குட்டைகளை அதில் நனைத்துக் கல்லறையிலே தேய்த்தோம். கீழ் கண்ட வாக்கியங்கள் கல்லறையின் மேலே மிக நன்றாகத் தெரிந்தன:

"George Uglow Pope D.D. of South India; sometime lecturer in Tamil and Telugu in the University and Chaplain of Balliol College, Oxford. Born 24th April 1820. Died 11th February 1908. This stone has been placed here by his family and by his Tamil friends in South India in loving admiration of his life long labours in the cause of Oriental literature and philosophy."

இந்த வார்த்தைகளைப் படித்ததும் எனக்கு உடம்பு புல்லரித்தது! இந்தக் கல்லை இங்கே நிறுவியது போப்பின் குடும்பத்தார் மட்டுமில்லை. **தென்னிந்தியாவிலுள்ள அவருடைய தமிழ் நண்பர்கள்** என்று எழுதியிருந்ததைத் திரும்பத் திரும்பப் படித்தேன். அவரை ஒரு தென்னிந்தியர் (of South India) என்றே அந்தக் கல்லறையில் குறிப்பிட்டிருப்பதும், இந்தக் கல்லறையைக் கட்டுவதிலே தமிழ் மக்களுடைய நன்கொடையும் சேர்ந்திருக்கிறது என்பதும் தமிழ் வரலாற்றில் மணி மணியாகச் செதுக்கி நிறுத்தவேண்டிய எழுத்துக்கள் அல்லவா? அந்த எழுத்துக்களின் மேலேதான் இப்பொழுது காட்டுக்கொடி படர்ந்திருக்கிறது!

போப்பின் கல்லறைக்குப் பக்கத்திலே அவருடைய மனைவியின் கல்லறையும் இருக்கிறது. இந்த இரண்டு கல்லறைகளையும் நானும் கோபாலகிருஷ்ணனும் தமிழ்மக்களின் சார்பிலே தமிழ் முறைப்படி சுற்றி வந்து வணக்கம் செலுத்தினோம். இதைப் பார்த்த

தும் காவலாளிக்கும் ஒரு புதிய பக்தி உண்டாகி விட்டது. அவரும் இறிஸ்துவ முறையிலே கல்லறைக்கு மரியாதை செலுத்தினார்!

"என் அப்பனே! இனிமேல் நீ இந்தக் கல்லறையிலே கொடி படரும்படி விடாதே. இது எங்கள் முன்னோர் ஒருவருடைய சமாதி. இவருடைய பரம்பரையிலே வந்த மக்கள் ஆயிரம் ஆயிரமாகத் தென் இந்தியாவிலே வாழ்கிறார்கள்! இனிமேல் யாராவது இந்தப் பக்கமாக வந்தால், இந்தக் கல்லறையைக் கண்டுபிடிப்பதற்காக நாங்கள் பட்ட கஷ்டம் எல்லாம் அவர்களுக்கும் ஏற்படக்கூடாது. அவ்வப்போது எண்ணெய் தடவி இந்த எழுத்துக்களைப் பளபளப்பாக வைத்துக்கொள். உனக்குப் புண்ணியம் உண்டு. எங்கள் நாட்டு மக்கள் உனக்கு நன்றி செலுத்துவார்கள்!" என்று சொல்லி எங்கள் அன்பையும் காவலாளிக்கு வழங்கினோம்.

"நீங்கள் சொன்னபடியே செய்கிறேன். என்றாலும் இதைப் பூட்டி வைத்துவிட்டதால் இனிமேல் இங்கே எனக்கு வேலையில்லை யென்று வேறு இடத்துக்கு என்னை மாற்றி விடுவார்கள். ஆனபோதிலும், நீங்கள் சொன்னதை ஞாபகம் வைத்துக் கொள்கிறேன். இந்தப் பக்கமாக உங்கள் நாட்டிலிருந்து யார் வந்தாலும் என்னைப் பார்க்கச் சொல்லுங்கள். என்பெயர் வெஸ்ட்வுட். (Westwood) மறந்துவிடாமல் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்!" என்றார் காவலாளி.

போப்பின் பெயரை நினைவுப் புதரிலே வைத்துக் கொண்டிருக்கிற தமிழ்ப் பரம்பரை தனது பெயரை மறந்து விடாது என்று நம்பிய அந்தக் காவலாளிக்கு ஏமாற்றம் கொடுக்க நான் விரும்பவில்லை. என்னுடைய குறிப்புப் புத்தகத்தில் அவருடைய பெயரையும் எழுதிக் கொண்டு விடைபெற்றேன்.


இந்திய நாட்டின் கலைகளும் சரித்திரச் செல்வங்களும் (போப்பின் படம் உள்பட) கலைச்சான்றுகளும் நிரம்பியுள்ள 'இந்தியக் கல்வி நிலையம்' என்ற ஆக்ஸ்போர்ட் ஆராய்ச்சிக் கழகத்தின் முகப்பிலே ஒரு ஸம்ஸ்கிருதக் குறிப்பு இருக்கிறது. அதில் அந்தக் கல்வி நிலயத்தின் நோக்கம் என்ன வென்பதைப் பொறித்திருக்கிறார்கள். "இந்தியக் கலைகளும் இந்தியப் பண்பாட்டின் சிறப்பினும் மேனாட்டார்களுக்கு ஆர்வம் ஏற்படும்படி செய்வதோடு, இந்தியர்களுமே இந்தியாவின் பெருமையை நன்றாக உணரும்படி செய்ய வேண்டும் என்பதே இந்தக் கல்விக் கழகத்தின் நோக்கம்!" என்று எழுதியிருக்கிறார்கள். அத்தகைய நோக்கம் நிறைவேறுவதற்கு முதலாவது திருப்பணியாகப் போப்பின் கல்லறை ஓர் இலக்கியக் கோவிலாக விளங்க வேண்டும் என்று எண்ணி லண்டன் திரும்பினேன்.

தமிழ் அறிஞரின் கல்லறையை ஆக்ஸ்போர்டிலே கண்டு திரும்பிய எனக்கு இன்னொரு இனிய அதிசயம் காத்திருந்தது. லண்டன் காட்சிசாலையிலே! அங்கே தமிழ் நாட்டுக் கலைஞர்களின் கைவண்ணமான ஓவியங்களுக்கு மத்தியிலே மதுரையிலிருந்து சென்ற, அழகழகான செந்தமிழ் எழுத்துக் கலையுமே கண்டேன்!

(தொடரும்)

என் திருமண விஷயத்தில், நான் ஏமாளியாகி விட்டேன் என்று என் நண்பர்கள் இன்றைக்கும் என்னைக் கேலி செய்து கொண்டிருக்கிறார்கள். பண வசதியும், அந்தஸ்தும் உள்ள ஒரு வாலிபன் அழகில்லாத, அந்தஸ்தில்லாத, ஒரு பெண்ணையா மணப்பது? நான் அப்படிப்பட்ட ஒருத்தியின் கழுத்தில் தாலியைப் போட்டதுதான் என் நண்பர்களின் கேலிக்குக் காரணமாக அமைந்துவிட்டது.

என் பெயர் சங்கரன். வயது இருபத்தைந்து ஆகிறது. பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன் என்றாலும், படித்தவன். சென்னையில் ஒரு பெரிய கம்பெனியில் நல்ல உத்தியோகத்தில் இருந்தேன். வாழ்க்கைக்குத் தேவையான சகல வசதிகளும் எனக்கிருந்தன.



சுமதியைப் பார்த்தால், யாரும், இரண்டாம் முறை பார்க்க மாட்டார்கள். அதாவது அவள் பிரமாதமான அழகி அல்ல என்று சொல்ல வருகிறேன். பண வசதியைத் தொடர்ந்த பல வசதிகளில் எதுவுமே சுமதியிடம் இருக்கவில்லை. அதிகம் என்று சொல்ல வேண்டுமானால், அவள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்ததைத்தான் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பெண்ணை நான் மணந்துகொண்டு விட்டதால்தான் நான் ஏமாளியாகி விட்டதாக என் நண்பர்கள் சொல்லுகிறார்கள்; கேலி செய்கிறார்கள். என் பெற்றோர்களும் அப்படித்தான் நினைத்தார்களோ என்னவோ, வெளியில் சொல்லவில்லை. மகனின் மனம் கோணாத படி நடந்துகொள்பவர்களாயிற்றே அவர்கள்! இவர்கள் என்ன நினைத்தாலும் சரி.... என் மனத்தில் இருந்ததையும் நான் சொல்ல வேண்டுமல்லவா?

எப்போதோ ஒரு தடவை—ஏதோ ஒரு நிதி வசூல் சம்பந்தமாக, என் காரியாலயத்துக்குப்பத்து, பன்னிரண்டு கல்லூரிமாணவிகள் படையெடுத்திருந்தார்கள். அவர்களில் இந்தச் சுமதியும் ஒருத்தி. ஒவ்வொருத்தியும் வந்து விஷயத்தை விட்டு, வேறு பல விஷயங்களைப்பற்றிச் 'சள, 'சள' வென்று பேசிக் கொண்டிருந்தார்கள். நான் எப்போதுமே பெண்களைக் கண்டுவிட்டால் உலகை மறந்து பேசிக் கொண்டிருக்கும் வாலிபர் கோஷ்டியைச் சேர்ந்தவன் அல்ல. அத்துடன் எனக்கு அன்று வேலையும் நிறைய இருந்தது. உடனே ஒதுங்கி ஒருபுறமாக நின்றிருந்த சுமதியை அருகிலழைத்து, "நீங்கள் எல்லோரும் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்பதை எங்களுக்குப் புரிய வைக்கும்முன், நீங்களாக ஏதோ பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள். விஷயத்தைச் சீக்கிரம் சொல்லிவிட்டு, இங்கிருந்து நகர்ந்தால், நாங்கள் எங்கள் வேலையைச் செய்ய ஏதுவாக இருக்கும்" என்றேன்.

என் குரல் கொஞ்சம் கடுமையாகப் பட்டிருக்க வேண்டும். அதனால்தானோ என்னவோ

நல்ல முடிவு

ரா. வேங்கடசாமி



பேச்சு நின்றது. சுமதி என்ற அந்தப் பெண் மட்டும் பேச ஆரம்பித்தாள். சுச்சிதமாக விஷயத்தைப் புரிய வைத்தாள். அவள் பேச்சுக்காகவே, அவர்களை வெறுங் கையுடன் அனுப்பாமல், நிதிக்கு என்னால்முடிந்த தொகையைக் கொடுத்து அனுப்பினேன். அவர்களை அனுப்பிய பிறகுதான், சுமதியிடம் மட்டும் ஏதோ கவர்ச்சியிருப்பதாக என் மனத்துக்குப் பட்டது. அன்று எனக்கு வேலை ஓடவில்லை!

இது ஆரம்பம்.....

என் உள்ளத்தில் போதுமான மாறுதலை உண்டாக்கி விடவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டவள் போல் சுமதி அடிக்கடி என் கண்களில் பட்டுக் கொண்டிருந்தாள். இரண்டொரு தடவை பேசவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அறிமுகம் கொஞ்சம் கொஞ்சமாக நட்பாக மாறிக் கொண்டு வந்தது. இவ்வளவுக்கும் பின்னும், சுமதியிடம் என்ன கவர்ச்சி யிருந்தது என்றுதான் என்னால் சொல்ல முடியவில்லை. எப்போதோ ஒரு தடவை எதிர் பாராத விதமாகச் சந்திப்பது என்ற முறைமாறி அடிக்கடி சுமதியைச் சந்திக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு—அது அன்றாடம் சந்திப்பதில் வந்து முடிந்து விட்டது.

வீண் புரளி—வெட்டிப் பேச்சு, இவைகளில் எங்களைப் பற்றிக் கதை பேசும் முன் நான் சுமதியிடம் என் உள்ளத்தைத் திறந்து காண்பித்தேன். என் எண்ணத்தை அறிந்தவுடன் அவள் வியப்பினால் அதிர்ந்துபோய்விடவில்லை.

"காதல்.....கல்யாணத்தில்தான் போய் முடியவேண்டும் என்ற எண்ணம்கொண்டவள் நான். நீங்கள் என்னை மனதாரக் காதலிப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனால் வசதி இல்லாத இடத்திலிருந்து வந்தவளான எனக்கு உங்கள் வீட்டில் மருமகள் ஸ்தானத்தைக் கொடுக்க உங்கள் பெற்றோர் விரும்புவார்களோ என்னவோ—மேலும் நானும் பிரமாதமான அழகியும் அல்ல—உங்கள் உள்ளத்தைப் போல் உங்கள்பெற்றோர் உள்ளமும் இருக்குமென்பது என்ன நிச்சயம்? இதையெல்லாம் நான் நன்கு தெரிந்து கொண்டபின்தானே, உங்களைக் காதலித்துப் பயன் அடைய வேண்டும்?"

சுமதிக்குத் திருப்தி ஏற்படும் வகையில் நான் பதில் சொல்வதில் முனைந்தேன்.

"என் காதலைத் திருமணத்தில் முடிக்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன்—என் பெற்றோர்கள், என் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்க மாட்டார்கள். நீ அதை நம்பவில்லையென்றால், அவர்கள் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு வந்து, உன் விருப்பத்தை அறிகிறேன்—'முடியாது' என்று சொல்லி விட மாட்டாயே?"

"அதை நான் இப்போதும் சொல்லவில்லை. உங்கள் பெற்றோர், உங்களுடைய பிடிவாதத்

செக்ரடேரியேட்டில் சராசரி மூன்று கிளார்க்குகளுக்கு ஒரு சூப்பிரண்டு வீதம் இருப்பதாகக் கேள்விப்பட்டு நான் ஆச்சரியம் அடைந்தேன். இவ்வளவு நாட்களாக இந்த முக்கிய விஷயம் எனக்குத் தெரியாதிருந்தது. மூன்று பேரை வழி நடத்த ஒருவர் வேண்டுமா? கல்வி விதிகளின்படி முப்பது மாணவர்களைக் கவனிக்க ஒரு உபாத்தியாயர் போதும். பாமர மனிதன் என்ன நினைப்பான்? பள்ளிக்கூட மாணவனைவிட ஒவ்வொரு கிளார்க்கும் பத்து மடங்கு விஷமம் பண்ணுகிறார் அல்லது பள்ளிச் சிறுவனைவிடப் பத்து மடங்கு மந்தம் என்றுதான் நினைப்பான்.

—ராஜாஜி

துக்குப் பயந்து கல்யாணத்துக்கு ஒப்புக்கொள்வார்கள். அது நடக்கக் கூடியது. ஆனால் நாளடைவில் நீங்கள், 'இப்படிப்பட்ட அழகில்லாத பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டோமே' என்று வருத்தப்படக் கூடிய சந்தர்ப்பம் வந்தால்... அப்போது நம் வாழ்க்கை நரகமாகி விடும் அல்லவா?"

"கமலி! இன்னமும் நீ என்னைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறாய். நீ அழகில்லாதவள் என்றாலும், என் கண்களுக்கு என்றென்றைக்கும் அழகியாகத்தான் இருப்பாய். உன்னைத்தான் என் மனம் காதலிக்கிறது. நம் எதிர்கால வாழ்க்கை இன்பமாகவே இருக்கும். உன் பயத்துக்கு ஆதாரமே இருக்காது. என்னை மணந்துகொள்ள உனக்கு விருப்பந்தானே?"

"ஆமாம்!" என்று கமலி தலை குனிந்தவாறு பதில் சொன்னாள்.

"அப்படி யென்றால் நீயும் என்னைக் காதலிக்கிறாய் என்று அர்த்தம்...இல்லையா?"

"கொஞ்சம் பொறுங்கள். ஒரு நிபந்தனை. நீங்கள் என்ன சொன்னாலும், நான் என் எதிர்காலத்தின் இன்ப மயமான வாழ்க்கைக்காக மிகவும் முன் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டியிருக்கிறது. ஆண்களின் மனம், நிமிஷத்துக்கு நிமிஷம் மாறும் தன்மை படைத்தது என்று நான் படித்திருக்கிறேன்; கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு வேளை உங்கள் மனம் உறுதி வாய்ந்ததாக இருக்கலாம். அதைத் தெரிந்துகொள்ள எனக்கு ஒரு வாய்ப்புத் தர வேண்டும்."

கமலி நிறுத்தினாள்.

"இதிகாச காலத்தைப் போல் நீ என்னைச் சோதனை செய்ய விரும்பினாலும் நான் தயார். நிச்சயம் அதில் வெற்றி பெற்று விடுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்றேன்.

உடனே கமலி சிரித்து விட்டாள். அழகில்லாத முகத்தில் பூத்த சிரிப்புத்தான் என்றாலும், என்னை அது சொக்க வைத்துவிட்டது.

"அப்படி ஒன்றுமில்லை. நாளையிலிருந்து எனக்கு விடுமுறை ஆரம்பமாகிறதல்லவா? சரியாக ஒரு மாதம், நான் உங்களுடன் வந்து தங்கப் போகிறேன். பயப்படாதீர்கள், பகல் நேரத்தில்தான்! வீட்டு நிர்வாகம், சமையல் இதர எல்லா வீட்டு விவகாரங்களும் என்னுடையது. இந்த ஒரு மாதத்தில் உங்களுக்கும் எனக்கும் பொருத்தம் எப்படியிருக்கிறது என்று பார்ப்பது—ஒத்துப் போய் விட்டால், நாம் திருமணம் செய்து கொள்வோம்..... இல்லையென்றால் இருவரும் வேறு வழி பார்த்துக் கொள்ளுவோம். என்ன சொல்லுகிறீர்கள், புது மாதிரியாக இருக்கிறதா பரீட்சை? புது மாதிரியாக இருந்தாலும் நடக்கக் கூடாததல்லவே. ஆனால் இது உங்கள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் இருப்பது நல்லது" என்று கமலி கூறி முடித்தாள்.

என்னுடைய வியப்பு அடங்கச் சில நிமிடங்கள் ஆயின. "காதலுக்கு இப்படி ஒரு சோதனையா?"

"சோதனையாக நான் நினைக்கவில்லை! திருமணத்துக்குப் பிறகும் இந்தக் காதல் நிலைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் பாடுபடுகிறேன்!"

"பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?"

"மணந்து வாழ்க்கை நடத்தப் போவது அவர்களுக்காகவா? நமக்காகவா? எதிலும் எதிர்ப்பு இருந்தால்தான் ருசிக்கும்."

திருமண ஆசை நிறைவேற வேண்டுமென்றால் - கமலியின் போக்குப்படி விட்டுத்தானே ஆக வேண்டும்!

தினமும் கமலி காலையில் ஐந்து மணிக்கு ஹாஸ்டலிலிருந்து எழுந்து வந்துவிட வேண்டியது. இரவு ஒன்பது மணிக்கு என் வீட்டிலிருந்து ஹாஸ்டலுக்குப் போய்விட வேண்டியது என்று ஏற்பாடு. இடை நேரத்தில் என் வீட்டின் முழுப்பொறுப்பும் அவளுடையது.

மறுநாள் காலையில் ஆறுமணிக்குக் கையில் காப்பியுடன் என்னை எழுப்பினாள் கமலி. எட்ட இருந்து வேலைக்காரன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததை நான் பொருட்படுத்தவில்லை. படுக்கையை விட்டு நான் நகர்ந்தவுடன் படுக்கையை ஒழுங்காகச் சுருட்டி வைத்தாள் கமலி.

எல்லா இடங்களும் பளிச்சென்று இருந்ததைப் பார்த்துக்கொண்டே, குளிக்கும் அறைக்குள் போனேன். சுடுதண்ணீர் ஆவி பறந்து கொண்டிருந்தது. பத்திரிகையைப் பார்த்து விட்டுக் குளிக்கலாம் என்று திரும்பினேன்.

"குளித்து விட்டால் ஒரு வேலை முடிந்து விடும்—அதை முடித்துக் கொண்டு பிறகு பத்திரிகை படிக்கலாம்." கமலியின் குரலில் கொஞ்சம் கண்டிப்பு இருந்ததாக எனக்குத் தெரிந்தது. முதல் முறையாக நான் அடங்கிப் போனேன். வேலைக்காரன் சிரித்த சத்தம் என் காதில் விழுந்தது. எதிர்கால மனைவியாயிற்றே..... எல்லாவற்றையும் பழகிக் கொள்ள வேண்டுமல்லவா? சோம்பேறித்தனமில்லாமல் 'மட' 'மட'வென்று என் காலை வேலைகள் முடிந்தன. அருமையான காலைச் சிற்றுண்டி வயிற்றில் விழுந்ததும், எனக்குப் புதுத் தெம்பு வந்தது. வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டு எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டனவே!

நான் காரியாலயத்துக்குக் கிளம்பும்போது மட்டும் கமலி என் எதிரில் வந்தாள்.

"பையிலிருந்து முப்பது ரூபாய் எடுத்துக் கொண்டேன்... செலவுக்கு வேண்டும்" என்றான் அமைதியாக.

"மீதம் ஐந்து ரூபாய் தானே இருக்கும்.....எனக்குச் செலவுக்குப் போதாதே" என்றேன் அதிர்ச்சியுடன்.

"இரண்டு நாட்களில் சம்பளம் வந்து விடுகிறது...அதற்குள் செலவைக் கொஞ்சம் சுருக்கிக் கொண்டால் இருக்கிற பணமே போதுமானது" என்று கூறிவிட்டு அவள் உள்ளே போய் விட்டாள்.

எனக்கு, என் செலவைக் குறைத்தே பழக்கமில்லை. அதனால் கொஞ்சம் கோபம் வந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு காரியாலயத்துக்குப் புறப்பட்டேன்.

அன்று எனக்குக் காரியாலயத்தில் வேலையே ஓடவில்லை. பகல் ஒரு மணிக்கு என்னை யாரோ ஒரு பெண் போனில் கூப்பிடுவதாக 'போன்' ஊளர்க் வந்து கூறினான். அப்போதே பக்கத்தில் இருந்தவர்களது பார்வை வேறு மாதிரியாகத் திரும்பியதைக் கவனித்தேன்.

வீட்டுக்கு வந்ததும் "என் ஆபீஸுக்குப் போன் செய்யாதே" என்றேன் அவளிடம்.

"ஏன் கூடாது?" அவள் பார்வை கேட்டது இந்தக் கேள்வியை.

"என் நண்பர்கள் என்னைக் கேலி செய்வார்கள்!"

"நான் மணந்துகொள்ளப் போகும் பெண் அவள் என்று கூறி விடுங்கள்" என்று கடுகடுப்பாகப் பதில் வந்தது.

தொடர்ந்து அவளுடன் விவாதிக்க முடியவில்லை. பேசாமல் சாப்பிட்டு எழுந்தேன்.

சாப்பாடு மிகவும் நன்றாக இருந்தது. எங்களைக் கண்காணிப்பது போல் வேலைக்காரன் வளைய வந்து கொண்டிருந்ததால் கமலையை அளவோடு பாராட்டிவிட்டு நான் வேலைக்குப் புறப்பட்டு விட்டேன்.

இரவு நான் நேரங் கழித்து வீடு திரும்பிய போது எனக்காகக் கமலி காத்திருக்கவில்லை. கடிதம் மட்டும் இருந்தது.

'நேரம் கழித்து வீடு திரும்புவது அவ்வளவு நல்ல பழக்கமல்ல. வெளியில் போய்வர விரும்பிய நான் உங்கள் துணை இல்லாததால், ஹாஸ்டலுக்குத் திரும்பிப் போய் விட்டேன். இரவு நீங்கள் சாப்பாடுதான் சாப்பிடுவீர்கள் என்பதால், டிபன் செய்யாமல், சமைத்து வைத்திருக்கிறேன். சாப்பிட்டபின் வேலைக்காரனைப் பாத்திரங்களைக் கழுவி வைக்கச் சொல்லவும். காலையில் சந்திக்கிறேன். -கமலி'

எனக்குச் சிரிப்பு வந்தது. அதோடு புதுமுறையான இவ்வாழ்க்கை, அவள் சொன்னது போல் ஒரு மாதகாலம் வரையில் நீடிக்குமா என்ற சந்தேகமும் எழுந்தது.

முதல் நாளைப் போலவே, மற்ற நாட்களும் தொடர்ந்தன. வீட்டில் பல மாறுதல்கள். பல புதிய பொருள்கள் வாங்கப்பட்டன. வீட்டுக்கு வெள்ளை அடித்துப் பளிச்சென்றிருந்தது. அலங்காரம் அதிகமாக இல்லாவிட்டாலும், 'கவர்ச்சி' ஒவ்வொரு மூலையிலும் குடியிருந்தது. மூன்று வேளைக்கும் திருப்தியான ஆகாரம். வீட்டை நன்றாகக் கவனித்துக் கொள்ளத் தகுந்த பெண். இதனால் பத்துப் பதினைந்து தினங்கள் எனக்கு ஆனந்தமாகவே கழிந்தன. கமலியின் விருப்பப்படி அவளை மாலை வேளைகளில் வெளியிலும் அழைத்துக் கொண்டு போனேன். பொழுது இப்படியே கழியும் என்ற நினைப்பு எனக்கு. ஆனால்...!

காரியாலயத்தில் எனது நண்பர்கள், "யாரப்பா உன் வீட்டில் இருக்கும் பெண்?" என்று என்னிடம் கேட்கத் தொடங்கினார்கள். "மிஸ்டர் சங்கரன் பெரிய இடத்துப் பிள்ளை நீ...பெயரைக் கெடுத்துக் கொள்ளாதே. உன் பெயரோடு ஸ்தாபனத்தின் பெயரும் சேர்ந்து கெடுவதை நாங்கள் விரும்பமாட்டோம் என்று உனக்குத் தெரியுமல்லவா?" என்றார் என் மேலதிகாரி.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, என் தந்தையிடமிருந்தும் கடிதம் வந்திருந்தது. அவருக்கும் யாரோ தகவலைச் சொல்லி விட்டார்கள் போலிருக்கிறது.

"சங்கரனுக்கு, உன்னைப் பற்றிப் பல விஷயங்கள் கேள்விப்படுகிறேன். மிகவும் வேதனையாக இருக்கிறது. உடனே திருமணத்துக்குப் பெண் பார்க்கலாமா? பதில் எழுது — அப்பா"

இவ்வளவும் கமலிக்குத் தெரியும். அவள் வழக்கம் போல் தான் நடந்து கொண்டாள். கமலியின் கணக்குப்படி ஒரு மாதம் முடிய இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது.

என் கையிலோ பணமும் இல்லை. வீட்டுச் செலவுக்குப் பணமில்லை என்று கமலி அன்று என்னிடம் பேச்சை ஆரம்பித்தாள்.

"ஏதாவதொரு செலவை அடுத்த மாதம் குறைத்துக் கொள்ளலாம்—இல்லையென்றால் உங்களுக்குச் சம்பள உயர்வு தேவையென்று உங்கள் அதிகாரியிடம் இப்போதிருந்தே கேட்க ஆரம்பித்து விடுங்கள்!"

"ஏற்கனவே எனக்குச் சம்பளம் அதிகம்! கேட்டால் வேறு இடம் பார்த்துக் கொள் என்று கூறி விட்டால்..."

"அப்படியானால் உங்கள் செலவைக் குறையுங்கள். வேலைக்காரனை நிறுத்துங்கள்."

"உன் வழிக்கு என்னால் வர முடியாது. கமலி!...நீ வேண்டுமானால் நான் சொல்லுகிற படி நட" என்று ஆத்திரமாகக் கூச்சலிட்டு விட்டேன். பதில் பேசாமல் அவள் போய் விட்டாள். எங்கே போயிருப்பாள்? ஹாஸ்டலுக்குத்தான். இந்த நினைப்பில் நான் என் வேலைக்குப் போய் விட்டேன்.

செடிகள் வளர வெய்யில் வேண்டும். சமூகம் வளரச் சமுதாய விழாக்கள் வேண்டும். கொம்பு, கூத்து, கூட்டம் எல்லாம் வேண்டும். 'மத்தளம் — மேளம் இவையெல்லாம் மூட நம்பிக்கை, வீண் செலவு கடவுளைத் தியானிக்க இவையெல்லாம் என்னத்துக்கு?' என்று விழாக்களையும் உற்சவங்களையும், நோன்புகளையும் தள்ளி விட்டோமானால் சமுதாயச் செடி வாடிப்போகும்.

— ராஜாஜி

காரியாலயத்தில் வேலையே ஓடவில்லை. அவள் வாதங்களை யெல்லாம் மீண்டுமொரு முறை யோசித்துப் பார்த்தேன். வெற்றிகரமான வாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களைத்தானே அவள் சொல்லுகிறாள்? நிபந்தனைப் பிரகாரம் அவள் இனி என்னிடம் வராமல் போய்விட்டால்? எனக்கு மனத்தில் கலக்கம் ஆரம்பமாகி விட்டது....வீட்டுக்குப் போய் விடலாமா என்று நினைத்துக் கொண்டிருந்தபோது அதிகாரி என்னைக் கூப்பிட்டு அனுப்பினார்.

காரியாலய விஷயமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டே போனேன்.

''உட்கார், சங்கரன்! எப்போது எங்களுக்குக் கல்யாணச் சாப்பாடு போடப் போகிறாய்?'' என்று கேட்டார். எனக்கு அவர் பேசும் தோரணை வியப்பூட்டுவதாக இருந்தது.

''அந்தப் பெண் சுமதி இன்று காலையில் என் வீட்டுக்கு வந்திருந்தாள். பெண் மிகவும் நல்ல மாதிரியப்பா. நூற்றில் ஒருத்தி அப்படி இருப்பது துர்லபம்...சம்பள உயர்வு கேட்க மாட்டேன் என்று சொல்லி விட்டாயாமே... திருமணமானால் செலவு அதிகந்தானே ஆகும். புத்திசாலிப் பெண் மிகவும் சாமர்த்தியமாகப் பேசினாள். உனக்குச் சம்பள உயர்வு தருவதாக ஒப்புக் கொண்டேன். சீக்கிரம் அவளை மணந்து கொண்டு நிம்மதியாக இரு. அப்பா...'' என்றார் அதிகாரி.

அவர் சொல்வதையெல்லாம் கேட்கக் கேட்க எனக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. சுமதி என் நலனில் எவ்வளவு அக்கறை காட்டுகிறாள்? அவள் இல்லாமல் என் வாழ்வு செழிக்குமா என்ற சந்தேகம் வந்துவிட்டது எனக்கு—அவள் வீட்டில் இல்லாமல் இருந்தால், ஹாஸ்டலுக்குப் போய் அழைத்து வரவேண்டும் என்று முடிவு செய்து கொண்டு வீட்டுக்கு ஓடி வந்தேன்......வீடு வெறிச்சோடியிருந்தது. எதிர்பார்த்தது போல் சுமதி வீட்டில் இல்லை. வேலைக்காரன் அவள் கடிதத்தை என்னிடம் நீட்டினான்.

''அன்புள்ளவருக்கு—

உங்கள் வீட்டிலும் மனத்திலும் எனக்கு இடமில்லை என்று தெரிந்து கொண்ட பின்னர் நான் இங்கிருப்பது நல்லதல்ல. இனிமேல் உங்களை யாரும் பழித்தும் இழித்தும் பேச மாட்டார்கள்... நெஞ்சில் காதல் மட்டும் இருந்தால் போதாது... எதையும் தாங்கும் சக்தியும் வேண்டும். என் முயற்சி பயனளிக்கவில்லை என்பதை முன்கூட்டியே அறிந்து கொண்டதற்காகத் திருப்தியடைகிறேன்.

அன்புள்ள சுமதி''

இதுதான் அதிலிருந்த விஷயம்... நடக்காதது நடந்துவிட்டது போன்ற படபடப்பு என்னிடம்! ''அவசரப்பட்டு விட்டாயே, சுமதி... உன்னை என் வாழ்விலிருந்து யாராலும் பிரிக்க முடியாத நிலையை நீயே உண்டாக்கிக் கொண்டாய் என்று சொல்லத்தானே ஓடி வந்தேன்'' என்று உரக்கவே சொல்லிவிட்டேன், கடிதத்தைப் படித்து முடித்தவுடன்.

''அப்படியென்றால் நானும் போகவில்லை'' என்று கூறிக்கொண்டே பக்கத்து அறையிலிருந்து வெளியே வந்தாள் அந்தக் குறும்புக்காரப் பெண் சுமதி.

''திருமணம் நடந்த பிறகு இப்படி யெல்லாம் எதுவும் நடக்காதல்லவா... அதனால் தான் இந்த அதிர்ச்சி வைத்தியம்...'' என்று அவள் ஏதேதோ பேசிக்கொண்டே போனாள். காதலை அவள் உறுதிப்படுத்திக் கொண்டு விட்ட பெருமை அவள் குரலில்.... ஆனால் அதையெல்லாம் யார் கவனித்தார்கள்? நான்தான் என் தந்தைக்கு மிகவும் அவசரமாகக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேனே!

திருமணத்துக்குப் பிறகு எந்த விதமான சலனமும் எங்களை அசைக்கக் கூடாது என்பதற்காகச் சுமதி எடுத்துக் கொண்ட சோதனைகள் வெற்றிகரமாகப் பயனளித்து விட்டன அல்லவா? அதற்குப் பிறகுதான் நான் ஊரறியச் சுமதியை என் மனைவியாக்கிக் கொண்டேன்.

''ஒரு பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டானே'' என்று அங்கலாய்த்தனர் என் நண்பர்கள்.

''போயும் போயும்....இப்படிப்பட்ட பெண்ணை மனைவியாக்கிக் கொண்டிருக்கிறானே'' என்றுதான் இன்னமும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு பேசுபவர்களின் புத்திமதியைக் கேட்டால் நான் உருப்பட முடியுமா?

இந்நாளை அவள் எந்நாளும் நினைவுற்றிருக்க உஷா தையல் மிஷின்

அவள் கண்ட கனவெல்லாம் நினைவாகி, இன்பம் கரைபுரண்
டோடும் புதியதொரு வாழ்க்கையை மேற்கொள்ள
விருக்கும் இந் நன்னாளில் நீங்கள் அவளுக்கு
அளிக்கும் பரிசு அவளுக்கு மகிழ்ச்சி
யளித்து வாழ்நாள் முழுதும் பயன்படக்
கூடியதாக இருக்கட்டும்.
உஷா தையல் மிஷினை அன்பளிப்பாக
கொடுங்கள்—உகந்த பரிசளிப்பு
அதுவே.



உஷா

தையல் மிஷின்

அவளுக்கேற்ற அன்பளிப்பு

ஜே எஞ்சினீரிங் ஒர்க்ஸ் லிட்., கல்கத்தா-31


சுகமான, சோகுசான
ஒரு உணர்வு...
மபத்லால் பாப்ளின்கள்
ALMIGHTY
अपराजित
NINE GUINEA
திமபத்லால் பைன்
ஸ்பின்னிங் அண்ட் மான்யுபாக்சரிங் கோ, லிட். நவசாரி.
MF-42

வட்டமேஜை



விடுமுறை வேண்டுமா?

வேண்டாத விஷயங்களில் எல்லாம் சர்க்கார் தலையிட்டுக் குழப்பத்தை உண்டு பண்ணியதோடல்லாமல் பொதுமக்களைப் பல விதக் கஷ்டங்களுக்கும் உள்ளாக்குகிறார்கள்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை. எனது தாயாருக்கு மூச்சு விடுவதில் கஷ்டம் ஏற்பட்டு, டாக்டரை அழைத்துக் காண்பிக்க, அவர் ஒரு மருந்தை எழுதிக் கொடுத்து, உடனே வாங்கிச் சாப்பிடச் சொல்லிச் சென்றார். திருச்சி முழுதும் உள்ள மருந்துக் கடைகளுக்கு ஞாயிற்றுக்கிழமைதான் வாரவிடுமுறை. மருந்துக்கு எங்கே போக? கிடைக்கவே யில்லை. என்னுடைய நற்காலம் அசம்பாவிதம் ஏதும் ஏற்படவில்லை. அந்த மட்டும் பிழைத்தேன். தவிர வியாதிகள் காலம், நேரம் பார்த்தா ஜீவராசிகளைப் பீடிக்க வருகின்றன?

ஏதோ சாதித்து விட்டதாக எண்ணிக் கொண்டு அபத்தக் காரியங்கள் செய்வதைச் சர்க்காரும், சம்பந்தப்பட்ட இலாக்காக்களும் உடனடியாக நிறுத்த வேண்டும். எல்லா மருந்துகளையும் ஒருவர் வைத்திருப்பது என்பது சாத்தியமா? சில பிரத்தியேக மருந்துகளை ஆபத்துச் சமயங்களில் வாங்க வேண்டித்தான் இருக்கும். அப்படியிருக்க அத்தியாவசியமான மருந்துகளை விற்பனை செய்யும் எல்லாக் கடைகளும் விடுமுறைக்காக ஒரே நாளில்தான் மூட வேண்டுமா? டிவிஷனுக்கு ஒரு நாளாகக் கடை மூடுவதை ஏற்பாடு செய்து கொள்ளட்டுமே. அதைவிட்டு ஏன் இப்படிப் பொதுமக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள வேண்டும்? இதையெல்லாம் நினைக்கும்போது,

முடியரசன் போனபின்பு மூர்க்கரெல்லாம்கூடி
குடியரசென் றோர்பெயரைக் கூறி—கொடிய
பழுதே புரியுமிந்தப் பாரூர்தனிற்
பொழுதே விடியாமற் போ.

என்ற வேதநாயகம் பிள்ளையின் பாடலை ஆத்திரத்துடன் வெளிக் கொட்டத்தான் வேண்டியிருக்கிறது.

அந்தநல்லூர்
30—1—61 **ஆர் எஸ். ரத்னம்**

அப்பா இருந்தால்....

சென்ற 29-1-61ல் வெளியான 'அப்பா இருந்தால்' என்னும் சிறு கதை எளிய நடையில் இனிமையான கருத்தைக் கூறுகிறது. 'பெண் மூலம் பணம் சம்பாதிக்கணும்னு பிரியப்படுகிற நீ, எங்கே லஞ்சம் வாங்கி விடுவாயோ என்று கவலையாக இருக்கிறது. அதற்காக உன்னை நான் படிக்க வைக்கவில்லை யடா!' என்று ஒரு தாயார் மகனுக்குச் சொல்லும் புத்திமதி ஓர் அழுத்தமான சீர்திருத்தக் கருத்தை உணர்த்துகிறது. 'அப்பா இருந்தால்...' என்ற வார்த்தையைப் பெற்ற மகன் சொல்லும்போது வெறுப்பு அடைந்த தாய் தானே அதைப் பிரயோகப்படுத்தும் வகையில் கதை முடிந்திருக்கும் நிலை சிறு கதைப் படைப்புக்கே ஒரு முத்தாய்ப்பு! இம்மாதிரியான சிறுகதைகளைத்தான் வாசகர்கள் பெரிதும் விரும்பிப் படிக்கிறார்கள்.

மேட்டூர் அணை
30—1—61 **ஆர். கே. சுந்தரம்**

'காதற் கன்னி'

சென்ற வாரக் கல்கி இதழில் ராஜாஜி அவர்களின் 'காதற் கன்னி' என்னும் சிறு கதையைப் படித்தபோது உள்ளம் மகிழ்ந்தது.

புதுமைத் தமிழ்ப்பித்து பிடித்தலையும் இக்கால மக்களுக்கு மனத்தில் படியும் வண்ணம், மொழியின் சிறந்த அடிப்படைக் கருத்தை—எத்தனை அற்புதமாக ஞானோபதேசம் செய்துள்ளார்; தந்தையைப் போன்று!

படிக்கும்போது ஒரு கதையைப் படிப்பது போன்று இல்லாமல், வாழ்க்கையின் உண்மையை, உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி அலைகளை — அப்படியே, ரம்மியமாகவும்,— எத்தனை குத்தலாகவும்—ஹாஸ்ய உணர்ச்சியோடும் எழுதியுள்ளார்கள். ஒரு சில இடங்களில் படிக்கும்போது, வாய்விட்டுச் சிரித்து—

ஆஹா...' என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும்படி இருக்கிறது.

சமீபத்தில் கரூர் நகருக்கு விஜயம் செய்த ராஜாஜி அவர்கள் எழுத்தாளர்கள் மத்தியிலும் பேசினார். 'இறவாத நூல்களைப் படைக்கும்படியும், காலப்போக்கை ஒட்டிய எழுத்துக்கள் ஆற்றின் நீரோட்டம்போல் மறைந்து விடும்; ஆற்றின் போக்கை எதிர்த்து எதிர் நீச்சல் போடும் உண்மை எழுத்துக்கள் என்றென்றும் ஒளிவிடும்' என்றும் கூறி, 'நூறாண்டுகளுக்குப் பின் எடுத்துப் பார்த்தாலும், பாரதியின் கவிதையைப் போன்று உண்மை இலக்கியங்களையும், சிறுகதைகளையும் எழுத்தாளர்கள் எழுதவேண்டும்' என அறிவுரை வழங்கினார்கள்.

கரூர்
3-2-61 சுலோசனா - கோவிந்தராஜன்

சோற்றுச் சுமை!

கல்கி 5-2-61 இதழில் வெளியான, ஜெயகாந்தன் அவர்கள் எழுதிய 'சோற்றுச் சுமை' என்ற கதையைப் படித்தேன். ஐந்து ரூபாய்க்காக மாடாக உழைத்து, மடிந்த ஆண்டாளுவை நினைத்து என் கண்கள் நீரைச் சொரிந்தன. உள்ளத்தைத் தொடும் கதை.

ஸ்ரீரங்கம்
2—2—61 எல். கே. மூர்த்தி

நெஞ்சில் நிறைந்தவள்

நெஞ்சில் நிறைந்தவள்-நளினியின்-பாத்திரம் ஓர் ஒப்புயர்வற்ற அற்புத சிருஷ்டி. என்றும் மறக்க இயலாத ஓர் உன்னத பாத்திரம். கற்பனையில் தோன்றிய பாத்திரத்துக்கு, எழுத்தில் வடிவம் கொடுத்து, எங்கள் இதயம் நிறைந்த ஆசிரியர் எங்கள் நெஞ்சில் நிறைந்ததில் வியப்பென்ன?

[illegible]
13-1-61 எல். வேங்கடரமணி

பொங்கல் மலரைக் கண்டு பூரித்த எனது உள்ளம் சற்று நிமிடத்தில் பாலைவனமாகி விட்டது! ''நெஞ்சில் நிறைந்தவ''ளை இழந்து விட்டோமென அறிந்ததும் எனது இதயமே வெடித்து விட்டது! ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பார்கள் பெரியோர்கள். ஆனால் இது நளினியின் வாழ்வில் பொய்த்துப் போய் விட்டதே!

கொழும்பு
14—1—61 இரா. து. நடராஜன்

சமைபதியைக் காதலித்துக் கைப்பிடித்துக் காலம் எல்லாம் கஷ்டப்பட்டு, பெற்ற தந்தையையும் பிரிந்து வேதனைக் கடலில் மூழ்கித் தவித்த நளினியை இவ்வளவு விரைவில் விடுதலை செய்துவிடுவீர்கள் என நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. இறக்கும்போதாவது, அவளுக்கு மன நிறைவை அளித்தீர்களே! அதுவே போதும். நெஞ்சில் நிறைந்தவள் அருமையான படைப்பு. அதில் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தவள் நளினி.

திரிகோணமலை
14-1—61 கமலா ஏரம்பு
சரோஜினி ஏரம்பு

கதையின் போக்கில் இடம்பெறும் பல நிகழ்ச்சிகள் இருப்பினும், முக்கியமாக பால்ராஜ் கோர்ட்டில் குறுக்கு விசாரணை செய்யும் இடம் மிகவும் நல்ல முறையில் ரசமாக அமைந்திருந்தது.

நாகர்கோவில்
13-1-61 ஆ. இராசகோபால்

தென்முகத் தெய்வம்

தாராத அருளெலாம் தந்தருள மௌனியாய்
தாயினைய கருணை காட்டி......
சிரகிரி விளங்க வரு தட்சிணாமூர்த்தியே
சின்மயானந்த குருவே.

— தாயுமானவர்


பரம்பொருளானது லிங்கமாக வடிவெடுத்த புனித தினமே சிவராத்திரி. ஆனால் பரதத்துவத்தின் இச்சின்னம், பாமரர்கள் அணுக முடியாத அண்ணுமலையாக அல்லவா உள்ளது? அதே மூல வஸ்து யாவரும் அண்டும்படி, அணுகும்படி, அண்ணும் மலையாக, ஆனந்த சிகரமாக, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாகத் தோன்றி அருள்பாலிக்கிறது. உலக பிதாவான பரமேசுவரன், ஜகஜ்ஜனனியின் கருணையோடும், குரு உருவு தரித்தும், ஒரே சமயத்தில் அம்மையாகவும், அப்பனாகவும், ஆசானாகவும் ஆட்கொள்ள வருகிறான். பூரணத்துவம் பெற முடியாமல் நம்மை மீண்டும் மீண்டும் பிறப்பு—இறப்புக்களில் சிக்க வைக்கும் யமன் தென் திசையில்தானே இருப்பது? அவனை நம்மிடம் வராமல் செய்வதற்காக அந்தத் தட்சிண திசையையே நோக்கி அமர்ந்திருக்கிறான். வாய் மட்டுமின்றி, பொறிகள் யாவும் அடங்கும் மோனமே அப்பூரணத்துவத்தைப் பெறும் உபாயம் என்பதால் மோன நாயகனாகவும், அப்பூரணத்துவத்தின் இயல்பு ஞானமே என்பதால் ஞான நாயகனாகவும் அமர்ந்திருக்கிறான். எங்கே? எங்கோ, கல்லால மரத்தினடியில் மட்டும்தானா? சிற்பிகள் அவனைக் கல்லிலும் வடித்தெடுத்திருக்கிறார்கள். காஞ்சி கைலாசநாதர் ஆலயத்திலுள்ள அத்தகைய ஒரு மூர்த்தியே இவ்விதழ் அட்டையில் மணியம் கைவண்ணத்தில் ஓவியமாகவும் துலங்குகிறான். அதற்கும் மேல் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அல்லவா அவன் வீற்றிருக்கிறான்?

''சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே, தேஜோமயானந்தமே! எங்கள் மாசுகள் மாய்வதற்காக உன்னைப் பணியும் அறிவை எங்களுக்கு அளிப்பாய்!'' என்று அச் செம்பொருளைச் சிவராத்திரி தினத்தில் நாமும் இறைஞ்சுவோமாக.

PHILLIPS பிலிப்ஸ் ஸைக்கிள்

பிலிப்ஸ் ஸைக்கிள் பார்ப்பதற்கு அழகாகத் தோற்றமளிப்பதுடன் சிரமமின்றி சுலபமாக ஓடும் தன்மையும் வாய்ந்தது. இன்றைய சுறுசுறுப்புள்ள இளைஞர்களின் தேவைகளுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட இந்த பிலிப்ஸ் ஸைக்கிள், உறுதியான எஃகினால் செய்யப் படுவதால் எவ்வித காடு முரடான உபயோகத்திலும் உழைக்க வல்லது.

70 வருடங்களாக உலகப் பிரசித்திப் பெற்ற பிலிப்ஸ் ஸைக்கிள் இப்பொழுது டி. ஐ. ஸைக்கிள்ஸாரின் நவீன தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது.



டி. ஐ. ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா, மதராஸ்

JWT/T/CIPH-500a



மணிபல்லவம்

9

முறுவல் மறந்த முகம்

நா. பார்த்தசாரதி

நாளங்காடிப் பூத சதுக்கத்தில் இளங்குமரனுக்கும் அவனைத் தாக்க வந்தவர்களுக்கும் போர் நடந்தபோது, பெருகி வந்த கூட்டத்தினால் நெருக்குண்டு பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த முல்லை, கூட்டம் கலைந்ததும் அருகில் வந்து பார்த்தாள். இளங்குமரனுக்கு என்ன நேர்ந்திருக்குமோ என்று பதறித் துடித்துக் கொண்டிருந்தது அவள் மனம். ஓவியன் ஓடிப் போய் இளங்குமரனுக்கு உதவும் நோக்கத்துடன் யாரோ ஆட்களை அழைத்து வந்ததும், பல்லக்குகள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உட்புகுந்ததும் அவளுக்குத் தெரியாது. அதனால் அதன் பின் என்ன நிகழ்ந்ததென்பதை அவள் தெரிந்துகொள்ள முடியாமல் கூட்டத்தினர் அவளைப் பின்புறம் தள்ளி விலக்கியிருந்தனர்.

கூட்டம் ஒருவாறு கலையத் தொடங்கியபோதுதான் முன்னுக்குப் போய் அவர்களுக்குள் தாக்குதல் நடந்த பகுதியில் இளங்குமரனைக் காணலாமென்ற தவிப்பு அவளுக்கு உண்டாயிற்று. ஆனால் உரிய இடத்துக்கு வேகமாகச் சென்று பார்த்தபோது தன் தவிப்புக்கும் ஆவலுக்கும் பயன் இல்லை என்று அவள் தெரிந்து கொண்டாள்.

அங்கே இளங்குமரனைக் காணவில்லை. அவனைப் படம் வரைந்து கொண்டிருந்த ஓவியனையும் காணவில்லை. 'அதற்குள் எங்கே போயிருப்பார்கள் இவர்கள்?' என்ற திகைப்புடன் அவள் நின்றபோது அந்த இடத்திலிருந்து பல்லக்குகள் இரண்டு புறப்படுவதைக் கண்டாள். பல்லக்குகளைச் சுற்றி வெண் சாமரங்கள், பட்டுக் குடைகள், ஆலவட்டங்கள், மயிற்கண் பீலி பதித்த தோரணம், இவற்றைத் தாங்கிய ஏவலாட்கள் மரியாதையாக நின்று கொண்டிருந்தனர். முதற் பல்லக்கைப் பின்தொடர் நிழற் போல் சென்ற இரண்டாவது பல்லக்கைக் கண்டதும் முல்லைக்கு வியப்பு ஏற்பட்டது. அந்தப் பல்லக்கைச் சுமந்து கொண்டிருந்தவர்கள் தாம் சற்று



முன் இளங்குமரனோடு சண்டைக்கு வந்தவர்கள் என்பதை மிக எளிதாக அடையாளம் கண்டு கொண்டாள் அவள். அதைப் பார்த்ததும் முதலில் அவள் மனம் வீணான பயங்கரங்களை நினைத்தது. 'இளங்குமரனை அடித்துத் தூக்கி இந்தப் பல்லக்கில் தூக்கிப் போட்டுக் கொண்டு இவர்கள் போகிறார்களா?' என்று நினைத்து மனம் கொதித்தாள் அவள். ஆனால் அப்படி இல்லை என்பது பக்கத்திலிருந்தவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து அவளுக்குத் தெரிந்தது. அடுத்த சில விநாடிகளில் பல்லக்கைச் சூழ்ந்திருந்தவர்கள் சிறிது விலகியதால் இளங்குமரனே அதற்குள் உட்கார்ந்திருப்பதை அவள் பார்த்து விட்டாள். ஆனால் இளங்குமரனுடைய பார்வை அவள் நின்றுகொண்டிருந்த பக்கமாகத் திரும்பவே இல்லை. அவ்வளவில் பல்லக்குகள் விரைந்து செல்லத் தொடங்கியதால் முல்லையின் பார்வையிலிருந்து இளங்குமரன் மறைந்தான். அவளுடைய இதழ்களிலிருந்து முறுவல் மறைந்தது. முகத்திலிருந்து மலர்ச்சி மறைந்தது. நெஞ்சிலிருந்து உற்சாகம் மறைந்தது. எதற்காகவோ இளங்குமரன் மேல் பெரிதாகக் கோபித்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது அவளுக்கு. அதே சமயத்தில் அப்படிக் கோபித்துக் கொள்வது எதற்காக என்றும் அவளாலேயே மனத்தில் காரண காரியத்தை இணைத்துப் பார்க்க முடியவில்லை.

பல்லக்குகள் வெகுதூரம் முன்னுக்குப் போய்விட்டன. பல்லக்குச் சுமப்பவர்கள் சுமை உறுத்துவது தெரியாமலிருப்பதற்காகப் பாடிக்கொண்டு சென்ற ஒருவகைப் பாடல் ஒலி மெல்ல மெல்லக் குரல் தேய்ந்து அவள் செவிகளில் கேட்டுக் கொண்டிருந்தது.

அப்பொழுதே நாளங்காடியின் இந்திர விழா ஆரவாரங்களும், அழகும், திடீரென்று இருந்தாற்போலிருந்து குறைபட்டுப் போனது போலிருந்தது முல்லைக்கு. 'இளங்குமரனின் ஓவியத்தை வரைந்துகொள்வதற்காக எட்டிகுமரன் வீட்டுப் பேரழகி சுரமஞ்சரி இளங்குமரனையும் ஓவியனையும் முரடர்களிடமிருந்து காப்பாற்றிப் பல்லக்கில் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகிறாளாம்' என்று பக்கத்தில் கூட்டமாக நின்று கொண்டிருந்தவர்கள் தன்னிடம் கூறிய செய்தியைச் செவிகள் வழியே வாங்கி நெஞ்சில் ஏற்றுக் கொண்டு தாங்குவதற்கு வேதனையாயிருந்தது அவளுக்கு.

வீட்டிலிருந்து புறப்படும்போது, 'இந்தப் பிள்ளையாண்டானைத் துணைக்குக் கூப்பிடுகிறாயே முல்லை; இவன் ஊர் சுற்றும் முரடனாயிற்றே? இல்லாத வம்புகளையெல்லாம் இழுத்துக் கொண்டு வருவானே?' என்பதைத் தந்தையார் எவ்வளவு குறிப்பாகச் சொன்னார். நான் அப்போதே தந்தையார் சொல்லிய குறிப்பைப் புரிந்து கொள்ளாமல் போனேனே. இந்த நாளங்காடி நாற்சந்தியில் திருவிழாக் கூட்டத்தில் நான் ஒருத்தி கூட வந்திருப்பது நினைவில்லாமல், என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொண்டாவது போக வேண்டுமே என்றும் எண்ணாமல் யாரோ ஒருத்தி கூப்பிட்டாளென்று பல்லக்கில் ஏறிக்கொண்டு போயிருக்கிறாரே! எவ்வளவு இறுகிப் போயிருக்க வேண்டும் இவர் மனம்?' என்று நினைந்து வருந்தினாள் முல்லை. இளங்குமரன் என்னும் எழில் வெள்ளம் தனக்கே சொந்தம் போல் தன்னோடு பாய்ந்து வந்த ஒரே காரணத்தால் நாளங்காடிக்கு வருகிற போது கர்வப்பட்டுக் கொண்டிருந்தாள் முல்லை. இப்போது அந்தக் கர்வத்தை அவள் படுவதற்கில்லை. பட முடியாது. அவளுக்குக் கிடைத்த அந்தக் கர்வத்தின் பெருமையையும் உரிமைக்குப் போட்டியிடப் பெருநிதிச் செல்வர் வீட்டுப் பெண்ணொருத்தியும் வந்து விட்டாள் போலும்! இளங்குமரனின் முகமும் கண்களும், தோற்றமும் அத்தகைய சிறப்பு வாய்ந்தவை. அவன் எவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாலும், எவரோடு பேசிக் கொண்டிருந்தாலும், எவரோடு நடந்து கொண்டிருந்தாலும், அப்படி நிற்கப் பெற்றவர்க்கும், பேசப் பெற்றவர்க்கும், நடக்கப் பெற்றவர்க்கும், தான் உடனிருக்கிறோம் என்பதையே ஒரு பெருமையாக நினைத்து மகிழும் கர்வத்தை அளிக்கும் பேரெழில் தோற்றம் இளங்குமரனுக்கு இருந்தது. அதனாலேயே காவிரிப்பூம்பட்டினத்தில் அவனுக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். அதனாலேயே நண்பர்களைக் காட்டிலும் நிறைய விரோதிகளும் இருந்தார்கள். ஒரு மனிதனுடைய இணையற்ற அழகு மற்றவர் மனங்களில் பெருமையை விளைவிக்க வேண்டும், அல்லது பொறாமையை விளைவிக்க வேண்டும். இளங்குமரனுடைய அழகு இந்த இரண்டையுமே விளைவித்துக் கொண்டிருந்தது. இதைத் தவிர, தானே தெரிந்து கொள்ள முடியாத பல காரணங்களாலும் தன்னை அழித்து விடத் துடிக்கும் எதிரிகள் இருக்கிறார்கள் என்பதை முன்னாள் இரவு சம்பாபதி வனத்தில் நடந்தவற்றால் அவன் தெரிந்து கொள்ள முடிந்திருந்தது. தன்னுடைய

வாழ்க்கை சில சமயங்களில் தனக்கே பெரும் புதிராக இருப்பதையும் அவன் உணர்ந்திருந்தான்.

காலைப்போது தளர்ந்து பகல் வளர்ந்து கொண்டிருந்தது. தனக்குப் புதியதும் அடர்த்தி நிறைந்ததுமான காட்டுப் பகுதிக்கு வழி தப்பி வந்துவிட்ட மான் குட்டியைப் போல் நாளங்காடிக் கூட்டத்தில் நின்றுகொண்டிருந்தான் முல்லை. துணைக்குத் தன்னோடு வந்தவன் இன்னொருத்தியோடு துணையாகப் போய் விட்டான் என்பதை நினைக்கும் போது அவனுக்கு ஏக்கமும் ஆற்றாமையும் இணைந்து உண்டாயின. புற வீதி அதனோடு சார்ந்த புறநகரப் பகுதிகளையும் தவிரப் பட்டினப்பாக்கம், நாளங்காடி போன்ற கலகலப்பு மிக்க அகநகர்ப் பகுதிகளுக்கு அவன் துணையின்றித் தனியாக வருவதற்கு நேர்ந்ததில்லை. தந்தையோ, தமையனோ, துணையாக வரும்போது தான் பூம்புகாரின் ஆரவாரமான, அகநகர்ப் பகுதிகளுக்குள் அவன் வந்து போயிருக்கிறான். சாதாரண நாட்களிலேயே கூட்டத்துக்குக் குறைவிருக்காது. தனியாக வந்தால் வழி மயங்குவதற்கும், வழி தவறுவதற்கும், வேறு தொல்லைகளுக்கும் ஆளாக நேரிடுமோ என்று அஞ்ச வேண்டிய அகநகரிலும், நாளங்காடியிலும், கோலாகலமான இந்திரவிழாக் காலத்தில் கேட்கவா வேண்டும்? முல்லை சோர்ந்த விழிகளால் நான்கு பக்கமும் திரும்பிப் பார்த்தான்.



கண்ணுக் கெட்டியதூரம் கடைகளும், மக்கள் நெருங்கிய கூட்டமும், பாட்டும், கூத்தும், யானைகள், குதிரைகள், தேர்கள், சிவிகைகள் போன்ற ஊர்தி

களும், அவற்றின் தோற்றம் முடிகிற இடத்தில் ஆரம்பமாகும் நெடுமரச் சோலைகளும், பரந்து விரிந்து தோன்றின. செவிகளிற் கலக்கும் வித விதமான ஒலிகள். செவிகளைக் கலக்கும் வேறு வேறு பேச்சுக் குரல்கள். கண்ணிற் கலக்கும் பலவிதக் காட்சிகள். கண்ணைக் கலக்கும் அளவிலடங்காத காட்சிக் குவியல்கள். எதையும் தனியாகப் பிரித்துக் காணமுடியாத காட்சி வெள்ளம்! எதையும் தனியாகப் பிரித்து உணர முடியாத ஒலி வெள்ளம்! எதையும் தனியாகப் பிரித்து உணர முடியாத பரபரப்பான நிலை!

தனக்கு எதிர்ப் பக்கத்தே அருகிலிருந்த மரங்களில் கட்டப்பட்டிருந்த யானைகளுக்குக் கரும்பு ஒடித்துக் கொடுக்கும் பாகர்களைப் பார்த்தாள் முல்லை. துதிக்கையை நீட்டிப் பாகர்களிடமிருந்து கரும்புக் கழிகளை வாங்கி வாய்க்குக் கொண்டு போய் அரைத்துச் சாறு பருகும் அந்தப் பெரிய பெரிய யானைகளை வேடிக்கை பார்ப்பதுபோல் பார்த்தாள்



அவள். அவளுக்கு அந்தக் காட்சியைத் தன் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றியது. இளங்குமரனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு நாளங்காடிக்கு வருகிறபோது கரும்பின் இனிய சாற்றைப் பருகுவது போல் நெஞ்சில் மெல்லிய நினைவுகளைச் சுவைத்துக் கொண்டு வந்தாள் அவள். இப்போதோ சுவைத்து முடித்தபின் எஞ்சும் சக்கையைப்போல் சாரமற்ற நினைவுகள் அவள் மனத்தில் எழுகின்றன. யானைவாய்க் கரும்பு போல் தனது இனிய நினைவுகளுக்குக் காரணமானவனை எட்டிகுமரன் விட்டு நங்கை கொள்ளை கொண்டு செல்வதை அவள் உணர்ந்தாள்.

பார்வைக்கு இலக்கு ஏதுமின்றிப் பராக்குப் பார்ப்பதுபோல் நாளங்காடியின் ஒரு புறத்தில் நின்று நோக்கிக் கொண்டிருந்த முல்லைக்கு முன்னால் குதிரைகள் வந்து நின்றன. அவளண்ணன் கதக்கண்ணனும் அவனோடு வந்த மற்றவர்களும் தத்தம் குதிரைகள் மேலிருந்து கீழே இறங்கினார்கள்.

"முல்லை! இதென்ன? இப்படிப் பராக்குப் பார்த்துக் கொண்டு இங்கே நிற்கிறாய்? உன்னோடு துணைக்கு வந்த இளங்குமரன் எங்கே போனான்? படையல் வழிபாடு எல்லாம் முடிந்ததோ, இல்லையோ?" என்று ஆவலுடனும் அவசரமாகவும் விசாரித்துக் கொண்டே முல்லைக்கு அருகே வந்து நின்றான் கதக்கண்ணன். அவனுடன் குதிரைகளில் வந்த மற்றவர்களும் மரியாதையாகப் பக்கத்தில் நின்றார்கள்.

அந்த நேரத்தில் தன் அண்ணனை அங்கே கண்ட பின்பும் முல்லையின் முகத்தில் மலர்ச்சி பிறக்கவில்லை. இதழ்களில் நகை பிறக்கவில்லை. நாவிலிருந்து 'வாருங்கள் அண்ணா' என்பதுபோலத் தமையனை வரவேற்கும் மகிழ்ச்சி தழுவிய வார்த்தைகளும் பிறக்கவில்லை.

மறுபடியும் அவள் தமையன் அவளைக் கேட்கலானான்:

"இளங்குமரன் எங்கே, முல்லை? உன்னை இங்கே தனியாக விட்டு விட்டு ஊர் சுற்றப் போய்விட்டானா?"

"நான் அவரை எனக்குத் துணையாகக் கூட்டிக்கொண்டுவந்ததே தப்பு அண்ணா! புறப்படும்போது அவரைக் கூட்டிக் கொண்டு போக வேண்டாமென்று அப்பா சொன்னார். நான் அதையும் மீறி அவரைக் கூட்டிக் கொண்டு வந்ததற்கு எனக்கு நன்றாகப் பாடம் கற்பித்து விட்டார். அவர், சொல்லிக் கொள்ளாமலே போய்விட்டார் அண்ணா!"

"என்ன நடந்தது முல்லை? நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொல். நாங்கள் மிக அவசரமான முக்கிய காரியத்துக்காக இளங்குமரனைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறோம். உடனே அவனைப் பார்க்க வேண்டும். இந்தச் சமயத்தில் பார்த்து நீயும் அவன்மேல் உன்னுடைய கோபதாபங்களைக் காட்டிக் கொண்டிருந்தால் என்ன செய்வது?"

இப்படித் தன்னை நோக்கிக் கூறிய தமையன் கதக்கண்ணனின் முகத்தை நன்றாக உற்றுப் பார்த்தாள் முல்லை.

வீரக்களை சுடர் பரப்பும் அந்த முகத்திலும், கண்களிலும், பார்வையிலும், பேச்சிலும் 'அவசரம், அவசரம்' என்று தவித்துப் பறக்கும் ஒருணர்வு முந்திக் கொண்டு நின்றது.

10. பெருமாளிகை நிகழ்ச்சிகள்

இன்பங்களும், வசதிகளும், கோநகரப் பெரு வாழ்வின் சுகபோகங்களும் ஒன்றுகூடி நிறைவு பெற்ற பட்டினப்பாக்கத்து வீதிகளின் வழியே இளங்குமரன் அமர்ந்திருந்த பல்லக்கைச் சுமந்து சென்றார்கள். கரையகன்ற ஆறு போல் வழியகன்ற பெரு வீதிகளின் இருபுறமும் உயர்ந்த மாடங்களோடு கூடிய மாளிகைகள் தோன்றின. பொதிய மலைக்கும், இமய மலைக்கும், பழைமையான பூம்புகார் நகரத்துக்கும், அடுக்கடுக்காக வளங்கள் பெருகுவதல்லது ஒடுக்கமோ, நடுக்கமோ, நிகழ்வதில்லை என்று சான்றோர்கள் புகழ்ந்து பாடி விருப்பதை உறுதிப்படுத்துவது போல் காட்சியளித்தன பட்டினப்பாக்கம் என்னும் அகநகரத்து அழகுகள். போகங்கள் பெருகிப் புகழ் நிலைபெறும் பூம்புகாரின் வளங்களெல்லாம் சேர்ந்து திகழும் செல்வம் மலிந்த பாக்கம் இது. திருமகள் விரும்பி உறையும் பொன்னனை பகுதியும் இதுதான்.

அரசர், அமைச்சர்கள் ஐம்பெருங் குழுவினர் எண்பேராயத்தார், அளவிடலங்காத செல்வம் படைத்த வணிகர்கள், மறையோர்கள் முதலியோரெல்லாம் இந்தப் பட்டினப் பாக்கத்து வீதிகளில்தான் வசித்து வந்தார்கள். பெரு நிலக்கிழாராகிய வேளாளர்கள், மருத்துவர்கள், சோதி

டர்கள் போன்றோரும் பட்டினப்பாக்கத்து வாசிகளேயாவர். பெருவீதிகளின் இருபுறங்களில் எல்லாம் வண்ண வண்ணக் கொடிகள் பறக்கும் தேர்கள் அங்கங்கே அழகுற அலங்கரிக்கப் பெற்று நின்றன. தங்கள் இல்லங்களில் நிகழவிருக்கும் மணவிழாக்களுக்கோ, வேறு பல மங்கல நிகழ்ச்சிகளுக்கோ, பிறரை அழைக்கச் செல்லும் பெருஞ் செல்வ நங்கையர்கள் யானைகள்மேல் அம்பாரிகளில் அமர்ந்து மணிகள் ஒலிக்குமாறு சென்று கொண்டிருந்தனர். வீரர்களும், வேறு பலரும் அலங்கரிக்கப் பெற்ற குதிரைகளில் ஏறி வீதிகள் நிறையச் சென்று கொண்டும், வந்து கொண்டும் இருந்தனர். எல்லா இடங்களிலும் அகன்றும், ஒரே அளவாயும் இருந்த வீதிகளில் விண்தொட நிமிர்ந்த வியன் பெரு மாளிகைகளின் மேல் மாடங்களிலிருந்து கிளிகளும், மணிப் புறாக்களும், பறந்து செல்வதும், வந்து அமர்வதுமாகக் காட்சியளித்தன. பட்டினப்பாக்கத்து வீதிகளுக்கு இயற்கையாகவே பொருந்தியிருந்த இந்த அழகுகளை இந்திர விழாவும் வந்து சேர்ந்து இருமடங்காக்கியிருந்தது. வீதிகளில் எல்லாம் விழாவுக்காகப் பழைய மணல் மாற்றிப் புது மணல் பரப்பியிருந்தார்கள். வாழையும், கமுகும், கரும்பும் நாட்டி வஞ்சிக் கொடிகளையும், மற்றும் பல பூங்கொடிகளையும் தோரணமாகக் கட்டியிருந்தார்கள். மங்கல நிறை குடங்களும், பொன்னாலாகிய பாவை விளக்குகளும் வீடுகளின் முன்புறங்களில் வைக்கப் பட்டிருந்தன. வீட்டு முன்புறத் தூண்களில் ஒளிர்கதிர் விரித்துக் குளிர் சுடர் பரப்பும் முத்து மாலைச் சரங்களைத் தோரணங்களாகக் கட்டியிருந்தார்கள். சில இடங்களில் சித்திரப் பந்தல்களும் போட்டிருந்தார்கள்.



மாரிக் காலத்தே புதுவெள்ளம் வந்த ஆறுபோல் வீதிகள் நிறைவாகவும், கலகலப்பாகவும் இருந்தன. ஆனால் பல்லக்கில் அமர்ந்திருந்த இளங்குமரன் உள்ளத்தில் இவற்றையெல்லாம் பார்க்கப் பார்க்கத் தாழ்வுணர்ச்சிதான் அதிகமாயிற்று. அவனுக்கு எதிரே வீற்றிருந்த ஓவியனோ அரும்பெரும் புதையலைக் கண்டெடுத்த ஏழைபோல் பல்லக்குக்கு வெளியே தலையை நீட்டிப் பார்த்து மகிழும் தாகத்தோடு வீதிகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். முன்னால் சுரமஞ்சரி என்னும் அந்தப் பெண்ணின் பல்லக்கும் அதைத் தொடர்ந்து இரண்டாவதாக இளங்குமரனும் ஓவியனும் இருந்த பல்லக்குமாகச் சென்று கொண்டிருந்தன. இரண்டு பல்லக்குகளின் முன்புறமும் ஆலவட்டம், சித்திரப் பட்டுக் குடை, தோரணம் முதலிய சிறப்புப் பரிவாரங்கள் சென்றதனால் இவர்கள் வீதியையும் வீடுகளையும் பார்த்தது போக வீதியிலும், வீடுகளிலிருந்து இவர்களைப் பலர் வியப்போடு பார்த்தனர். அரச குடும்பத்துக்கு ஒப்பான பெருஞ் செல்வக் குடியினர் யாரோ பல்லக்கில் போகிறார்கள் போலும் என்ற வியப்பு அவர்களுக்கு.

பல்லக்கில் போகும்போது இளங்குமரனும், ஓவியன் மணிமார்பனும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதற்கு அதிகமாக வாய்ப்பு நேரவில்லை. நாளங்காடியிலிருந்து புறப்பட்டுச் சிறிது தொலைவு வந்ததும், ''பூதசதுக்கத்தில் படையலிட்டபின் உங்களுக்கும், எனக்கும் என்னுருண்டை கொண்டு வந்து கொடுத்தாளே, அந்தப் பெண் யார் ஐயா?'' - என்று ஓவியன் தற்செயலாகக் கேள்வி யெழுப்பின போதுதான் இளங்குமரனுக்கு முல்லையின் நினைவு வந்தது. அதுவரை முல்லைக்குத் துணையாகவே தான் அங்கு வந்திருந்தோம் என்ற நினைவு அவனுக்கு இல்லை. அவன் அதை முற்றிலும் மறந்தே போயிருந்தான்.

'ஆகா! என்ன தவறு செய்து விட்டேன்? முல்லை உடன் வந்தது எனக்கு எப்படி மறந்து போயிற்று? புறப்படும் போதே அந்தக் கிழவர் வீரசோழியவள நாடுடையார் என் மேல் சந்தேகப்பட்டார். அவர் சந்தேகப்பட்டது சரிதான் என்பது போலல்லவா நடந்து கொண்டு விட்டேன்! முல்லை யார் துணையோடு இனிமேல் வீட்டுக்குப் போவாள்? நாளங்காடிச் சந்தியில் தனியாக நின்று திண்டாடப் போகிறாளே' என்று எண்ணி இளங்குமரன் தன்னை நொந்து கொண்டாலும் அவனால் உடனடியாகப் பல்லக்கிலிருந்து இறங்கி நாளங்காடிக்கு ஓடிப் போய்விடத் துணிய முடியவில்லை.

எதிரே உட்கார்ந்திருக்கும் ஒளியனுக்கு வாக்களித்த உதவியைச் செய்யாமல் இறங்கிப்போவது பாவம் என்று எண்ணினான் அவன். 'முல்லை எப்படியாவது தானாகவே வீட்டுக்குப் போய் விடுவாள்' என்று மனத்தைச் சமாதானப் படுத்திக் கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்ய அப்போது அவனுக்கு வாய்ப்பில்லாமல் இருந்தது. இந்த மனக் குழப்பத்தால் 'முல்லை யார்' என்று ஒளியன் கேட்ட கேள்விக்குப் பதிலும் கூறவில்லை அவன். அந்த நிலையில் மேலும் தூண்டித் தூண்டிக் கேள்விக் கேட்டுக் கொண்டிருந்தால் இளங்குமரனுக்குக் கோபம் உண்டாகுமோ என்று பயந்துதான் கேட்ட கேள்விக்கு அவனிடமிருந்து பதில் வராமலிருந்தும் மேலே ஒன்றும் கேளாமல் மௌனமாக இருந்து விட்டான் மணிமார்பன்.

இதன் பின்பு இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளாமல் பட்டினப்பாக்கத்து வீதிகளைப் பார்த்துக் கொண்டே சென்றார்கள். பட்டினப் பாக்கத்தின் சிறப்பான வீதி ஒன்றில் புகுந்து அதன் தொடக்கத்தில் வானளாவிக் காட்சியளித்த எழுடுக்கு மாளிகையின் பிரதான வாயிலில் நுழைந்து பல்லக்குகளும் பரிவாரங்களும் நின்றன. சுரமஞ்சரியின் தோழி வசந்தமாலை மாளிகைக்குள்ளே போய் இரண்டு இரத்தினக் கம்பள விரிப்புக்களை எடுத்துக் கொண்டு ஓடோடி வந்தாள். மிக நீளமான அந்த விரிப்புக்களைப் பல்லக்குகள் நின்ற இடத்திலிருந்து மாளிகையின் உட்புறத்துக்கு ஏறிச் செல்லும் முதற் படிக் கட்டு வரை நடை பாவாடையாக இழுத்து விரித்தாள் வசந்தமாலை. அந்தப் பெருமாளிகையில் நடைமுறைகளும், மரியாதை வழக்குகளும் இளங்குமரனையும் ஒளியனையும் வியப்படையச் செய்தன. இரத்தினக் கம்பள விரிப்புக்களில் கால் வைத்து நடப்பதற்கு வசதியாகப் பல்லக்குகள் இறக்கி வைக்கப்பட்டன. இளங்குமரனும் ஒளியனும் அந்த விரிப்பின் அழகையும் மென்மையையும் பார்த்து அதில் கால் வைத்து இறங்கலாமா கூடாதா என்று கூச்சத்தோடு பல்லக்கிலேயே இருந்து விட்டனர். அந்த மாளிகையைக் கண்டதும் தாழ்வு மனப்பான்மையும் அதனோடு தோன்றும் ஆற்றாமையின் சினமும் இளங்குமரனுக்கு உண்டாயிற்று.

தன் அன்னமென்னடைக்குப் பொன் அனைய காற் சிலம்பு தாளமிடப் பூங் கரத்து வளைகளெல்லாம் ஒலி பொங்கச் சுரமஞ்சரி பல்லக்கினுள்ளேயிருந்து இறங்கி விரிப்பின் மேல் இறங்கி நடந்தாள். நடந்து வரும் போதே பிறழ்ந்து பிறழ்ந்து சுழலும் கெண்டை மீன் விழிகளால் இளங்குமரனும், ஒளியனும் இன்னும் பல்லக்கினுள்ளேயே தயங்கி வீற்றிருப்பதை அவள் பார்த்துக் கொண்டாள்.

"வசந்தமாலை! அவர்கள் இன்னும் பல்லக்கிலேயே உட்கார்ந்திருக்கிறார்கள், பார். நீ போய் இறக்கி அழைத்துக் கொண்டு வா" என்று தோழியை நோக்கிக் கட்டளை பிறந்தது.

வசந்தமாலை அவர்கள் வந்த பல்லக்கின் அருகில் வந்து விநயமான குரலில் பணிவோடு அழைத்தாள்.


"ஐயா, இறங்கி வாருங்கள், உள்ளே போகலாம்."

இளங்குமரன் இறங்கி வந்தான். ஆனால் வேண்டுமென்றே விரிப்பிலிருந்து விலகித் தரையில் நடந்தான். 'அவர் அப்படிச் செய்யும் போது' தான் மட்டும் நடந்து போவது நன்றாயிராது என்று எண்ணி இரண்டாவதாகப் பல்லக்கிலிருந்து கீழே இறங்கிய மணிமார்பனும் இளங்குமரனைப் பின்பற்றித் தரையில் நடந்தான்.

இளங்குமரனின் தோற்றத்தையும் கம்பீரமான நடையையும் பார்த்தால் பேசுவதற்கு அச்சமும் தயக்கமும் ஏற்பட்டது வசந்தமாலைக்கு. ஆனாலும் அவற்றை நீக்கிக் கொண்டு, "ஐயா! விரிப்பின் மேல் நடந்து வாருங்கள். விரிப்பு உங்களுக்காகத்தான் விரித்திருக்கிறது" என்று மெல்லக் கூறினாள் அவள். எடுத்தெறிந்து பேசுவது போல் இளங்குமரனிடமிருந்து பதில் வந்தது அவளுக்கு. தனக்கே பண்மை மரியாதை கொடுத்துப் பேசினான் அவன்:

"பிறருடைய வழிக்கு அடங்கி நடந்து நமக்குப் பழக்கமில்லை. எந்த இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் நாம் எப்படி நடந்து போக வேண்டுமென்று நமக்குத் தெரியும்......"

இளங்குமரனின் இந்த மறுமொழியைக் கேட்டு முன்னால் மெல்ல நடந்து சென்று கொண்டிருந்த சுரமஞ்சரி திரும்பினாள். சிரித்தாள். சற்றே நின்று தலையை அழகுறச் சாய்த்து இளங்குமரனைப் பார்த்தாள். அந்த மயக்கும் நகையும் மகிழ்ச்சிப் பார்வையும் இளங்குமரன் முகத்தில் ஒரு மாறுதலையும் விளைவிக்கவில்லை. உடனே தான் வந்த வழியே திரும்பி நடந்து இளங்குமரனுக்கு மிக அருகில் வந்து நின்று கொண்டு, "உங்களை யாருடைய வழியிலும் நாங்கள் அடங்கி நடக்கச் சொல்லவில்லை. எங்கள் வேண்டுகோளை மறுக்காமல் கம்பளத்தில் மிதித்து நடந்து



வாருங்கள். கால்களுக்கு மென்மையாகப் பூப்போலிருக்கும்!" என்று கூறி முறுவல் பூத்தாள் சுரமஞ்சரி. அவள் சிரிக்கும் போது அவளுடைய மூக்குத்தியின் ஒளி மிகுந்த வைரக் கற்களும் சேர்ந்து சிரிப்பது போலிருந்தது. அப்போது அந்த மூக்குத்தியில் நுண்ணியதொரு அழகு பிறந்தது.

அவள் அருகில் வந்து தன்னிடம் இவ்வாறு கூறியதும் நடந்து கொண்டிருந்த இளங்குமரன் நின்றான்.

"அம்மணி! என்னுடைய பாதங்களைப் பற்றி நீங்கள் அதிகக் கவலை கொள்ள வேண்டாம். காவிரிப் பூம்பட்டினத்தின் காடு முரடான நிலப் பகுதியெல்லாம் சுற்றிச் சுற்றி வைரம் பாய்ந்த கால்கள் இவை. இந்தக் கால்களுக்கும் இவற்றுக்கு உரியவனின் மனத்துக்கும் எப்போதும் விரிந்த நிலத்தில் விரும்பிய படி நடந்துதான் பழக்கம். முழங்கை யகல நடைபாவாடையில் முன்பின் நகரவோ, விலகவோ, இடமின்றி நடந்து பழக்கமில்லை! பழக்கப்படுத்திக் கொள்ளவும் இனிமேல் விருப்பமில்லை. அதற்கு அவசியமுமில்லை."

"அழகுக்காகவும் சுகபோக அலங்காரங்களுக்காகவும் சில மென்மையான பழக்கவழக்கங்களை மறுக்காமல் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்."

"இருக்கலாம்! ஆனால் எனக்குத் தெரியாது. அழகைப் போற்றத்தான் எனக்குத் தெரியும். அழகைக் காலடியில் மிதித்துச் சுகம் காண முயல்வதும் எனக்குப் பிடிக்காது. அழகு நம்மைக் காலடியில் போட்டு மிதித்து அடிமையாக்க முயல்வதற்கும் நான் இடங் கொடுப்பதில்லை, அம்மணி! அழகையே அடிமையாக்கவும் கூடாது. அழகுக்கே அடிமையாகவும் கூடாது. தேவையா, தேவையில்லையா, அவசியமா, அவசியமில்லையா என்று சிந்தித்துப் பாராமலே பொருத்தமின்றி எத்துணையோ சுகபோக அலங்காரங்களைப் பட்டினப் பாக்கத்துப் பெருஞ்செல்வர்கள் அநுபவிக்கிறார்கள். அவற்றை மதித்து வரவேற்க ஒரு போதும் என் மனம் துணிவதில்லை."

"இந்த மாளிகையைச் சேர்ந்த மதிப்புக்குரியவர்களையும், புதிதாக வருபவர்களையும் வரவேற்பதற்கென்றே இங்கே சில உபசார முறைகள் இருக்கின்றன. அவற்றைப் புறக்கணிக்கலாகாது!"

"உங்கள் உபசாரங்களை ஏற்றுக் கொள்வதற்கு நான் இந்த மாளிகையின் விருந்தினனாக வரவில்லை, அம்மணி! இதோ என் பக்கத்தில் நிற்கிறானே, இந்த ஏழை ஓவியனுக்கு நூறு பொற்கழஞ்சுகள் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் வந்திருக்கிறேன். ஓவியம்

வரைந்து நிறைவேறியதும் நான் போக வேண்டும்.''

'' அவ்வளவு அவசரமா உங்களுக்கு ?''

''அவசரமில்லாத எதுவுமே என்வாழ்க்கையில் இருப்பதாகத் தெரியவில்லை அம்மணீ ! என் வாழ்க்கையே ஒரு பெரிய அவசரம். என்னைத் தேடிவரும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஓர் அவசரம். நான் தேடிக்கொண்டு போகும் செயல்களும் அவசரம். என்னுடைய ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாழிகையும், ஒவ்வொரு விநாடியும் எனக்கு அவசரம் தான். நானே ஓர் அவசரம்தான். தயை கூர்ந்து விரைவாகப் படத்தை வரைந்துகொண்டு என்னை அனுப்பும்படி செய்தால் நல்லது.''

'' உங்களிடம் நிதானம் குறைவாயிருக்கிறது. பொறுமை சிறிதுமில்லை. பதற்றம் அதிகமாக இருக்கிறது.''

'' தெரிந்து சொல்லியதற்கு நன்றி ! ஆனால் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லித் திருத்தத் தகுதி வாய்ந்த பெரியவர்கள் எனக்கு இருக்கிறார்கள். நீங்கள் இந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் காரியத்தைப் பார்க்கலாம்.''

அவளுக்கு இளங்குமரன் கடக்கடப் பதில் கூறினான். எத்தனை முறை சிரித்துச் சிரித்துப் பேசினாலும் தன்னைப் பற்றிய நளினமான நினைவுகளை அவன் மனத்தில் பயிர்செய்ய முடியுமென்று தோன்றவில்லை கரமஞ்சரிக்கு. இளங்குமரன் அழகுச் செல்வனாக இருந்தான். ஆனால் அந்த அழகுநிலத்தில் அவள் இறைக்க முயன்றும் குன்றாமல் அகம்பாவம் ஊறிக் கொண்டிருந்தது. அது வற்றினால் அல்லவா அங்கே அவள் பயிர் செய்யத் துடிக்கும் இனிய உறவுகளைப் பயிர் செய்ய முயலலாம் ? கரமஞ்சரி அவனிடம் தனக்கு ஏற்பட்ட ஆற்றாமையை வெளிக் காட்டிக் கொள்ளாமல், '' வசந்தமாலை ! இவரை வற்புறுத்தாதே. எப்படி விரும்புகிறாரோ அப்படியே நடந்து வரட்டும் '' - என்று சொல்லி விட்டு வேகமாக முன்னே நடந்தாள். இளங்குமரன் தன்போக்கில் மணிமார்பன் பின்தொடரக் கம்பீரமாக வீரநடை நடந்து சென்றான். மாளிகையைச் சூழ்ந்திருந்த பூம்பொழிலில் மயில்கள் தோகை விரித்தாடிக் கொண்டிருந்தன. புள்ளிமான்கள் துள்ளித் திரிந்து கொண்டிருந்தன. சிறு சிறு பொய்கைகளில் அல்லியும் கமலமும், குவளையும் நிறையப் பூத்திருந்தன. அழகுக்காக மரஞ்செடி கொடி வைத்துச் செயற்கையாகக் கட்டப்பட்டிருந்த செய்குன்றுகள் அங்கங்கே பூம்பொழிலிடையே இருந்தன. மணிமார்பனோடு பூம்பொழிலைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்த இளங்குமரன், '' மணிமார்பா ! இங்கேயே ஓரிடத்தில் நான் நின்று கொள்கிறேன். நீ ஓவியத்தை நிறைவு செய்யத் தொடங்கு. நமக்கு மாளிகைக்குள் என்ன வேலை ? இங்கே வைத்தே படத்தை முடித்துக் கொடுத்து விட்டுப் புறப்படலாம் '' என்றான்.

மணிமார்பனும் அதற்கு இணங்கி நாளங்காடியில் இருந்தது போலவே, இங்கே இந்தச் சோலையிலும் ஒரு கொடி முல்லைப் புதரைத் தேடி அதனருகே இளங்குமரனை நிறுத்தி வரையலானான்.

அவன் வரையத் தொடங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் கரமஞ்சரி அங்கு வந்தாள். 'அடடா ! செல்வம் இருந்தால் எவ்வளவு வசதி யிருக்கிறது? அதற்குள் உடைகளையும் அலங்காரங்களையும் மாற்றிக் கொண்டு புதுமைக் கோலத்தில் காட்சி யளிக்கிறாளே' என்று அவளைப் பார்த்ததும் இளங்குமரன் நினைத்தான். 'முல்லைக்கு இப்படியெல்லாம் அலங்காரம் செய்து கொள்ள வாய்ப்பிருந்தால் அவள் இன்னும் எவ்வளவு அழகாக இருப்பாள்?' என்றும் கற்பனை செய்து பார்க்க முயன்றது அவன் மனம்.

ஆனால் அடுத்த கணம் கரமஞ்சரி அவனை நோக்கிக் கேட்ட கேள்வி திடுக்கிட்டுத் தூக்கிவாரிப் போடச் செய்தது. ஓவியனும் திடுக்கிட்டான். இருவரும் அளவற்ற திகைப்பு அடைந்தார்கள். அவள் கேட்டது இதுதான் : ''ஐயா! நீங்கள் யார் ? எதற்காக இங்கு வந்தீர்கள் ? உங்களை யார் உள்ளே வர விட்டது ? படம் எழுதிக் கொள்ள இவ்வளவு பெரிய பட்டினத்தில் வேறு இடமா கிடைக்கவில்லை ?'' என்று சினத்தோடு கேட்டாள் அவள்.

'ஒருவேளை அவள் சித்த சுவாதீனமில்லாத பெண்ணோ ?' என்று சந்தேகம் கொண்டு இளங்குமரனும், மணிமார்பனும் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தனர். முகத்தையும் பேச்சையும் பார்த்தால் அப்படியில்லை என்று உறுதியாகத் தெரிந்தது. 'வேண்டுமென்றே தன்னைப் பழிவாங்கும் நோக்குடன் வம்பு செய்கிறாளோ' என்றெண்ணிக் கொதிப்படைந்த இளங்குமரன், 'செல்வர்களுக்கு உடை மாறினால் குணமும் மாறிவிடுமோ அம்மணீ ?' என்று சூடாகக் கேட்க வாய் திறந்தான். ஆனால் அப்போது அவனை அதைக் கேட்கவிடாதபடி எதிர்ப்பக்கத்தில் இன்னொரு பெரிய அதிசயம் நிகழ்ந்தது. (தொடரும்)



இது புதியது-நியாயமான விலை!

மெரிட்

தையல் மெஷின்

பல வருஷங்களுக்கு உங்களுக்கு தையலில் மகிழ்ச்சியளிக்கக் கூடியது—தவிர, பிரசித்தமான ஸிங்கர் கம்பெனியாரின் பராமரிப்பின் வசதியும் உண்டு.

ஸிங்கர் ஸூயிங் மெஷின் கம்பெனி,

மற்றும் அவர்களால் நியமிக்கப்பட்ட டீலர்களால் விற்கப்படுகிறது.

ஸ்ரீ குருதேவரின் குரல்

பேராசிரியர்: அ. சீநிவாச ராகவன்

தாயின் பரிவு

பெரியாழ்வார் திருமொழியில், 'கண்ணனை நீராட அழைத்தல்' என்ற பதிகம் ஒன்று நீங்கள் பார்த்திருக்கலாம். மிக அழகிய பாடல்கள். இப் பாடல்களில், பெரியாழ்வார், தம்மை யசோதையாகப் பாவித்துக் கொண்டு, 'கண்ணனை நீராட வா' என்று அழைக்கிறார். வெண்ணெய் அளைந்த குணுங்கு, புழுதியில் விழுந்து புரண்டு விளையாடிப் பெற்ற கறைகள், இப்படியாகக் கண்ணனுக்கு உடம்பெல்லாம் திட்டுத்திட்டாக அழுக்குப் படிந்திருக்கிறது. யசோதைக்குப் பொறுக்கவில்லை. 'ஐயோ, இவ்வளவு அழுக்கோடு இருந்தால் குழந்தைக்கு உடம்பில் தினவு எடுக்குமே, எப்படித் தூங்கும்?' என்று வேதனைப் படுகிறாள். 'வாடா, கண்ணா, வா, உனக்கு எண்ணெய் தேய்த்து நீராட்டுகிறேன்' என்று பரிவோடு அழைக்கிறாள்.

ஆனால் இந்தப் புழுதி அளைந்த மேனிக்குத் தனி அழகு ஒன்று இருக்கிறது. தாயின் கண்ணுக்கு மட்டுமே இது தெரிகிறது.

பூணித் தொழுவினில் புக்குப்
புழுதி அளைந்த பொன் மேனி
காணப் பெரிதும் உகப்பன்.

'தொழுவில் புகுந்து, பசுக்களோடும், கன்றுகளோடும் விளையாடி, புழுதியில் தோய்ந்து வந்த காரணந்தானோ என்னவோ, குழந்தையின் மேனி பொன் மேனியாக மின்னுகிறது. இதைப் பார்த்துக்கொண்டே இருந்தால் போதும்' என்று பூரித்துப் போகிறாள் யசோதை. உடனே வேறு எண்ணம் வருகிறது. 'எனக்கென்னவோ, என் கண்ணன் புழுதியாடி நிற்பதுதான் அழகாய்த் தோன்றுகிறது. என்ன அழகு, என்ன அழகு! ஆனாலும், மற்றவர்களுக்கு இது தெரியவா போகிறது? என்ன அழுக்கு! இப்படியும் ஒருத்தி குழந்தையை வளர்ப்பாளா என்று ஏசுவார்கள்.

புழுதி அளைந்த பொன்மேனி
காணப் பெரிதும் உகப்பன்
ஆகிலும் கண்டார் பழிப்பர்.

என்று நினைத்துக் குழந்தைக்கு நீராட்டத் துணிகிறாள்.

'குழந்தையை அழுக்கு என்று ஒதுக்குகின்றவர்களுக்கு, குழந்தையைப் பற்றி, அன்பைப் பற்றி, அது காட்டும் அழகைப் பற்றி, என்ன தெரியும்? குழந்தையைப் பெற்றறியாத பாவிகள்! அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசுவார்கள். அவர்கள் இருக்கும் இடத்துக்கே என் குழந்தை போகப்படாது. போகாதேயடா கண்ணா, அங்கே போகாதே. அந்தப் பாவிகள் முகத்தில் விழிக்காதே. இங்கே வந்துவிடு' என்றும் ஒரு தாய் எண்ணுவாள். இப்படியும் எண்ணுகிறாள் பெரியாழ்வாருடைய யசோதை :

போதர் கண்டாய் இங்கே
போதர் கண்டாய்.
போதரேன் என்னாதே
போதர் கண்டாய்.
ஏதேனும் சொல்லி
அசலகத்தார்
ஏதேனும் பேச நான்
கேட்க மாட்டேன்.

[போதர் கண்டாய்-வந்துவிடு; போதரேன்-வரமாட்டேன்; என்னாதே - என்று சொல்லாமல்; அசலகத்தார் – வேற்று வீட்டார், அயல் அகத்தார்.]

இந்த யசோதையைப் போன்ற தாய் ஒருத்தியைக் குருதேவர் தாகூருடைய பாடல் ஒன்றில் நாம் சந்திக்கிறோம். குழந்தை அழுதுகொண்டு வருகிறது. முகத்திலே மை பட்டுக் கறை; கிழிந்த சட்டை; கையில், கசிந்தோடும் தித்திப்புப் பணியாரம். 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்கிறாள் தாய். அவளுக்குத் தெரிந்துவிடுகிறது. ஊரார் குழந்தையை ஏதோ திட்டி அதட்டி இருக்கிறார்கள் என்று. 'குழந்தையின் முகத்திலே அழுக்கு: அதனால் என்ன, சந்திரனுக்குக் களங்கம் இல்லையா? அதைப் போய் யாராவது குறை சொல்கிறதுதானே?'

*** கண்ணே நீ கண்கலங்கி**
நிற்பதேன்? உன் மனமும்
புண்ணாக ஏதேதோ
பொல்லாங்கு சொல்லுகிறர்.

எப்போதும் உன்குற்றம்
ஏதேனும் காண்கின்றார்.
அப்பா, கொடியவர்கள்
ஆங்காரப் பாவியர்கள்

உன்றன் விரலில்
முகத்திலே மை சிந்து
சிந்திவிட்டால் என்னவாம்?
சீச்சீ, அழுக்கென்பார்

கோட்டி மையைத் தன்முகத்தில்
வட்டநிலா வந்ததென்றால்
தீட்டி அழுக்கென்(று) அதனைச்
சீறத் துணிவாரோ?

'குழந்தையின் சட்டை கிழிந்து தொங்குகிறது: அதனால் என்ன, ஏதோ விளையாட்டில் கிழிந்து போயிற்று. இது ஒரு குற்றமா? கிழிந்து தொங்கும் மேகத்துக்குள்ளிருந்து, காலைப் பொழுது தன் பொன் முகத்தைக் காட்டுகிறதே, அதை யாராவது குற்றம் சொல்லுகிறார்களா?'

குற்றங்கள் எத்தனையோ
கூறுவார். ஒன்றுமிலா
அற்பத்திற் கெல்லாம்
அதட்டுவார் சின்னக்

குழந்தை நீ ஆடும்
விளையாட்டில் ஏதோ
கிழிந்த(து) உன் சட்டை என்றால்
ஓகோ குடிமுழுகிப்

போச்சென்பார்: கந்தலைப்
பீடையென்று தூற்றுவார்.
சீச்சீ, இவர்க்(கு) இந்தச்
சீற்றமும் ஆகாது.

மேலே கிழிந்து தொங்கும்
மேகத்திற் குள்ளிருந்து
காலை சிரித்தால்
களங்கம் அதிற் காண்பாரோ?

'கையிலே மிட்டாயை வைத்துக் கொண்டு, அதைக் கடித்துக் கடித்து, கையில் எச்சில் ஒழுக நிற்கிறது குழந்தை. அதனால் என்ன? குழந்தை என்றிருந்தால் அதற்குத் தித்திப்புப் பிடிக்காமலா இருக்கும்? ஏதோ வைத்துக்கொண்டு தின்னுகிறது. இவர்களுக்கு என்னவாம்? தித்திப்பில் ஆசை வைப்பது ஒரு குற்றமா? குற்றமானால், நானும் ஒரு குற்றவாளிதான். பார்க்கப் பார்க்க, முத்தமிட முத்தமிட, தித்திக்கிறதே என் குழந்தை! இந்தத் தித்திப்பில் தெவிட்டாத ஆசை வைத்திருக்கிறேனே, நானும் ஒரு குற்றவாளிதான். என்னை என்னவெல்லாம் சொல்வார்களோ இந்தப் பாவிகள்!'

எண்ணி எண்ணி உன்பிழைகள்
எல்லாம் கணக்கெடுப்பார்.
கண்ணே, அவர் சொல்லைக்
காதிலே வாங்காதே.

தித்திப்பில் ஆசைநீ
வைத்தால் அதற்காக
மெத்தப் பெருந்தீனிக்
காரியென்று கத்துவதோ?

சித்தம் கலங்கி இவர்
சீறுகிறார். விட்டுவிடு.
தித்திப்பைத் தேடுவது
தீமை பேராசை என்றால்

தித்திக்கும் உன்மேல்
தெவிட்டாத ஆசைவைத்த
பித்தி எனக்(கு) என்னென்ன
பேர்வைத்(து) அழைப்பாரோ?

தாயின் கனிவும், அதனால் அவளுக்குக் கிட்டும் தனி நோக்கும், உலகமே தூற்றினாலும், அதைப் பொருட்படுத்தாமல், தன் குழந்தையை எடுத்தணைக்கும் அவள் பரிவும் இந்தப் பாடலில் பேசுகின்றன. இந்தத் தாய்மையின் எல்லையற்ற பரிணாமமே இறைவனுடைய பெருங்கருணை என்று பாடுகிறார் ஆழ்வார். திருமகளே குற்றம் சொன்னாலும், தன் அடியார்களைப் பொறுத்தவரையில் திருமால் அதை ஏற்க மாட்டானாம்:


தன் அடியார் திறத்தகத்து,
தாமரையாள் ஆகிலும்
சிதகு உரைக்குமேல்
என் அடியார் அது செய்யார்
செய்தாரேல் நன்று செய்தார்
என்பர் போலும்......

[சிதகு — குற்றம்]


இப்படி இறைவனுடைய தாயன்பைப் பாடுகின்றவர், இறைவனையே குழந்தையாக எண்ணி, வாத்ஸல்ய பாவத்தால் பேரின்பத்தைத் தொட்ட பெரியாழ்வார்.

இவருடைய குரலின் சாயல், குருதேவர் தாகுருடைய பாடலிலும் நமக்குத் தென்படுகிறது.

The Cresent Moon : Defamation
வளர்பிறை : வீண் பழி.



குழந்தைகள் எல்லோரும் விரும்புவது ப்ரௌன் அன்டு போல்ஸனில் தயாரித்த ப்ளாமாஞ்ச்



ப்ரௌன் அன்டு போல்ஸன் பிளேவர்ட் கார்ன் ப்ளவர் வாய்க்கு ருசியான ஒரு சிறந்த பதார்த்தம்

ப்ரௌன் அன்டு போல்ஸன் ப்ளேவர்ட் கார்ன் ப்ளவரினால் இதைத் தயாரிக்கும்போது எப்பொழுதுமே மிகச் சிறந்த பதார்த்தமாகிறது. ஏனென்றால் ப்ரௌன் அன்ட் போல்ஸனின் கார்ன் ப்ளவர் மிருதுவாக, சரியான அளவுக்குக் கலக்கக்கூடியது. ஒருக்காலும் கட்டி பிடிப்பதில்லை. மேலும் இது சுவை மிகுந்த 5 வித வாசனைகளில் கிடைக்கின்றது. வனில்லா, ராஸ்பெரி, கேரிமல், ஸ்ட்ருபெரி, மற்றும் பைனாபிள் வாசனைகளில் கிடைக்கின்றன. ப்ரௌன் அன்டு போல்ஸனின் மற்ற சாதனங்கள் என்னவென்றால் – பேட்டன்ட் கார்ன் ப்ளவர், ஜெல்லி, வொய்டி கஸ்டர்ட் மற்றும் கஸ்டர்ட் பவுடர்.



ப்ரௌன் அன்டு போல்ஸன் பிளேவர்ட் கார்ன் ப்ளவர்

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) ப்ரைவேட் லிட்.,



இலவசம்: இங்கிலீஷ், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, குஜராத்தி, மலையாளம், வங்காளம், மராத்தி, அல்லது உருது பாஷைகளில் பிரசுரிக்கப்பட்ட அபூர்வமான சமையல் புத்தகம் இலவசமாக வேண்டுவோர் இதுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பவும். (வேண்டாத பாஷையை அடித்துவிடவும்).

தபால் செலவிற்காக 25 ந. பைசா விலையுள்ள தபால் ஸ்டாம்பு நான் இத்துடன் அனுப்புகிறேன்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/குமாரி ....


....


விலாசம் ....

டிப்பார்ட்மெண்ட் நம்பர்: KLK2
கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.
த. பெ. நெ. 994, பம்பாய்—1.

இந்த இலவச அளிப்பு இந்தியாவிற்கு மாத்திரம்தான்.

இந்தியாவிற்கான ஏஜெண்டுகள்:
பாரி அன்டு கோ. லிட்.


சிறுவர்கள்
முகம் மலர
சிறந்த பரிசு
Nutrine
மிட்டாய்கள்
நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்
சித்தூர் (ஆந்திரப் பிரதேசம்)
NC-59-3.


சுத்தமான
வைரங்கள்
பாபாலால் அண்டு கோ
பொன் வெள்ளி நகை வியாபாரிகள்
ரட்டன் பஜார் சென்னை. 3

மஞ்சள் ரோஜா

கனகு

ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பெயரே இல்லாதிருந்த அந்தப் பகுதி இப்போது பேரூராக மாறியிருந்தது. கம்பளையிலிருந்து அந்த இடம் இரண்டு கல் தொலைவுதான். வண்டியிலிருந்து இறங்கிய மணிவண்ணன் கால்நடையாகவே வந்து கொண்டிருந்தான் அந்த இடத்தை—ஊரை நோக்கி. எத்தனைதான் வீடுகள் பெருகி விட்டாலும், எவ்வளவுதான் நிலைமைகள் மாறி விட்டாலும் அந்த வட்டாரத்தின் பழைய சூழ்நிலையும், இயற்கை எழிற் காட்சிகளும் அப்படியே அசல் அழியாமல் இருந்தன. அதோ பாட்டையோரம் சிறு சிறு செந்நெற் கழனிகளெல்லாம் தென்படுகின்றன. உயர்ந்து, வளர்ந்து நிற்கும் ரப்பர் மரக்காடு ஒருபுறம். அதனோடு போட்டியிடுவது போல் நெடிதுயர்ந்து நிற்கும் பாக்கு மரங்களும், தென்னை மரங்களும் கலந்து நிறைந்த சோலை மறுபுறம். அவற்றிலிருந்து வெளிப்படும் மெல்லிய பூங்காற்று. எல்லாமாகச் சேர்ந்து மணிவண்ணன் உள்ளத்தில் பழைய நினைவுகளைக் கிளறின.

ஊருக்குள் நுழைந்து ஒவ்வொரு வீடாக ஒவ்வொரு கடையாகப் பார்த்துக்கொண்டு வந்தான் மணிவண்ணன். பழைய சுவடு ஒன்றுமே தென்படவில்லை. அவன் எந்த இடத்தை மனத்தில் வைத்துக்கொண்டு ஓடி வந்தானோ, அந்த இடம் தன் பழைய அடையாளத்தையே வெளிக் காட்டிக் கொள்ள முடியாமல் பெரியதொரு மாறுதலுக்குட்பட்டு, உருவும், நிலையும் தெரியாமற் கிடந்தது. அவன் யார் யாரைக் காணலாமென்று மிகவும் ஆவல் கொண்டிருந்தானோ, அவர்களைப் பற்றிய விவரத்தையோ, செய்தியையோ அவனும் தெரிந்துகொள்ள முடியாமல் திகைத்து நிற்கும்படி நேர்ந்தது. அவன் உள்ளம் வேதனைக்காடாகியது. உள்ள உளைச்சல் பெருமூச்சாக வெளிவர அங்கே அருகிருந்த தேநீர்க்கடையில் போய் அமர்ந்தான் மணிவண்ணன்.

அந்தத் தேநீர்க் கடையிலிருந்தோர் எல்லாம் சிங்களவர்போலவே தென்பட்டனர். அவன் உள்ளம் எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் கடந்த காலத்தைப் பரபரவென்று பற்றி இழுத்துக்கொண்டு வந்தது.

காட்டில் திரிந்து கொண்டிருந்த ஒருவனை நாட்டுக்குக் கொண்டு வந்து, நடுத்தெருவில் நிறுத்தி வைத்ததைப்போல் திக்குத்திசை தெரியாமல் திகைத்து நின்று கொண்டிருந்த அந்த இளைஞனைப் பார்த்து, "தம்பி, நீ எந்த ஊர்?" என்று கனிவாகக் கேட்கும் ஒருவர் அங்கே இருப்பார் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.


அவன் நடுத்தெருவில் நின்று கொண்டிருந்தான். அவர் பாட்டை வழியே போய்க் கொண்டிருந்தார். அவன் நின்ற நிலையினையும், பேந்தப் பேந்த விழித்த தன்மையையும் பார்த்து அவனிடம் தம்மையறியாமல் ஏற்பட்ட கனிவையும், இரக்கத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டு தம் வழியே போகமுடியாமல்தான் அவனை அணுகி அவ்வாறு வினவினார் வைத்தியலிங்கம்.

"எனக்கு இருப்பிடம் வதுளைக்கு அருகில். இங்கு நாங்கள் உல்லாசப் பயணம் வந்தோம். மாவலிகங்கை இந்தப் பகுதியில் வாரி வழங்கும் சிறப்புக் காட்சியைக் கண்டு களிக்க வேண்டுமென்ற அவாவினால் தூண்டப் பெற்று, இங்கு எல்லாரும் இறங்கிக் கரை வழியாக நடந்து கொண்டிருந்தோம். உடன் வந்த எல்லாரும் ஓரிடத்தில் அமர்ந்தபோது, நான் மட்டும் அங்கு அமராமல், என்போக்கில் கரை வழியே நடந்து கொண்டிருந்தேன். மாவலியாற்றின் இருபுறமும் அமைந்திருக்கும் எழிலோவியக் காட்சியால் கவரப்பட்ட நான் காலம் போவதையும் சட்டை செய்யாமல் வெகுநேரம் என்னை மறந்து நின்று கொண்டும், நடந்துகொண்டும் இருந்து விட்டேன்....மெல்லத் திரும்பி எல்லோரும் அமர்ந்திருந்த இடத்தை நோக்கி வந்தேன். மனம் 'திக்' என்றது. அங்கு ஒருவரையும் காணவில்லை. ஊர்தி நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு விரைந்து ஓடினேன். எல்லாரும் போய் விட்டிருந்தார்கள். நான் கூட்டத்தோடு இருப்பதாக எண்ணிக் கொண்டு அவர்கள் கிளம்பிப் போய் விட்டார்கள். என்ன செய்வது என்றே எனக்குத் தோன்றவில்லை. என்னுடைய உடைகள், மற்றப் பொருள்கள், கைச்செலவுக்கான பணம் உட்பட அனைத்தும் வண்டியிலேயே அகப்பட்டுக் கொண்டு விட்டன" என்று தான் தவிப்புக்கு ஆளாகி நிற்கும் நிலையினை எடுத்துச் சொன்னான் இளைஞன்.

"சரி, பயப்படாதே! என்னுடன் வா! வதுளை ஒன்றும் இங்கிருந்து வெகு தொலைவு இல்லையே! ஒருவேளை போனவர்கள் உன்னைத் தேடிக்கொண்டு திரும்பி வந்தாலும் வரலாம். அப்படி அவர்கள் வராவிட்டால், நாளை அல்லது மறுநாள் நீ இங்கிருந்து புறப்படலாம். அதற்கான ஏற்பாடுகளை நான் செய்கிறேன்" என்றார் வைத்தியலிங்கம்.

அந்த இளைஞனுக்கு ஒரே திகைப்பாக இருந்தது. நீண்ட நாட்கள் பழகியவர் போல் தன்னிடம் இரக்கம் உரை கூறியதோடு, தன்னையும் தம்மோடு அழைக்கிறாரே என்று வியந்து நின்றான். வேறுவழி இல்லையே! வைத்தியலிங்கத்தைப் பின்தொடர்ந்தான்.

வைத்தியலிங்கம் பெருஞ் செல்வர் அல்லர். ஒரு சாமானியப் பலசரக்குக் கடைக்காரர். வீடுகள் அதிகம் இல்லாத அந்தத் தனி இடத்தில்தான் அவர் கடை வைத்திருந்தார்.



அக்கம் பக்கத்திலுள்ள சிற்றூர் மக்களும், தோட்டத் தொழிலாளரும் அங்கு அடிக்கடி வந்து போவார்கள். கடை எப்போதும் கலகலப்பாகவே இருக்கும்.

மாலை வந்தது. பள்ளிச் சிறுவர் இருவர் கடைக்கு வந்தனர். அச்சிறுவர் இருவரும் வைத்தியலிங்கத்தின் பிள்ளைகள். பள்ளி வேலை போக எஞ்சிய வேளைகளில் கடையில் வைத்தியலிங்கத்துக்குத் துணையாக இருந்து பணியாற்றுவது அவர்கள் வேலை.

''தம்பி! வீட்டில் போய் இருக்கிறாயா?'' என்று கேட்டார் வைத்தியலிங்கம் இளைஞனைப் பார்த்து.

அவன் பேசாமல் 'சரி' என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினான். மூத்த பையன் கடையில் இருந்து கொண்டான். இளையவன் அவனுடன் கிளம்பினான்.

ரப்பர் மரக் காட்டின் ஊடே வளைந்து வளைந்து செல்லும் சிறியதொரு பாட்டை வழியே அவர்கள் சென்றார்கள். அந்த ரப்பர்க் காட்டின் முடிவிடத்தில் தான் வைத்தியலிங்கத்தின் இல்லம். அந்தப் பகுதியில் கும்பல் கும்பலாகப் பாக்கு மரங்களும், தென்னை மரங்களும், வருக்கை மரங்களும், ஈரப் பலா மரங்களும் தொலைவுக் கோடிட்டத்திலாக எழில் காட்டி நின்றன. ஒவ்வொரு மரக் கும்பலுக்கும் ஒன்றாக, தள்ளித் தள்ளிச் சில வீடுகளும், குடிசைகளும் தென்பட்டன. சுற்றிலும் குத்துக் குத்தாக நின்ற கத்தாழைகள் வேலியாய் அமைந்த தோட்டம் ஒன்றுக்குள் சிறுவன் இளைஞனை அழைத்துச் சென்றான். அந்தத் தோட்டத்தின் மத்தியில், ஒரு பகுதி தகரத்தாலும், மற்றொரு பகுதி புல்லாலும் கூரை வேயப்பட்ட வீடு ஒன்று.

பையன் விரைந்து வீட்டுக்குள் சென்றான். பாய் ஒன்று கொண்டு வந்து திண்ணையில் விரித்தான். இளைஞன் அமர்ந்தான். சற்று நேரத்தில் அந்தச் சிறுவனின் அன்னை, வைத்தியலிங்கத்தின் மனைவி வெளியே வந்தாள். கையில் தேநீர்க் குவளையுடன் உறவினன் ஒருவனை வரவேற்பது போல் இளைஞனை அவள் வரவேற்றாள். தேநீரை எதிரில் வைத்து ''அருந்துங்கள்'' என்றாள். இளைஞன் தேநீரை எடுத்துக் கொண்டான்.

அவன் எதிரில் பாடப் புத்தகங்களைப் பரப்பி வைத்துக் கொண்டு பையன் படிக்கத் தொடங்கினான்.

''தம்பி, டே தம்பி'' என்று ஒரு குரல், துடிப்போடு ஒலிக்கும் குரல் வெளியிலிருந்து கேட்டது. பையன் நிமிர்ந்து பார்த்து, ஏன் என்று கேட்குமுன் ''நாங்கள் நாளைக்குப் 'பிக்னிக்' போகிறோம்! உனக்குத் தெரியுமா?'' என்று உரத்துக் கேட்டுக் கொண்டு அருகில் வந்தது அந்தக் குரலுக்குரிய எழிலோவியம்.

இளைஞன் நிமிர்ந்து பார்த்தான். பையன் நிமிர்ந்து பார்த்தான். அவன் அப்படியே வெளியில் நின்றான். அவனை அவள் அங்கு எதிர்பார்த்தாளா என்ன? ஏனோ 'கப்சிப்' என்று அடங்கிப் போய் விட்டாள் அவள்.

ஒரு கையில் புத்தகக் கட்டைச் சுமந்தபடி மற்றொரு கையில் குடையை ஏந்திக்கொண்டு வெளி வாயிலில் திகைத்து நின்றாள் அவள்.

ஒல்லி என்றால் ஒல்லியும் இல்லாமல், பருமன் என்று சொல்வதற்கு இடமும் இல்லாமல் மாணவக் கோலத்தோடு, திருதிருவென்று விழிக்கும் விழியோடு காட்சியளித்தான் அவன். அந்த இளைஞனை அவள் ஏற இறங்கப் பார்த்தாள். மெல்ல வீட்டுக்குள் நுழைந்தாள்.

இளைஞன் பையனைப் பார்த்தான். "இது தானுங்க எங்க அக்கா" என்று கூறினான் பையன் அவன் கேட்காமலே. "கல்லூரியில் படிக்குதுங்க."

இளைஞன் ஒன்றும் பதில் பேசாமல் தலையை ஆட்டினான். பையன் மேலே ஏதாவது சொல்ல நினைத்தானோ என்னவோ! இளைஞனுடைய மௌனத்தால் ஊக்கம் குறைந்தவனாக, ஒருமுறை அவனை நிமிர்ந்து பார்த்து விட்டுத் திரும்பவும் பாடப் புத்தகங்களைப் புரட்டினான் அவன்.

மறுபடியும் அவள் — மஞ்சுளா — வெளியில் வந்தாள்.

"அக்கா! இவங்க எங்கே இருந்து வந்திருக்காங்க தெரியுமா?" என்று அவளைக் கேட்டான் பையன்.

"தெரியாதே" என்று அவள் நேரிடையாக இளைஞனைப் பார்த்தாள். பிறகு திண்ணையின் மறுகோடியில் சுவரோடு சாய்ந்தபடி, கால்களைத் தரையில் ஊன்றிக் கொண்டு அமர்ந்தாள்.

"வதுளையிலிருந்து வந்திருக்காங்க. அப்பா சொன்னாரு."

'அப்படியா!' என்று கேட்பதுபோல் அவள் அவனைப் பார்த்தாள்.

"ஆமாம், வதுளையிலிருந்துதான்; சுற்றுலா வந்தோம்" என்றான் அவன்.

"மற்றவர்கள் எல்லாம்......"

"அவர்கள் எல்லாம் போய்விட்டார்கள். நான் மட்டும் இங்கே அகப்பட்டுக் கொண்டேன்!"

"என்ன தம்பி அகப்பட்டுக் கொண்டேன் என்கிறாய்! இது உன் வீடு போல........." என்ற குரல் கேட்டு வாயில்பக்கம் திரும்பினான் அவன். வைத்தியலிங்கம் கடையிலிருந்து வந்து கொண்டிருந்தார்.

அவரும் திண்ணையில் வந்து அமர்ந்தார். பையன் பாடப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு பின்னால் நகர்ந்து போய் அமர்ந்து கொண்டான். வைத்தியலிங்கத்தின் துணைவியும் வெளியில் வந்தாள். இளைஞனின் கதையை — அவன் வைத்தியலிங்கத்திடம் சொன்னவை, பிறகு அவர் கண்டவை முழுதுமாக அவர் மற்றவர்களிடம் விவரித்துச் சொல்லத் தொடங்கினார்.

இடை இடையே அந்தப் பையனும், மஞ்சுளாவும் குறுக்குக் கேள்விகள் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே மஞ்சுளா எழுந்து வெளியில் புறப்பட்டாள். வைத்தியலிங்கம் கடைக்குப் போய்விட்டார். முதல் நாள் எங்கெங்கோ அலைந்து திரிந்த அலைச்சலும், இரவு நெடுநேரம் வரை எதையோ சிந்தித்தபடி தூக்கம் பிடிக்காமல் இருந்தமையாலும் மணிவண்ணன்—அந்த இளைஞன்—, காலையில் நெடுநேரம் உறங்கிக் கொண்டிருந்து விட்டான். எழுந்து பார்க்கும்போது பொழுது நன்றாகப் புலர்ந்திருந்தது. வீடு அரவம் அடங்கிக் கிடந்தது.

மணிவண்ணன் வெளியில் வந்தான். மஞ்சுளா எதிர்ப்பட்டாள்.

"இப்போதுதான் எழுந்து வருகிறீர்களா?" என்றாள் அவள். அதிகாலையில் கிளம்பிப் போனவள் அப்போதுதான் திரும்பி வந்து கொண்டிருந்தாள். மணிவண்ணன் அவளை எதிர்பார்க்கவில்லை.

"நீங்கள் 'பிக்னிக்' போவதாகச் சொன்னீர்களே! போகவில்லையா?"

"போகவில்லை. வரச் சந்தர்ப்பம் இல்லை என்று சொல்லிவிட்டு வரத்தான் இப்போது போயிருந்தேன்."

"ஏன்?"

"........."


"நடந்தே போக வேண்டிய பயணமோ?"

"ஆமாம், மலைமேல் ஏறிப்போக வேண்டும். அதற்காக நான் மலைக்கவில்லை.—அதோ தெரிகிறது பாருங்கள் மலை—" என்று சற்றுத் தொலைவில் தென்பட்ட மலையை வருக்கை மரங்களின் இடுக்கு வழியே சுட்டிக் காட்டினாள் மஞ்சுளா.

"இங்கிருந்து பார்க்கும்போதே அந்த மலை அழகாகத் தென்படுகிறதே. அங்கு போயிருக்கலாமே!" என்றான் மணிவண்ணன்.

"போயிருக்க வேண்டியதுதான். இந்தப் பிக்னிக் திட்டத்துக்கே நான்தான் காரணம். மனம் ஒன்றும் இன்று சரியாக இல்லை...... அதனால்தான் நின்று விட்டேன்."

"சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் நான்கூட அங்கு



போயிருப்பேன். இப்படிப்பட்ட மலைக் காட்சிகளைக் காண்பதற்கு எனக்கு எப்போதுமே அதிக விருப்பம்.''

'' உங்களுக்கென்ன! எங்கு வேண்டுமானாலும் போய்ப் பார்த்து வரலாம்!'' என்றாள் மஞ்சுளா.

தான் ஒரு ஆணாகப் பிறக்காமல் போனது அவ்வேளை அவளுக்கு வருத்தமாகத் தோன்றியது போல் அவள் குரல் ஒலித்தது.

மணிவண்ணன் வாய்விட்டுச் சிரித்தான்.

'என்னைப் போல்தான் இவளும் பித்தம் பிடித்தவளாக இருக்கிறாள்;—மலைக்காட்சிகள், இயற்கை வனப்புகள், புதிய புதிய இடங்கள் ஆகியவற்றைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று அடிக்கடி எழுகின்ற ஆசையாகிய பித்தம்' என்று அவன் மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

'' இன்னும் நீங்கள்....?'' என்று பாதியோடு நிறுத்தினாள் மஞ்சுளா.

'' குளிக்கவில்லை'' என்று அவள் வினவ வந்த பாதியை முடித்துவிட்டு, '' குளிக்க வேண்டும்!'' என்றான் மணிவண்ணன் வேண்டுகோள் விடுப்பவன் போல்.

'' வெந்நீர் போட்டுத் தரட்டுமா?''

இவ்வாறு கேட்டு விட்டு மஞ்சுளா வீட்டுக்குள் செல்லத் தொடங்கினாள்.

'' இல்லை, இல்லை. தண்ணீரில் குளிப்பதுதான் விருப்பம். வெயில்தான் நன்றாக அடிக்கின்றதே இன்று.''

'' அதற்கும் வீட்டுக்குள்தானே போக வேண்டும். வாருங்கள்.''

'' இல்லை,—இங்கு ஆறோ, குளமோ...''

'' ஓ,—இங்கு அருகில் ஆறு இல்லை. குளம் இல்லை. ஆனால், அழகான ஓடை ஓடுகிறது. அது குளிப்பதற்கு வசதியாகவும் இருக்கின்றது. 'பீலி' என்று சிங்களவர்கள் சொல்வதுதான் உங்களுக்குத் தெரியுமே!—ஆள் உயரத்திலிருந்து ஓடை நீர் கீழே ஒழுங்காகக் கொட்டுவதற்குக் குழாய் வைத்திருக்கிறார்கள். அங்கு குளிப்பதற்கு நல்ல வசதி. நான்கூட அங்குதான் குளிப்பது வழக்கம். வாருங்கள்.''

இரண்டு அடி எடுத்து வைத்தாள் அவள். 'ஓகோ, சோப்பு, துண்டு எல்லாம் எடுத்து வரவேண்டுமா?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, '' நில்லுங்கள் '' என்று அவனிடம் கூறிவிட்டு வீட்டுக்குள் ஓடினாள்.

இருவரும் ஓடை நோக்கிச் சென்றனர். தொலைவில் நின்றபடி ஓடையைக் காட்டி விட்டு மஞ்சுளா பாறை யொன்றின்மீது அமர்ந்து கொண்டாள்.

குளிக்கச் சென்ற மணிவண்ணன் அந்தச் சலசலக்கும் சிற்றோடையின் எழிற் காட்சியைப் பருகிக் கொண்டு நின்றான். 'எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நீ நிற்கும் நிலையைத் தொலைவில் இந்தப் பாறையின்மீது அமர்ந்தபடி நான் பார்த்துக் கொண்டே யிருப்பேன்' என்று சொல்பவள் போல் அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள் மஞ்சுளா. எவ்வளவு நேரந்தான் அவனால் அப்படி நின்று கொண்டிருக்க முடியும்? சுற்றுச் சூழ்நிலை அதற்கு இடம் கொடுத்துக் கொண்டே போகுமா என்ன?


அவர்கள் இருவருக்கும் அன்று பொழுது போவதே தெரியவில்லை. தான் வந்திருக்கும் இடம் வேற்றிடம் என்பதை மறந்துவிட்டான் மணிவண்ணன். மணிவண்ணனைப் புதிய மனிதனாகக் கருதவில்லை மஞ்சுளா. நீண்ட நெடுநாட்களாக அவனோடு பழகி விட்டவள் போல் அவனிடம் கேலியும், கிண்டலுமாகப் பேசினாள்; கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள். இருவரும் சிறு குழந்தைகளாக மாறி விட்டனர். அடிக்கடி மஞ்சுளாவின் வேலைகளில் குறுக்கிட்டு, அவளிடம் ஏதாவது சொல்லிக் கொண்டிருக்கும் அவள் அன்னை கூட அன்று அவளிடம் ஏனோ எந்தக் குறுக்கீடும் செய்யவில்லை. அவள் போக்குப்படி விட்டு, வேடிக்கை பார்க்க விரும்பினாள் போலும் அந்த அன்னை.

விடுமுறை நாட்களில் பொழுதுபோக்குக்காகவும், மன மகிழ்வுக்காகவும் தோட்டத்தின் ஒரு புறத்தில், வீட்டை அடுத்து, நிழலில்லாத ஓரிடத்தில் ரோஜாச் செடிகள் சிலவற்றை வைத்து வளர்த்து வந்தாள் மஞ்சுளா. அந்தச் செடிகள் சிறந்த பாதுகாப்புடனும், கவனிப்புடனும் வளர்க்கப்பட்டு வந்தன. அவை எப்போதும் பூத்துக் குலுங்கிக்கொண்டு நிற்கும். நல்ல கருஞ்சிவப்பு ரோஜாக்கள் ஒரு வரிசை. சாதாரணச் சிவப்பு ரோஜாக்கள் ஒரு வரிசை. வெள்ளை வண்ண ரோஜாக்கள் ஒரு வரிசை. மற்றொரு வரிசையில் நான்கு வகை ரோஜாக்களையும் ஒரே செடியாகப் பதியம் கட்டி ஒட்டு வேலை செய்திருந்தாள் அவள். அவற்றை மிகத் திறமையான கவனிப்புடனும், பாதுகாப்புடனும் வளர்த்து வைத்திருந்தாள். சாதாரணமாக ஒரே வகை ரோஜாவை ஒரு செடியில் பார்ப்பதே எழில் மிகுந்த காட்சி. நான்கு வகை ரோஜாக்கள் ஒரே செடியில் பூத்து நிற்கும் வண்ண வனப்பினைக் காண்பது பின்னும் சிறப்புடையது. அந்தச் சிறப்புக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் அந்தச் செடிகள் ஒன்றில் புது வகை ரோஜா மலர் ஒன்று பூத்திருந்தது மஞ்சள் நிறத்தில். எத்தனையோ முறை மஞ்சுளாவே அந்த மஞ்சள் வண்ண ரோஜாவைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்திருக்கிறாள். தன்னை மறந்து, தன் சுற்றுச் சூழ்நிலையை மறந்து உற்று நோக்கியது நோக்கியபடி நெடுநேரம் அப்படியே நின்றிருக்கிறாள். வளர்த்தவளையே வியப்பில் ஆழ்த்தும் அந்த மஞ்சள் ரோஜா மற்றவர்களை எப்படி இழுக்காது?—அதிலும் இயற்கையின் விசித்திரங்களை உற்று நோக்கும் மனப்பாங்கு படைத்தோர்களின் கண்ணையும், கருத்தையும் எவ்வளவு தூரம் கவர்ந்து கொண்டுவிடும் என்று விவரிக்க முடியுமா, என்ன? அப்படியொரு விந்தையைத் தான் காணப் போவதை மணிவண்ணன் எதிர்பார்க்கவே யில்லை. '' என் ரோஜாச் செடியை வந்து பாருங்கள் '' என்று மஞ்சுளா கூறியபோது, அவற்றை மிகச் சாமானியமாகக் கருதியபடிதான் அங்கு போனான் அவன். அந்த ரோஜாச் செடிகளைப் பார்த்த போது மணிவண்ணன் உண்மையிலேயே பிரமித்துத்தான் போனான்.

அன்று முழுதும் அவர்கள் பேசியதை விட எண்ணியது மிகுதி. அன்று முழுதும் அவர்கள்

சென்ஸஸ் 1961

பிப்ரவரி 10உ முதல் மார்ச் 5உ வரை



இத் தேதிகளுக்கு இடையே நம் நாட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறப் போகிறது. நகரத்தில் அல்லது நாட்டில், வனத்தில் அல்லது குன்றில், கடலில் அல்லது கரையில் எங்கு இருந்தாலும் ஒவ்வொரு நபரும் கணக்கில் சேர்க்கப்படுவர்.

கணக்கெடுப்பு வேலை பிப்ரவரி 10உ தொடங்கப்பட்டு மார்ச் 1உ சூரியோதயத்தில் முடிவடையும். கணக்கெடுப்பில் யாரும் விடுபட்டுப் போகாமல் இருப்பதற்காக மார்ச் 1உக்கும் 5உக்கும் இடையே மறு கணிப்பு ஒன்று மேற்கொள்ளப்படும். உங்கள் குடும்பத்தினர் எல்லோரையும் கணக்கெடுப்பில் சேர்க்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

கணக்கெடுப்பவர் ஒரு மாபெரும் பொறுப்பை வகிக்க வேண்டியிருக்கிறது. உங்களாலான உதவியை அளித்து அவர் வேலையை சுலபமாக்குங்கள்.

எல்லா சென்ஸஸ் விவரங்களும் மிகவும் ரகசியமாகவே இருக்கும். யாருக்கும் தெரிவிக்கப்பட மாட்டாது

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA-60/643



ஜனவரி 23ந் தேதி யன்று சென்னை புரசைவாக்கம் வியாபாரிகள் சங்கத்தின் ஆண்டு விழாவில் ராஜாஜி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். காங்கிரஸ் ஆட்சியில் வியாபாரிகள் படும் அல்லல்களை அவர் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். இந்த விழாவுக்குத் திரு ஈ. வி. கே. சம்பத்தும் வந்திருந்து உரையாற்றினர்.

ரோஜாச் செடிகளுக்கு எதிரிலிருந்து கழித்த பொழுது அருமையான பொழுது.

பள்ளியிலிருந்து சிறியவன் வீட்டுக்கு வந்தான். சற்றுப் போதில் வைத்திய லிங்கமும் வீட்டுக்கு வந்தார். அன்று மாலை அவர்கள் வீடே புதிய கலகலப்போடு விளங்கியது.

ஊர் போய்ச் சேர வேண்டுவதைப் பற்றி மணிவண்ணன் மறந்தே போய்விட்டான்.

"உன் வீட்டுக்கு நான் கடிதம் எழுதிப் போட்டிருக்கிறேன், தம்பி! நீ இங்கிருப்பதாக" என்று வைத்தியலிங்கம் சொன்ன போதுதான் தன் வீட்டைப் பற்றியும், திரும்பப் போக வேண்டும் நிலையைப் பற்றியும் அவன் நினைத்துக் கொண்டான்.

மறுநாள் கல்லூரி இல்லை. அடுத்த நாளும் அப்படியே. மூன்றாவது நாள் கல்லூரிக்குப் போக வேண்டும். ஆனால் மஞ்சளா போக வில்லை. அந்த மூன்றாவது நாளும் எவ்வளவு சீக்கிரமாகக் கழிந்துவிட்டது!

நாலாவது நாள் காலையில் மணிவண்ணனின் மாமாவே ஊரிலிருந்து வந்து விட்டார், அவனை அழைத்துச் செல்ல. மணிவண்ணன் அவரை எதிர்பார்க்கவில்லை. 'உடனே புறப்பட்டு வா!' என்று தந்தி கொடுத்து விட்டு, பணமும் அனுப்பி வைப்பார்கள் என்றுதான் அவன் எதிர்பார்த்தான். பின்னும் இரண்டு நாட்கள் அங்கு இருந்துவிட்டுப் போகலாம் என்று அவன் திட்டமிட்டிருந்தான்.

அவன் மாமா வந்ததும் வராததுமாகவே கிளம்புவதற்குத் துடித்தார். அவனைத் துரிதப் படுத்தினர்.

அதே வேளை, அத்தனை நாட்கள் தம் இல்லத்தில் மணிவண்ணன் தங்கியிருக்குமாறு செய்த உதவிக்கு வைத்தியலிங்கத்திடம் தம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள மறக்கவில்லை அவர்.

மணிவண்ணன் கிளம்ப முடியாமல் கிளம்பினான். அங்கிருந்தோர் மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு அவனை வழியனுப்பினர். ஆனால், மஞ்சளா திகில் பிடித்தவளாக நின்று கொண்டிருந்தாள். இமைப்பொழுதில் தன் கையில் சிக்கிய பெருநிதியம் ஒன்று எதிர்பாராத முறையில் கைமாறிப் போகும் ஒரு நிலையினை அவ்வேளை அவள் அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

மணிவண்ணன் முயன்றும் மஞ்சளாவுடன் தனித்துப் பேச முடியவில்லை. அவன் மாமா உடனிருந்து கொண்டே யிருந்தார். அவ்வேளை அவன் துடித்த துடிப்பு, அப்பப்பா, சொல்லுந் தரமன்று!

"போய் வருகிறேன்" என்று எல்லாரிடமும் சொல்லிக் கொண்டு வந்த மணிவண்ணன் மஞ்சுளாவிடமும் அந்தச் சொற்களைச் சொல்ல நினைத்தான். குரல் கம்மிவிட்டது. பார்வையை நீர்மூட்டி மறைத்தது. வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்கள் கலங்கிவிட்டன.

மஞ்சுளா கைகளை உயர்த்திக் குவித்தாள். அவளால் மட்டும் பேச முடியுமா, என்ன? கண்கள் பனித்தன. பனித்த விழிநோக்கு மணிவண்ணன் தோற்றத்தை மங்கலாக்கியது. அதோ, ஏறிவிட்டான் அவன். அதோ போகிறான்! அவனுடைய மங்கலான தோற்றமும் மறைந்து கொண்டு, மறைந்துகொண்டு வருகிறது. முற்றிலும் மறைந்து விட்டது.

நாட்கள் விரைந்து ஓடின. கணக்கிலடங்காத பதில்கள் எழுதினாள் மஞ்சுளா. எண்ணிலடங்காத பதில்கள் எழுதிக் கொண்டேயிருந்தான் மணிவண்ணன். அவர்கள் என்னதான் அப்படி எழுதிக் கொண்டார்களோ! அவர்களுக்கே அது நினைவிராது.

திடீரென்று ஒரு திருப்பம். கடிதங்கள் நின்றுவிட்டன. ஆண்டுகளும் விரைந்து, கடந்துவிட்டன. பதினைந்து ஆண்டுகள்! அப்பப்பா! எவ்வளவு எளிதில்! எவ்வளவு விரைவில்! நீண்ட பெருமூச்சொன்று விட்டுக் கொண்டான் மணிவண்ணன்.

அந்தத் தேநீர்க் கடைக்காரன் மணிவண்ணனையே நீண்ட நேரம் கவனித்துக் கொண்டிருந்தான் போலும்!

"ஆமாம், நீங்கள் எந்த ஊர்?" என்று அவன் வினவினான்.

அப்போதுதான் நிமிர்ந்து அவனைப் பார்த்தான் மணிவண்ணன். பார்வைக்குச் சிங்கள மொழியினன் போல் தென்பட்ட தேநீர்க் கடைக்காரன் நல்ல—தூய தமிழ்ப் பேசுவதைக் கேட்டு வியந்தான் மணிவண்ணன்.

"எனக்கு ஊர் மதுரை."

"மதுரையா! உங்கள் பெயர்?"

"ஏன்?" என்று ஐயத்தைக் கிளப்பிவிட்டு, "மணிவண்ணன்" என்றான் இவன்.

'மணிவண்ணன்' என்ற பெயரைக் கேட்டதும் கதறத் தொடங்கினான் அவன். பேரவலம் நிகழ்ந்துவிட்ட செய்தியை அவன்—கதறல் எடுத்துக் கூறியது.

"எல்லாரும் போய் விட்டார்களே! அம்மா, அக்கா, அப்பா, அண்ணன் அத்தனை பேரும் போய்விட்டார்களே! நான் மட்டும் இப்போது ஒரியாக நிற்கின்றேனே!" கதறிக் கதறியழுத அவனிடமிருந்து வார்த்தைகள் தட்டுத் தடுமாறி வந்தன.

ஒன்றும் புரியாமல் தவித்தான் மணிவண்ணன். பக்கத்திலிருந்த வேறொருவர் அப்போது பேசினார்:

"வைத்தியலிங்கம் எவ்வளவு நல்லவர். அந்த நல்லவரையே குடும்பத்தோடு இனவெறி அழித்து விட்டதே! வீட்டோடு பொசுக்கி விட்டார்களே!"

இப்போது புரிந்தது மணிவண்ணனுக்கு. வைத்தியலிங்கம் ஒருவரின் வீடு மட்டுந்தான் அந்தப் பகுதியில் தமிழர் வீடு. சுற்றி இருந்தவர்கள் எல்லாம் சிங்களவர். அங்கு இனவெறி கிளம்பி, கோர நர்த்தனம் புரிந்த தன் விளைவு அந்த அருமையான குடும்பமே அழிந்துவிட்டது. 'ஆமாம், இத்தனை காலமும் திருமணம் செய்து கொள்ளாமலா இருந்திருப்பாள் மஞ்சுளா?'

அதற்குப் பதில்—தன்னைத்தானே ஆற்றிக் கொண்டு, கதறலை நிறுத்தியபடியே அவன் தம்பி கூறினான்:

"நீங்கள் எங்கள் வீட்டில் வந்து தங்கியிருந்த நாட்கள் இரண்டு, மூன்று தாம். ஆனால், உங்கள் நினைவு எங்கள் குடும்பத்தில் என்றென்றும் நின்று நிலைக்கும் நினைவாகி விட்டது. உங்களைப் பற்றியே என் அக்கா எண்ணிக் கொண்டிருந்தார்கள் என்பதை அவர்கள் பேச்சு அடிக்கடி காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது. நீங்கள் இங்கிருந்து சென்ற இரண்டு, மூன்று மாதங்களிலேயே அவர்கள் தெம்பு இழந்து விட்டார்கள். அவர்களின் கள்ளம் கபடமில்லாத சிரிப்பும், துடிதுடிப்பான பேச்சும், நடையும், ஓட்டமும், ஆட்டமும் எங்குதான் போய் ஒளிந்து கொண்டனவோ! படிப்பு முடித்து நெடுநாட்கள் வீட்டிலேயே தங்கிக் கிடந்தார்கள். யாருடனும் கலகலப்பாகப் பேசவில்லை. ஒன்று நீங்கள் எழுதிய கடிதங்களை எடுத்து வைத்துக் கொண்டு பித்தம் பிடித்தவர்களைப்போல் திரும்பத் திரும்ப அவற்றைப் புரட்டிக் கொண்டிருப்பார்கள். அல்லது அவர்கள் அருமையாக வளர்த்து வந்த ரோஜாச் செடியருகிற் போய் அமர்ந்து கொண்டிருப்பார்கள்.

"திருமணத்தைப் பற்றிய பேச்சையே அவர்களிடம் எடுக்க முடியவில்லை. அவர்கள் நிலையறிந்து என் அப்பாவும் அதிகம் வற்புறுத்தவில்லை.

"சில வருடங்கள் கழித்து எப்படியோ அக்காவின் மனத்தென்பு மீண்டது போலும். மாத்தளையில் பெண்கள் வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணியேற்றார்கள். அதன் மூலமாக எங்களுக்கும் ஓரளவு அமைதி ஏற்பட்டது.

"விடுமுறையைக் கழிக்க வந்தவர்கள்தாம் எங்கள் அக்கா வீட்டுக்கு. நானும் அன்று வீட்டிலிருக்கக் கூடாதா? என்னை மட்டும் விட்டு விட்டுச் சுற்றிச் சூழ்ந்துவந்த வெறிக் கும்பலுக்கு எல்லாரும் பலியாகிவிட்டார்கள். ஐயோ! அந்தக் கொலை வெறி எங்கள் குடும்பத்தையும், வீட்டையும் ஒருசேர சூறையாடி, சொக்கப்பானை கொளுத்திய பிறகு கூட அமைதி கொள்ளவில்லையே! எங்கள் கடையையும், தோட்டத்தையும் சின்னாபின்னப்படுத்தி, அழித்த பிறகு தானே ஓய்ந்தது."

மணிவண்ணனை ஒன்றுமே விளங்கவில்லை. மற்று அங்கு சுற்றி நின்ற யாரும் வாய் திறக்கவில்லை. நீண்ட பெருமூச்சொன்று மட்டும் அவனிடம் வெளிப்பட்டது. எழுந்தான் மணிவண்ணன். நடந்தான். எங்கே?


மரகதச் சிலை
கதை: வாண்டுமாமா
சித்திரம்: விஜு
ஆனால், வெற்றி பெற்ற என்னைப் பாராட்ட வராவிட்டாலும், ரூபமதி என் காயங்களுக்கு மருந்திடவாவது வருவாள் என்று எண்ணினேன். எங்கே அவள்?
வெளுத்ததெல்லாம் பாலாக நினைக்கும் வெள்ளை உள்ளம் படைத்தவர் நீங்கள். ரூபமதியின் தோற்றமும் பார்வையும் எனக்குப் பிடிக்கவில்லை. இடைக்காடர் சொன்ன கதையைப் போலவே இவள் வாழ்க்கையும் வருகிறது...
நேற்றிரவு கானகத்தில் சிங்கனுடன் ரூபமதியைக் கண்டேன். உங்கள் வெற்றி அவளிடம் மகிழ்ச்சியை உண்டாக்கவில்லை. இதையெல்லாம் பார்க்கும் போது....
இவ்வுலகில் யாரை நம்புவதென்றே தெரியவில்லை. முதலில் நிர்மலா... இப்போது ரூபமதி...ம்
அநிருத்தா, இன்றிரவே நாம் இங்கிருந்து கிளம்பி விடுவது நல்லதென்று எண்ணுகிறேன்...
காசியின் விருப்பப்படி அன்றிரவே...
அநிருத்தன் அங்கரையும் ரூபமதியையும் விட்டுப் பிரிந்து வெகுதூரம் வந்து, ஓர் ஓடைக்கரையில் மர நிழலில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் போது...


அதித்தா, அதோ பார்! தேவமதி போலிருக்கிறதே.
இளவரசே! இப்படி என்னைத் தவிக்க விட்டு வந்து விட்டீர்களே. இது நியாயமா?
காலையில் எழுந்ததும் தங்களைக் காணாது எப்படித் தவித்துப் போய்விட்டேன் தெரியுமா? ஏன் இப்படிச் செய்தீர்கள்?
பாசாங்கு போதும். காயம் பட்டுக் கிடந்த என்னைக் காண வராத நீ இப்போது நீலிக் கண்ணீர் வடிக்கிறாயே
இதற்காகவா கோபம்? அந்தப்புரத் துப் பெண்கள் தங்களை என் கணவராக்கிச் செய்த கேலியால் தங்களைச் சந்தி -க்க வெட்க மடைந்து...
நாடக மடாதே தேவமதி! உன்னை எனக்குத் தெரியும். வீரனை மரமாக்கிய நாககன்னி தானே நீ?
ஐயோ, இது அபாண்டம், அநியாயம்! இளவரசே, அந்தக் கள்ளனின் வார்த் தைகளை நம்பாதீர்கள்.


பெண்ணே, நீ யாராயிருந்தாலும் சரி. என் வழி வேறு. இனி உன் வழியே நீ போகலாம். என்னைப் பின் தொடராதே
காவி. குதிரைக்கு நீர் தயார் செய். ரொம்பத் தாகமாக இருக்கிறது. நீர் அருந்தி விட்டு வருகிறேன்.
என் திறமைகள் எதும் பயன்பட வில்லை. இவனது மனசையும் இனி மாற்ற முடியாது. ஆதியிலிருந்தே குள்ளன் என்னைக் கண்காணித்து வருவதை நான் அறியாதவளில்லை. இனி இவர்களை இப்படியே விட்டு விட முடியாது... ஆ.. அது தான் சரியான முடிவு... ஓடை நீரில்...
என் மோதிரத்திலுள்ள மந்திரப் பொடியைக் கலக்கி விடுகிறேன்.
தாகம் தணித்துக் கொண்டு போகிறாயா ஆதித்தா! போ.. போ.! அற்புதமான ஓடை நீரைக் குடித்ததாகவல்லவா எண்ணி இருக்கிறாய்? போகப் போகத் தெரியும்....!
என்ன இது! இந்தக் குன்று இப்படி நடுங்குகிறதே!
ஐயோ! இந்த மலையே பயங்கரமாகக் குலுங்கிக் குமுறுகிறதே. பூகம்பமோ? நிற்கக்கூட முடியவில்லையே!
தொடரும்



படித்துப் பாருங்கள்



காளிக்கோட்டை ரகசியம்

கத்தியைச் சுழற்றி எதிரியைக் கலக்க அடித்து, ஈட்டி முனையிலே அவனைத் திக்குமுக்காடச் செய்து, குதிரைமீது தாவி ஏறிக் காற்றெனக் கடிதில் மறைந்து, பகைவன் கையில் சிக்கிச் சிறையில் அடைபட்டுப் பிறகு தந்திரமாக அங்கிருந்து தப்பி அகழியில் குதித்து நீந்தி...இப்படியெல்லாம் அசகாய சூரத்தனங்கள் புரியும் ஓர் அரச குமாரனின் கதைகளையே பொதுவாகச் சிறுவர்கள் ஆவலுடன் படிப்பார்கள்.

இந்தக் கதையிலே மேலே சொன்ன அத்தனையும் இருக்கின்றன. புகழ்பெற்ற ஆசிரியர் 'ஆர்வி'யின் ஜிலு ஜிலுவென்ற நடையும் கதை சொல்லும் பாணியும் காளிக்கோட்டையின் ரகசியத்தை அறிந்துகொள்ள நம்மை மேலே மேலே படித்துக் கொண்டு போகச் செய்கின்றன. சரித்திர காலத்துச் சூழ்நிலையை ஆசிரியரின் வர்ணனைகள் தத்ரூபமாக்கி விடுகின்றன.

ஆசிரியர்: ஜகு (ஆர்வி) பிரசுரம்: கலைமகள் காரியாலயம் மைலாப்பூர், சென்னை-4. விலை ரூபாய் 2.

குழந்தைப் பாடல்கள்

குழந்தைகளுக்குக் கவிதை மூலம் பல நல்ல விஷயங்களைச் சொல்ல வேண்டுமானால் அதற்குத் தனிப்பட்ட திறமை வேண்டும். இத்தகைய திறமை வாய்ந்தவர் நாக முத்தையா என்பதை இந்த நூல் விளக்குகிறது. அழகிய எளிய கருத்துடைய சொற்களைக் கொண்டு, சிறாரின் சிந்தனையிலே பதியும் வண்ணம் சின்னச் சின்னப் பாடல்களாகத் தந்திருக்கிறார். பாட்டுக்குப் பாட்டு படங்களும் உண்டு.

ஆசிரியர்: நாக முத்தையா; வெளியீடு: செல்வி பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. 1-50.

ஆத்திச்சூடிக் கதைகள்
அருணோதயம் நீதிக் கதைகள்

கசப்பு மருந்தை வெல்லத்துக்குள் வைத்துக் கொடுக்க வேண்டும். மருந்தை விரும்பிச் சாப்பிட அதில் ருசியைக் கலந்து கொடுப்பது வைத்திய உலகம் கையாளும் தந்திரம். அதேபோல் குழந்தைகளுக்கு நீதியைக் கதை சொல்லி மனத்திலே பதியவைக்கும் முறை நம்முடைய நாட்டில் நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. பஞ்சதந்திரக் கதைகள் மட்டுமே இதற்குப் போதுமே.

ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்த ஆத்திச்சூடி செய்யுள் ஒவ்வொன்றுக்கும் ஒரு சின்னஞ்சிறிய கதையைச் சொல்லி அதன் பொருளை உள்ளத்தில் பதியவைக்கிறார் இதன் ஆசிரியை. முதல் பன்னிரண்டு செய்யுளுக்குப் பன்னிரண்டு கதைகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. கதாபாத்திரங்களைக் காட்டு மிருகங்களாக்கி விருப்பது குழந்தைகளுக்கு உற்சாகத்தையும் ஆர்வத்தையும் ஊட்டக் கூடியது.

அருணோதயம் நீதிக் கதைகளில் ஆறு சுவையான கதைகள் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொன்றும் சிறுவர்களின் ஆர்வத்தைத் தூண்டி ஆவலோடு படிக்கும்படியான முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆத்திச்சூடிக் கதைகள்: ஆசிரியை: எஸ். ரங்கநாயகி, அருணோதயம் நீதிக் கதைகள் ஆசிரியர்: கி. மா. பக்தவத்சலன். வெளியீடு: (இரண்டும்) அருணோதயம், ராயப்பேட்டை, சென்னை—14; விலை: ஒவ்வொன்றும் விலை ரூபாய் ஒன்று.

அண்ணனும் தங்கையும்

அண்ணன் தங்கை இருவர். ஒருவர்மீது ஒருவர் உயிரையே வைத்துள்ளார்கள். ஆனால் அவர்கள்மீது அன்பைச் சொரிய வேண்டிய அம்மாவோ இல்லை. சித்தன்னையின் கொடுமை தாளாமல் வீட்டைவிட்டு ஓடுகிறார்கள். விதி வசத்தால் பிரிக்கப்படுகிறார்கள் விசித்திரமாக. இருவரும் இரண்டு மூலையிலே விநோதமான சூழ்நிலையிலே வளருகிறார்கள். தாடிவாலா ஒருவர் வருகிறார். பசியால் திருடும் மனிதன் சொந்த மாமாவாகிறான். கொடுமைப்படுத்திய சித்தன்னை மூளைகலங்கிப் பிறகு கொடுமைக்காளான மகனாலேயே காப்பாற்றப்படுகிறாள். திருடர் கூட்டம் பணக்காரரின் செல்வ மகனைக் கடத்திக் கொண்டு போகிறது. அண்ணனைக் கொன்று சொத்தை அடையத் திட்டமிடும் கொடிய உள்ளம் படைத்த ஒரு தம்பியும் வருகிறான். கடைசியில் எல்லோரையும் ஒன்றுசேர்த்துக் கதை சுபமாக முடிகிறது. நேர்மையும், சகோதர பாசமும், கருணையும் இதில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. கதையைப் படிக்க ஆரம்பித்தவர்கள் விமலன், கமலா, மதனன், மங்கம்மா, கப்பையா, தங்கையா இவர்களைப் பாதியில் விட்டுச் செல்ல மனமில்லாமல் ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டுத்தான் புத்தகத்தை மூடுவார்கள். இடையிடையேயுள்ள படங்கள் புத்தகத்துக்குக் கவர்ச்சியைச் சேர்க்கின்றன.

ஆசிரியர்: கே. கண்ணுச்சாமி; வெளியீடு: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர் சென்னை—4, விலை ரூ. 1.

சிறுவர் பாட்டு

குழந்தைகளுக்காக "நாரா. நாச்சியப்பன் நிறைய எழுதியுள்ளார். குழந்தைகளுக்கான அவருடைய பாடல்களின் தொகுப்பே இந்தப் புத்தகம். அகர வரிசையில் பாடல்களை



''இவர் ஐந்து வருஷமா என்கிட்டே தான் படிச்சுக்கிட்டு வர்றார்!''

''எந்த ஸப்ஜெக்ட்டு?''

''நியூஸ் பேப்பர் ஓஸி!''

அமைத்திருக்கும் முறை அழகாக இருக்கிறது. அன்பு, ஆசை, இன்பம், ஈகை, உண்மை, ஊக்கம், எண்ணம், ஏற்றம், ஐயம், ஒழுக்கம், ஓர்தல், ஔவை, அஃகேனம் (இப்படியே க, ங, சவுக்கும்) இந்தத் தலைப்புக்களில் அறிவை வளர்க்கும் அழகழகான பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. ஒரு பக்கத்துக்கு ஒரு பாட்டு—படத்துடன் என்று இந்தப் புத்தகம் சிறப்பாகக் கொண்டுவர'ப்பட்டிருக்கிறது.

வெளியிட்டோர்: தாமரைப் பதிப்பகம், 97, பிராட்வே, சென்னை-1. விலை ரூ. 1.

மந்திர வித்தை

பூத்துவை! உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் அவசியம் தெரிந்து கொள்ளுங்கள். அவனிடம் அவன் கண்ட கனவைப் பற்றி விசாரியுங்கள். 'ஜீரணம் என்றால் என்ன?' என்பதைப் பற்றி அழகாக விளக்கமாக வியப்பூட்டும்படி சொல்லுவான். நீங்கள் சாப்பிடும் ஆகாரம் வாயில், உணவுக் குழலில், இரைப்பையில், சிறுகுடலில், பெருங்குடலில் என்னென்ன மாறுதல்களை அடைகிறது; ஒவ்வொன்றும் எப்படி எப்படி, நாம் உண்ணும் ஆகாரங்களை மாற்றி உணவுச் சத்தாக்கி ரத்தத்துடன் கலக்கச் செய்கின்றன என்பதையெல்லாம் முத்து சொல்லுவான். அவன் யாரோ சயன்ஸ் வாத்தியாராக்கும் என்று பயப்படாதீர்கள். அவன் விஷயங்களை அலுப்புத் தட்டாமல் கதைபோல மேலே மேலே என்ன எப்படி என்று ஆவலைத் தூண்டும் வகையில் சொல்லிக்கொண்டு போகிறான்.

குழந்தைகளுக்காக எழுதுவோருக்கு ஊக்கமளிப்பதற்காகத் தென் மொழிகள் புத்தக டிரஸ்டார் ஏற்படுத்திய போட்டியில் பரிசு பெற்ற புத்தகம் இது. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளுக்கு அவசியம் வாங்கித் தரவேண்டிய சிறந்த புத்தகம்.

ஆசிரியர்: பீ. வி. சபரிராஜன்; வெளியீடு: பழனியப்பா பிரதர்ஸ் சென்னை-5 அன்று திருச்சி 2. விலை ரூ. 1.

வானத்தைப் பார்ப்போம்

வான மண்டலத்திலே செயற்கைச் சந்திரன்களைப் பறக்கவிட்டுக் கொண்டிருக்கும் சகாப்தத்திலே வாழும் குழந்தைகளுக்கு வான மண்டலத்தைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். சூரியன் சூரிய குடும்பம், கிரகங்கள், வால் நட்சத்திரம், எரி நட்சத்திரங்கள், கிரகணங்கள், நட்சத்திரங்கள், நட்சத்திர மண்டலம் இப்படியாக வான சாஸ்திரத்தை எளிய முறையிலே சுவைபட அழகாகச் சொல்லிக்கொண்டு போகிறார்கள் இதன் ஆசிரியர்கள். ஏராளமான விளக்கப் படங்கள் விஷயங்களை இலகுவாகப் புரிந்துகொள்ளும் வகையில் இடம் பெற்றிருப்பது ஒரு சிறப்பான அம்சம். சிறுவர்கள் மட்டுமில்லை, பெரியவர்களும் அறிந்துகொள்ளக்கூடிய எத்தனையோ விஷயங்கள் இதில் தரப்பட்டிருக்கின்றன. இதுவும் ஒரு தென் மொழிகள் புத்தக டிரஸ்டாரின் சிறந்த வெளியீடாகும்.

ஆசிரியர்கள்: பெ. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம். வெளியீடு: ஔவை நூலகம் 4/141 பிராட்வே சென்னை—1. விலை ரூ. 1—50.

மர்ம மாளிகை

பதினைந்து வயதுப் பையன் முரளி. ஏழ்மையின் வடிவம். செல்வந்தர் தனபாலின் ஏழு வயது மகன் செல்வன், பட்டினி பசி என்றால் என்னவென்று தெரியாத பிறவி. ஆனால் இவர்கள் இருவருமோ சகோதரர்கள். ஆனால் இது அவர்களுக்கே தெரியாது. ஒருவன் செல்வந்தனாகவும் மற்றொருவன் வறுமைப் பிடியிலும் வளருகிறார்கள். இதற்குக் காரணம் மாணிக்கம் என்ற ஒரு கொடியவன். சிறு குழந்தையாக இருக்கும்போது தனபாலின் மூத்த மகனான முரளியைக் கொல்லத் திட்டமிட்டான். ஆனால் முரளி சாகாமல் பிழைத்திருந்து மாணிக்கத்தையும் போலீசாரின் பிடியில் சிக்க வைக்கிறான். இடையே ஜிம்மி என்ற நாய் வருகிறது. சாகஸங்கள் புரிகிறது. பழைய பாணிக் கதையானாலும் குழந்தைகளின் ஆவலைத் தூண்டும்படி எழுதப்பட்டிருக்கிறது. பெரிய எழுத்தில் படங்களுடன் நல்ல முறையில் புத்தகம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

ஆசிரியர்: விமலா ரமணி; வெளியீடு: மெர்குரி புத்தகக் கம்பெனி, ராஜவீதி கோயமுத்தூர்—1; விலை ரூ 1—75.

நீங்கள்

ஆஸ்துமா-வினால்

அவஸ்தைப்பட்டால்

இதை அவசியம் படியுங்கள்

இபஸோன் மாத்திரைகள் இந்தியாவிலே திரும்பவும் கிடைக்கின்றன. ஆஸ்துமா, ப்ராங்கைடிஸ், ப்ராங்கைடிஸினால் ஏற்படும் ஜலதோஷம், மார்புச் சளி, ஹே காய்ச்சல், மற்றும் இது சம்பந்தப்பட்ட நோய்களினால் அவஸ்தைப்படுகிறவர்களுக்கு இபஸோன் மிகவும் உதவியளிக்கிறது. இபஸோன் எளிதில் உட்கொள்ளக்கூடியது. பயமின்றி உபயோகிக்கலாம். உடனடியாகச் சமனமூட்டி, நிச்சய பலனளிக்கிறது.

இபஸோன் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள வைத்திய முறையின் அம்சங்களின் இயல்புகள் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

1. சுவாசக் குழாய்களின் தசைநார்களுக்கு ஏற்படும் வலிப்புக்கு சமனமூட்ட ஒரு சக்தி வாய்ந்த தன்மை இபஸோனுக்கு உண்டு. சுவாசாசயங்களில் மூச்சு எளிதில் செல்லவும், வெளியில் வரவும் இது உதவி செய்கிறது. அது மாத்திரமல்ல; ஆஸ்துமாவினால் ஏற்படும் உக்கிரத்திற்கு ஆசுவாசமளிக்கிறது.
2. சுவாசக் குழாய்களிலும் மற்றும் மார்பு உறுப்புகளிலும் உள்ள கபத்தை இபஸோன் மிருதுவாக்கி, திரவமாக இருமலில் எளிதாக வெளியே தள்ளிவிடுகிறது.
3. சுவாசாசயத்திலுள்ள இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பிற்கு இபஸோன் சமனமூட்டுகிறது.
4. இபஸோன் இருதயத்தின் கஷ்டங்களைக் குறைத்து, அதிகம் வேலை செய்யக்கூடிய அளவுக்கு சக்தியை அளிக்க உதவி செய்கிறது.
5. இபஸோன் ஆஸ்துமாவினால் நிச்சயமாக ஏற்படும் உக்கிரத்தைக் குறைத்து, எக்கத்தை நிவர்த்தி செய்து, மிருதுவாக நரம்புகளுக்கு சமனமளிக்கிறது. அது மட்டுமல்ல; ப்ராங்கைடிஸினால் ஏற்படும் அகோரமான இருமலைக்கூட சரிசெய்துவிடுகிறது.

ஆஸ்துமா வெகு சீக்கிரம் உங்களைப் பீடிக்கிறது. ஆஸ்துமாவினால் நீங்கள் பீடிக்கப்படுவீர்கள் என சிறிய சந்தேகம் வந்தவுடன் ஒரு இபஸோன் மாத்திரையை உட்கொண்டு, அதிசீக்கிரத்திலே நிச்சயமாக நிவாரணமடையுங்கள்.

இபஸோனின் அரிய தன்மைகள், ஆஸ்துமாவினால் அவஸ்தைப்பட்டு இதை உபயோகித்து குணமடைந்தவர்களாலும், அதை சிபார்சு செய்யும் டாக்டர்களாலும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

வழக்கத்தை ஊட்டிவிடும் மருந்துகள் எதுவும் இபஸோனில் சேர்க்கப்படவில்லை.

இபஸோன் 15, 45, 100 மாத்திரைகள் கொண்ட வசதியான பாக்கட்டுகளில் எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கின்றன.



EPHAZONE

இபஸோன் தயாரித்து, விநியோகிப்பவர்கள்:-

ஜே. எல். மோரிஸன், சன் அன்டு ஜோன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.

பம்பாய் – கல்கத்தா – மதராஸ் – டில்லி.

பாண்டிக் கொடுமுடியார்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

ராமனும் அனுமனும் ஒரு நாள் அயோத்தி நகரில் இருந்து வெளியூர்களுக்குப் புறப்படுகிறார்கள். போகிற வழியில் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டியிருக்கிறது. ஆற்றிலோ வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. படகு இல்லாமல் ஆற்றைக் கடத்தல் இயலாது என்று படுகிறது ராமனுக்கு. ஆனால் அனுமனோ 'ராம, ராம' என்று சொல்லிக் கொண்டு ஆற்றில் இறங்கி விடுகிறான். ஆற்றில் ஓடிய வெள்ளமும் அப்படியே ஸ்தம்பித்து நின்று, ஓர் ஆள் போகக்கூடிய அளவுக்கு வழி அமைத்துக் கொடுக்கிறது. அனுமன் ஆற்றைக் கடக்கிறான், ராம நாம ஸ்மரணை செய்து கொண்டே. ராமனும் அவன் பின்னாலேயே இறங்கி நடந்தே ஆற்றைக் கடக்கிறான் அன்று. இப்படி ஒரு கதை. கதை உண்மையாக நடந்திருக்க வேண்டும் என்பதில்லை. ராமனைவிடப் பெரியது ராம நாமம் என்று அழுத்தமாகச் சொல்வதற்குக் கற்பித்ததாகவே இருக்கலாம். ஆம்! ராம நாமம் ராமனைவிட எவ்வளவு சிறந்ததோ, அவ்வளவு சிறந்தது நமசிவாய என்ற பஞ்சாக்ஷர மந்திரம், அந்த மந்திரத்தின் அதிகர்த்தாவாகிய சிவபெருமானை விட. அதனால்தான் அந்தப் பஞ்சாக்ஷர மந்திரத்தை சைவப் பெருமக்கள் ஓதி ஓதி வழிபடுகிறார்கள்; இகபர சௌபாக்கியத்தை எல்லாம் பெறுகிறார்கள். 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது' அந்த நாதன் நாமம் நமச்சிவாயவே என்று ஞானசம்பந்தர் பாடினால், 'கல்துணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நல்துணையாவது நமச்சிவாயவே' என்று பாடுகிறார் அப்பர். மணிவாசகரோ, 'நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க' என்றே தம் திருவாசகத்தை ஆரம்பிக்கிறார். ஆனால் இவர்கள் எல்லோரையும் தூக்கி அடிக்கிறார் சுந்தரர் நமச்சிவாயப் பதிகம் பாடுவதிலே. 'இறைவா! உன்னை நான் மறந்தாலும் என் நா நமச்சிவாய என்று சொல்ல மறப்பதில்லையே. அதனால்தானே பிறவாத பேறு எல்லாம் எனக்கு எளிதில் சித்தியாகி விடுகிறது' என்று எக்களிப்போடு பேசுகிறார்.

மற்றுப் பற்று எனக்கு இன்றி
　நின் திருப்பாதமே மனம் பாவித்தேன் ;
பெற்றலும் பிறந்தேன் இனிப்
　பிறவாத தன்மை வந்து எய்தினேன் ;
கற்றவர் தொழுது ஏத்தும்
　சீர் கறையூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவா! உன்னை நான் மறக்கினும்
　சொல்லும் நா நமச்சிவாயவே.

என்பது சுந்தரர் பாட்டு. நல்லூர்ப் பெருமணத்தில் சோதியில் கலக்கும்போது ஞானசம்பந்தர் நமச்சிவாயப் பதிகம் பாடியிருக்கிறார். பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் தம்மைக் கல்லில் கட்டிக் கடலில் எறிந்த போது நமச்சிவாயப் பதிகம் பாடியிருக்கிறார் திருநாவுக்கரசர். ஆனால் சுந்தரரோ, காவிரிக் கரையிலுள்ள பாண்டிக் கொடுமுடிக் கோயிலுக்கு வந்து அங்கு இறைவனை வணங்கித் தொழும்போதே நமசிவாயப் பதிகம் பாடியிருக்கிறார். இப்படிச் சுந்தரர் வாக்கால் நமச்சிவாயத்தைக் கேட்கும் பேறு கிடைக்கிறது, நமக்குப் பாண்டிக் கொடுமுடியை நினைத்தால். அந்தக் கொடுமுடி என்ற தலத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

கொடுமுடி திருச்சிக்கு மேற்கே 62 மைல் தூரத்தில் இருக்கிறது. இத்தலம் செல்லத் திருச்சி ஈரோடு லயனில் உள்ள கொடுமுடி ஸ்டேஷனில் இறங்க வேணும். சென்னையிலிருந்து கோவை செல்லும் ரயிலில் வந்து ஈரோட்டில் வண்டி மாற்றி 23 மைல் தென் கிழக்கே வந்தால் இத்தலம் வந்து சேரலாம். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நாலு பர்லாங்கு தொலைவில் கோயில் இருக்கிறது. கோயில் காவிரியின் மேல் கரையில் இருக்கிறது. தெற்கு நோக்கி வந்த காவிரி இங்குதான் கிழக்கு நோக்கித் திரும்புகிறது. அகண்ட காவிரியாகவே இங்கு ஆறு இருக்கும். அதிலும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் ஆறு நிறைந்து போகும்போது மிக அழகாக இருக்கும். இப்படிக் காவிரி கரைபுரண்டு போவதைக் கண்டு தானே மாணிக்கவாசகர் 'அரிய பொருளே! அவிநாசி அப்பா! பாண்டி வெள்ளமே!' என்று இறைவனைக் கூவி அழைத்திருக்கிறார். அகத்தியர் கமண்டலத்தில் கொண்டுவந்த கங்கையை இங்குள்ள விநாயகர் காக்கை உருவில் வந்து கவிழ்த்திருக்கிறார். அதனால்தான் கா-விரி என்ற பெயரே இந்நதிக்கு வந்தது என்பது வரலாறு. இன்னும் இக்காவிரியின் நடுவிலே உள்ள பாறையை அகத்தியர் பாறை என வழங்குகின்றனர் மக்கள். காகம் கவிழ்த்த விநாயகர் காவிரி கண்ட விநாயகர் என்ற பெயரில் கோயில் பிராகாரத்திலேயே இருக்கிறார். கோயிலுள் செல்லும்போது அவரைத் தரிசித்துக் கொள்ளலாம். இத்தலத்தில் மலை ஒன்றும் இல்லையே, இத்தலத்துக்கு எப்படிக் கொடுமுடி என்று பெயர் வந்தது என்று அறிய விரும்புவோம். அதற்கும் அந்தப் பழைய கதையை ஒரு புதிய மெருகுடனே, தலவரலாறு கொடுக்கும். தேவலோகத்திலே ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் ஒரு பலப் பரீக்ஷை. சேடன் மகாமேருவைப் பற்றிக் கொள்ள வாயு தன் பலம் கொண்டமட்டும் வீசி அதைப் பதிக்கப் பார்க்கிறான். முழு மலையும் பெயரவில்லை என்றாலும் மூன்று சிறு துண்டுகள் பெயர்ந்து விழுந்தன. அவையே காளத்தி, திருச்சி, திரிகோணமலை என்ற குன்றுகள் என்று முன்னமேயே தெரிந்திருக்

கிறோம். வாயுவின் வேகத்தில், ஆதிசேடன் தலையில் உள்ள ஐந்து மணிகள் வேறு தெறித்திருக்கின்றன. அவைகளில் சிவப்புமணி அண்ணாமலையிலும், மரகதம் ஈங்கோய் மலையிலும், மாணிக்கம் வாட்போக்கியிலும், நீலம் பொதிகையிலும், வைரமணி இத்தலத்திலும் விழுந்திருக்கின்றன. வைரம் மற்ற மணிகளில் எல்லாம் சிறந்த மணியாயிற்றே. அதுவே கொடுமுடியாக நின்றிருக்கிறது இங்கே. அந்தக் கொடுமுடியின் சிகரமே இக்கோயிலில் லிங்கத் திருவுருவாகவும் இருக்கிறது என்று அறிவோம். கொங்கு நாட்டில் உள்ள இக்கொடுமுடிக்குப் பாண்டிக் கொடுமுடி என்று ஏன் பெயர் வந்தது என்று தெரியவில்லை.

இனி நாம் கோயிலுள் நுழையலாம். கோயில் பெரிய கோயில். மூன்று பிரிவாக இருக்கின்றன. இறைவனுக்கு, இறைவிக்கு என்பதோடு திருமாலுக்குமே ஒரு சந்நிதி. ஒவ்வொரு சந்நிதியையுமே ஒவ்வொரு கோபுரம் அழகு செய்கிறது. வடபக்கம் கொடுமுடிநாதர் கோயில். இவரையே மகுடேசர், மலைக்கொழுந்தர் என்றெல்லாம் அழைக்கிறார்கள். தேவியோ வடிவுடை நாயகி, பண்மொழி அம்மை. இவளோ தென்பக்கத்துக் கோயிலில் இருக்கிறாள். இருவருக்கும் இடையே தனிக் கோயிலில் வீரநாராயணப் பெருமாள் கிழக்கு நோக்கியவராய் அறிதுயிலில் இருக்கிறார். இவர் எங்கே இங்கு வந்து சேர்ந்தார்? பிரமனும் விஷ்ணுவும் மகுடேசுவரரைத் தரிசிக்க வந்தவர்கள். இவர்களில் பிரம்மா மேலப் பிராகாரத்தில் வன்னி மரத்தடியில் தங்கி யிருக்கிறார். தரிசனம் கிடைப்பதற்குக் கொஞ்சம் காத்திருக்க வேண்டியிருந்தது போலும். அந்த நேரத்தில் அயர்ந்து படுத்திருக்க வேணும் இந்த வீரநாராயணர். மைத்துனர் துயிலைக் கலைக்க வேண்டாம் என்று கொடுமுடிநாதர் எண்ணிவிட்டார் போலும். இதனாலே இக்கோயிலை உத்தமர் கோயிலைப் போல் திரிமூர்த்திகள் கோயில் என்றே கூறுகின்றனர். பெருமான் இங்கு வந்திருக்கிறார் என்பதை அறிந்து அவர் துணைவி மகாலக்ஷ்மியுமே வந்திருக்கிறாள். எப்போதும் காலடியில் இருப்பவள் இங்கு தனிக் கோயிலில் பெருமானுக்குத் தென்புறம் தலைமாட்டிலேயே உட்கார்ந்திருக்கிறாள். இவர்களை யெல்லாம் சென்று கண்டு வணங்கி எழலாம். வெளிப் பிராகாரத்தைச் சுற்றினால் அங்கு தலவிருட்சமான வன்னி. அங்கே ஒரு பீடம். அதில் பிரம்மா எல்லோரும் இருக்கிறார்கள். இவர்களுக்கும் தெற்கே கோயிலின் வடமேற்கு மூலையில் அநுமாருக்கு என்று ஒரு கோயில். அங்கு பெரியதொரு சிலை வடிவில் ஆஞ்சநேயர். ஊசி நுழைய இடம் கொடுத்தால் ஒட்டகத்தையே நுழைப்பவர் போல, இந்தப் பெருமானுக்கு இடம் கொடுக்க அவர் தம் சிறிய திருவடியையுமே கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார். இது எல்லாம் தென் தமிழ் நாட்டில் நிலவிய சைவ வைஷ்ணவ ஒற்றுமையைக் காட்டுவதற்காக எழுந்தவை என்று தெரிந்து கொண்டோமானால் அது சமய சமரசத்தை வளர்க்க உதவும்.

இக்கோயிலில் ஒரு சிறப்பு. நாம் பார்த்த சில தலங்களில் சூரியன் கோபுரவாயில் கொடிமரம் நந்தி முதலிய எல்லாவற்றையும் கடந்து கருவறை வந்து இறைவனைத் தழுவி யிருக்கிறான் வருஷத்தில் இரண்டு மூன்று நாட்களில். ஆனால் ஒரு தலத்திலும் இறைவியை அவன் பூஜித்ததாக இல்லை. இத்தலத்தில் மட்டும் ஆவணி, பங்குனி மாதங்களில் மூன்று நான்கு தினங்கள் சூரியன் ஒளி, முறையே இறைவன் அம்பாள் இருவர் பேரிலுமே விழுகின்றது. இப்படி சூரிய ஒளி படும்படி கோயில் கட்டிய சிற்பிகள் எத்தனை கற்பனை உடையவர்களாக இருந்திருக்க வேண்டும் என்று மட்டும் எண்ணினால் நம்மை அறியாமலேயே நமது தலை அந்தச் சிற்பிகளுக்கு வணங்கும். இத்தலத்தில் சித்திரைத்தேர், ஆடி பதினெட்டு, மார்கழித் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி ஆகிய விழாக்கள் எல்லாம் சிறப்பாக நடக்கின்றன. கோயிலை விட்டு வெளிவருமுன் இக்கோயிலில் உள்ள செப்புச் சிலைகளையும் பார்த்துவிட வேண்டும். ஆனந்த நடராஜர் சிவகாமி எல்லாம் மற்றக் கோயில்களில் உள்ளவர்களைப் போலத்தான். சோமாஸ்கந்தர், திரிபுராந்தகர், சமயகுரவர் நால்வர் எல்லாம் நல்ல செப்புப் படிமங்கள். இவர்களோடு காளிகா தாண்டவத் திரு உருவம் ஒன்று. இரண்டு காலையுமே ஊன்றி அநாயாசமாக ஆகாய வீதியை நோக்கி நடக்கும் நர்த்தனர் அவர். மிக அழகான வடிவம். இவரைக் காணவே ஒரு நடை போகலாம் இத்தலத்துக்கு.

இத்தலத்துக்குச் சமயகுரவர் நால்வருமே வந்திருக்கிறார்கள். மணி



காளிகா தாண்டவர்

வாசகரது அனுபவத்தை முன்னரே பார்த்தோம். சுந்தரர் நமச்சிவாயப் பதிகம் பாடுவதற்குத் தேர்ந்தெடுத்த தலமே இது தான் என்றும் தெரிந்தோம். சம்பந்தர் அப்பர் இருவரும் வேறு பாடி இருக்கிறார்கள்.


பெண்ணமர் மேனியினாரும்,
　பிறைபுல்கு செஞ்சடையாரும்,
கண்ணமர் நெற்றியினாரும்,
　காதமரும் குழையாரும்,
எண்ணமருங் குணத்தாரும்,
　இமையவர் ஏத்தநின்றாரும்,
பண்ணமர் பாடலினாரும்,
　பாண்டிக் கொடுமுடியாரே

என்பது சம்பந்தர் தேவாரம். கோயிலில் உள்ள காளிகா தாண்டவத் திருவுருவின் முன் நின்று இப் பாடலைப் பாடித்தான் பாருங்களேன். அவர் நம்மோடு பேசத் தயங்க மாட்டார் என்பதனைக் காண்போம். பண்ணமைந்த பாடலால் சம்பந்தர் பாடினார். அப்பரோ,

சிட்டனை, சிவனைச்
　செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை
　ஆலநிழல் அமர்
பட்டனைத் திருப்
　பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழ
　நம்வினை நாசமே

என்று அடக்கமாகவே பாடி மகிழ்கிறார். இந்தப் பாடல்களையெல்லாம் பாடி மகிழ்ந்தால், அங்குள்ள நிர்வாகிகள் சொல்வார்கள். கொங்கு நாட்டில் உள்ள தலங்களில் இத்தலம் ஒன்றுதான் மூவராலும் பாடப் பெறும்பேறு பெற்றது என்று. நான் சொல்லுவேன், இக் கொடுமுடியாரைப் பாடும் பேற்றை இந்த மூவர் என்ன சமயகுரவர்கள் நால்வருமே பெற்றவர்கள்தான் என்று. இத் தலத்து இறைவன் பாடல் உகந்த பெருமான் என்றும் தெரிகிறது. நால்வரது பாடல் பெற்றதோடு அவர் திருப்தியடையவில்லை. கபிலதேவ நாயனாரின் பாடல் ஒன்றையும் பெற்றிருக்கிறார். பதினோராம் திருமுறையில் இரட்டை மணிமாலையில் ஒரு பாட்டு. நல்ல அகத் துறையில் அமைந்திருக்கிறது. ஒரு பெண் கொடுமுடியாரிடம் காதல் கொண்டு வாடுகிறாள். அந்தப் பெண்ணின் தாய் இறைவனிடம் சென்று இப்படி அவள் நாளுக்கு நாள் மெலிந்து வாடி நைய விடலாமா என்று கேட்கிறாள். இந்தக் கேள்விதான் பாட்டாக வருகிறது கபில தேவ நாயனாரது வாக்கில்.

நிறம் பிறிதாய், உள் மெலிந்து
　நெஞ்சு உருகி வாளா
புறம் புறமே நாள் போக்கு
　வாளோ ? — நறுந்தேன்



கொடுமுடிக் கோயில்

படுமுடியாய் பாய்நீர்
　பரந்து ஒழுகு பாண்டிக்
கொடு முடியாய் ! என்றன் கோடி

பாடலைப் பாடிப்பாடி மகிழலாம். இந்தப் பாடல் நம் உள்ளத்தை உருக்குகிறது.

இக்கோயிலில் கல்வெட்டுகள் நிறைய உண்டு. இத்தலம் அதிராஜ மண்டலத்துக் காவிரி நாட்டுக்கறையூர் திருப்பாண்டிக் கொடுமுடி யென்றும், இறைவன் பெயர் திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர், ஆளுடைய நாயனார் என்றும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. சுந்தரபாண்டியன் கோனேரின்மை கொண்டான் கொங்கு மன்னன் வீரநாராயண ரவிவர்மன் முதலியோர் கல்வெட்டுகளின் மூலம் இங்கு பள்ளி கொண்ட பெருமாள், பெரிய திருவடி, இளைய பிள்ளையார் முதலியவர்கள் எழுந்தருளிய விவரமும் கோயில் பூசனை, திருவிழா திருப்பணிகளுக்கு ஏற்படுத்திய நில தான விவரங்களும் கிடைக்கின்றன. இவற்றையெல்லாம் ஆராய்வார் ஆராயட்டும். நாம் இறைவன் இறைவி, பெருமாள், பிரம்மா முதலியவர்களை வணங்குவதோடு அங்குள்ள முருகனை, அருணகிரியாருடன் சேர்ந்து 'குரு எனச் சிவனுக் கருள் போதா ? கொடுமுடி குமரப் பெருமானே !' என்று பாடிப் பரவிவிட்டுத் திரும்பி வந்து விடலாம்.

ஊரை விட்டுத் திரும்புமுன், அங்குள்ள அன்பர்கள் ஊருக்குத் தென்மேற்கு மூலையில் தேரோடும் வீதியில் உள்ள மலையம்மன் கோயிலுக்கும் அழைத்துச் செல்வர். பார்வத வர்த்தினியே அங்கு கன்னிக் கோல உருவில் எழுந்தருளியிருக்கிறாள். அம்மன் சந்நிதியில் நந்தி இருக்கிறது. இன்னும் அக்கோயிலுள் நாக நாதர், ஆனந்தவல்லி, பேச்சியம்மாள், கருப்பண்ணசாமி முதலியவர்களது சந்நிதிகளும் இருக்கின்றன. இவர்களையுமே பார்த்துவிட்டு ரயிலேறி ஊர் திரும்பலாம்.


பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்
கால்கேட் குளோரோபில்
குழந்தைகள் அதன் பெப்பர்மின்ட் வாசனையை மிகவும் விரும்புகிறார்கள்!
ஈறுகளை பலப் படுத்து கிறது
வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆல் போல்கோப்" பரிசோதனைகளில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையைவிட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.
சொத்தைபாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பற்களை சொத்தையாக்கும் கிருமிகள் அழிகின்றன.
கால்கேட்டின் பிரத்தியேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபில்லின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் வாங்குங்கள்!
கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபில்லின் பூரண தன்மையை அடைந்து, ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க உதவுகிறது. உன்னதமான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட், சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அனுபவங்கொண்ட உலகிலே மிகப்பெரிய ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்படுகிறது!
வேறு எந்த பற்பசையிலும் இதைவிட அதிக வீரிய குளோரோபில் இல்லை — குழந்தைகள் அதன் பெப்பர்மின்ட் வாசனையை மிகவும் விரும்புகிறார்கள்!
COLGATE
CHLOROPHYLL
TOOTH POWDER
COLGATE
COLGATE
CHLOROPHYLL
TOOTH PASTE
பெரிய எக்கானமி சைஸ் லாபகரமானது!
CTPA-G-10 TAM.



எங்கிருந்தோ வந்தான்

மூலக்கதை: என். எஸ். பட்கே. தமிழாக்கம்: நெல்லை எஸ். வேலாயுதம்

ஜீப்பை ஓட்டி வந்த கர்னல் என்னிடம் திரும்பி, "நீங்கள் பாராமுல்லாவில்தானே இறங்க வேண்டும்?" என்று கேட்டார்.

"ஆம்" என்றேன். ஜீப் நின்றது. நான் இறங்குவதற்குத் தயாரானேன். பின்பக்கமிருந்த ஒரு பட்டாளத்துக்காரன் என்னுடைய பெட்டியை எடுத்தான்.

"சவாரி சுகமாயிருந்ததல்லவா?" என்று கேட்டார் கர்னல்.

"அருமையான சவாரி. நாம் ஸ்ரீநகரை விட்டுக் கிளம்பும்போது மணி ஐந்தரை. இப்பொழுது மணி ஆறேகால்தான் ஆகிறது. முக்கால் மணி நேரத்தில் நாற்பத்திரண்டு மைல்கள்! உங்களுக்கு மிக நன்றி" என்றேன்.

"நல்ல ரஸ்தா. அதற்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்!" என்றார் கர்னல்.

"எஜமான்! அவித்த முட்டைகள் வாங்குகிறீர்களா?" குரல் கேட்டுத் திரும்பினேன். ஜீப்புக்கு அருகில் ரோட்டில் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். கையில் இருந்த பையில் முட்டைகள் இருந்தன. நீல நிறக் கண்களுடைய அந்தப் பையன் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான்.

"ஆஹா, தம்பி! முட்டைகள் கொண்டு வந்திருக்கிறாயா!" பையனைப் பார்த்துச் சிரித்த கர்னல் என்னிடம் திரும்பி, "இந்தச் சிறுவனை உங்களுக்குத் தெரியுமா? பாராமுல்லாவில் நீங்கள் தங்குவதாய் இவனைத் தெரிந்து கொள்ளுங்கள். பையன் இந்த ஊரைச் சேர்ந்தவன்தான் என நினைக்கிறேன். நான் இந்த வழியே போகும் போதும் வரும்போதும் அவனும் அவன் சகோதரனும் முட்டைகள் விற்பனை செய்வார்கள்" என்றார்.

ஏதோ முனைவொரு பையனைப் பார்த்தேன்: ஒல்லியான அப்பையன் வயதுக்கு மீறி வளர்ந்திருந்தான். சுமார் பதினைந்து வயது இருக்கும். செம்பட்டை முடி. எளிமை தோன்ற, ஒளி மிகுந்த கண்கள். அவனையே பார்த்தேன். அவனிடம் காணப்பட்ட வசீகரம் எங்கு இருக்கிறது என ஆராய்ந்தேன். கண்களிலா? ஒரு வேளை தன்னடக்கத்துடனும், நம்பிக்கையுடனும் நிற்கும் அவனது கால்களிலா?......

"எங்கே உன் சகோதரனைக் காணோம்?" என்று கர்னல் கேட்டார்.

"வீட்டில் வேலையாக இருக்கிறான். நாங்கள் வைக்கப் போகும் கடையைக் கட்டிக் கொண்டிருக்கிறான்."

"கடையா? ஆஹா! அப்படியானால் நீ பெரிய வியாபாரியாகப் போகிறாய் என்று சொல்லு...!"

பையனின் முகம் மலர்ந்தது.

"சரி, இன்று எவ்வளவு முட்டைகள் விற்றாய்?" என்று கர்னல் கேட்டார்.

"இன்று போதாத வேளை, சார்!" நீலநிறக் கண்களில் சோகத்தின் சாயல் தென்பட்டது. "பட்டாளத்துக்காரர்கள் வந்து போகும் போது ஏராளமாக விற்பனையாகும். அவர்கள் எங்களிடம் நன்றாக நடந்து கொள்வார்கள். எங்கள் முட்டையென்றால் அவர்களுக்குப் பிரியம். இன்று பட்டாளத்துக்காரர்கள் வரவில்லை, பாருங்கள். என் பையும் அப்படியே இருக்கிறது" என்று கூறிக் கர்னலிடம் பையைக் காட்டினான் அந்தப் பையன்.



அந்தக் கர்னல் பையை வாங்கிக் கொண்டார். ஓர் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துப் பையனிடம் கொடுத்தார்.

நோட்டைப் பார்த்த பையன் தலையை ஆட்டினான். ''வேண்டாம். இவ்வளவு ரூபாய் வேண்டாம், சார்!'' என்றான். அவனது முகம் மாறியது. ''பையில் இருபத்திரண்டு முட்டைகள்தான் இருக்கின்றன.''

''சரி, இருபத்திரண்டு முட்டைகளுக்கும் என்ன விலை?''

''ஒரு முட்டைக்கு மூன்று அணா சார். எனவே அறுபத்தாறு அணாக்கள்தான் எடுத்துக் கொள்வேன். அதற்கு மேல் ஒரு பைசா கூட எனக்கு வேண்டாம். நான் பிச்சைக்காரனல்ல'' என்று கூறினான்.

அவனது அந்த வார்த்தைகளில்தான் எத்தனை கர்வம்! எவ்வளவு தன்மானம்!

''சரி, நோட்டை நீயே வைத்துக் கொள். என் கணக்கில் குறித்துக் கொள்.

''அடுத்த தடவை இவ்வழியே நான் போகும் போது அதிகமாக முட்டைகள் கொடு'' என்று கூறிப் பையனின் கையில் கர்னல் நோட்டை வைத்தார்.

''சார்! இதோ உப்பு, மிளகு'' என்று கூறிப் பையன் சில சின்னஞ் சிறு பொட்டணங்களைக் கொடுத்தான்.

''இந்தப் பொட்டணங்களுக்கு எவ்வளவு தரவேண்டும்?'' கர்னல் என்னை நோக்கியவாறே பையனிடம் கேட்டார்.

''ஒன்றுமில்லை. முட்டையோடு சேர்ந்தது தான். உங்களுக்குத்தான் தெரியுமே, சார்!''

''ஆம், தெரியும்.'' பொட்டணங்களை வாங்கிக் கொண்ட கர்னல், ''ஒவ்வொரு பொட்டணத்திலும் பொடி செய்யப்பட்ட உப்பும், மிளகும் இருக்கின்றன. முட்டைகளுக்கு மேலும் ருசியைக் கொடுப்பதற்காகத் தான் இவை. பையன் புத்திசாலியான வியாபாரி. இல்லையா?'' என்றார் என்னிடம்.

''நிச்சயமாக!'' என்றேன் நான்.

ஜீப்பின் பின்னாலிருந்த ஆட்களிடம் சில முட்டைகளைக் கொடுத்த கர்னல் எனக்கும் தந்தார். நான் இரண்டு முட்டைகளை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினேன்.

''அச்சா, டை டை.'' கைகளை அசைத்தவாறே கர்னல் ஜீப்பை ஓட்டினார். மறுகணம் நான் ரஸ்தாவில் தனியாக விடப்பட்டேன். பையன் மட்டும் நின்று கொண்டிருந்தான். பெட்டியை எடுக்கப் போனேன். ஆனால் எனக்கு முன்னால் சென்று பையன் அந்தப் பெட்டியை எடுத்தான்.

''நான் தூக்கி வருகிறேன், சார். எங்கே போக வேண்டும்?'' என்று கேட்டான்.

''முசாபரி பங்களாவுக்கு'' என்றவன் வானத்தைப் பார்த்தேன். அஸ்தமன சூரியன் தங்க நிறக் கிரணங்களை அள்ளி வீசிக் கொண்டிருந்தான். மேக மண்டலத்தில் மஞ்சள் நிறம் ஜ்வலித்தது. மலைமுகடுகள் பனி மூட்டத்தினால் வெள்ளை வெளேரெனக் காட்சி அளித்தன. மரங்களெல்லாம் ஒளி வீசின. ஆஹா, எத்தனை அழகு! பிறகு ரஸ்தாவின் ஓரத்திலுள்ள வீடுகளையும், நீண்ட கூர்மையான கோபுரங்களையும் என் கண்கள் நோக்கின. ஆறு மாதங்களுக்கு முன்பு அந்த நகரம், பாராமுல்லா படையெடுப்பாளர்களின் சூறையிக்கு உட்பட்டது என்னுடைய நினைவுக்கு வந்தது.

''ஏன் அப்பா! அதுதானே பாராமுல்லா?'' என்று கைவிரலைக் காட்டிக் கேட்டேன்.

''ஆமாம், சார்!'' என்று கூறிய பையன் என் முன்னால் வந்தான்.

''பாராமுல்லாவைப் பார்க்கவா வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

அவனது அழகிய கழுத்தையும், அகன்ற தோள்களையும் அழுக்கடைந்த சட்டையையும் பார்த்தவாறே 'ஆம்' என்றேன்.

''வெகு தூரத்திலிருந்து வருகிறீர்களோ?''

''ஆம்.'' ஒரு முட்டையைச் சுவைத்தேன். உன் முட்டைகள் ருசியா யிருக்கின்றன.''

''ஆமாம் சார். அவை புது முட்டைகள். அவற்றைத் தினசரி காலையில் என் தாயார் வாங்கிக் கொண்டு வருவாள். நல்லதாகப் பார்த்தே வாங்குவாள்.''

''உனக்கு அம்மா இருக்கிறாளா? வயது முதிர்ந்தவளா?''

''ஆம் சார்! ஆனால் வயதானவள் இல்லை. அவள் ஒரு புத்திசாலி. குருடியாக இருந்தாலும் புது முட்டையைக் கண்டுபிடித்து விடுவாள்!'' அவன் கண்களில் நீர் துளித்தது.

''ஓஹோ!'' மேலும் அவனது வருத்தத்தை அதிகரிக்க நான் விரும்பவில்லை. ''உன் பெயரென்ன?'' என்றேன்.

''என்னை, சபானு என்று அழைப்பார்கள்.'' மறுகணம் முசாபரி பங்களாவின் படிகளில் ஒரு சேவகனைப் பார்த்த அந்தப் பையன், ''ஹே, அஹாது! சார் வந்திருக்கிறார். இங்கே பார்!'' என கத்தினான்.

உடனே அந்தச் சேவகன் எங்களை நோக்கி ஓடி வந்தான்.

''எஜமான், மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிய வண்ணம் அவன் சபானுவிடமிருந்து பெட்டியை வாங்கினான். ''ஒரு மணி நேரம் காத்துக் கொண்டிருந்தேன். பிறகு எஜமான் இன்று வரவில்லை போலும் என்று நினைத்தேன். மன்னிக்க வேண்டும், எஜமான்!'' என்று கூறினான்.

''சரி. பரவாயில்லை.''

பங்களாவை நெருங்கியதும் சபானு சலாம் போட்டான். ''நான் போகலாமா, சார்.''

''சரி சபானு. ரொம்ப நன்றி.'' மறுபடியும் ஒரு சலாம் போட்டுவிட்டு அவன் திரும்பினான். சில கஜதூரம் சென்றதும் ஓடினான். அவனது நடத்தை எனக்கு ரொம்பவும் பிடித்து விட்டது.

மறுநாள் நான் அதிகாலையில் எழுந்தேன். ஆறு மாதங்களுக்கு முன்னால் தலைநகரமான ஸ்ரீநகரைப் பிடித்துவிட வேண்டும் என்ற நோக்குடன் காஷ்மீரின் வடமேற்கு ஓரத்திலிருந்து வந்த படையெடுப்பாளர்கள் பாராமுல்லா நகரில் நடத்திய திருவிளையாடல்களின் விளைவாகக் கொள்ளை, கொலைகளின் விளைவாகப் பாழ்பட்டுப்போன அந்த நகரை-நகரின் மூலை முடுக்குகளை, சந்து பொந்துகளைப் பார்க்க விரும்பினேன். காலை உணவை முடித்துவிட்டு, பங்களாவின் முற்றத்தில் சிகரட்டை ருசித்துப் பிடித்துக் கொண்டிருந்தேன். அஹாதுவை என்னுடன் அழைத்துச் செல்லலாமா என யோசித்துக் கொண்டிருந்தேன். என் எதிரே பங்களாவை நோக்கி இரண்டு சிறுவர்கள் வருவது தெரிந்தது.

அதில் ஒருவன் சபாஹு. பங்களாவை நெருங்கி வந்ததும் அவர்கள் இருவரும் சலாம் போட்டனர்.

"நல்லது சபாஹு. காலை வணக்கம்."

"இது என்னுடைய சகோதரன் சார்!" என்று இன்னொரு சிறுவனை எனக்கு அறிமுகப்படுத்தினான்.

"மறுபடியும் முட்டை கொண்டு வந்திருக்கிறாயா, சபாஹு?" என்று கேட்டேன்.

என்னுடைய தமாஷைப் புரிந்துகொண்ட அவன் சிரித்தான்.

"பிரயாணிகளுக்கு மட்டும்தான் முட்டைகள் விற்போம்" என்றான்.

"அப்படியானால் இப்பொழுது என்ன விற்பனைசெய்யப் போகிறாய்?"

"ஒன்றுமில்லை சார்! உங்களுடைய பூட்ஸைப் பாலிஷ் செய்ய வேண்டியிருக்கும் என நினைத்தோம். அத்துடன் 'பாய்' உங்களைப் பார்க்க விரும்பினான்."

"ஓ, அப்படியா! என்னைப் பார்ப்பதற்காக ஒருவன் வருவது என் வாழ்க்கையிலேயே இதுதான் முதல் தடவை." நான் சிரித்தேன். பின்னர் அஹாதுவை எனது பூட்ஸ்களைக் கொண்டு வந்து சிறுவர்களிடம் கொடுக்குமாறு கூறினேன்.



முற்றத்தில் அமர்ந்து இருவரும் சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினர்.

அவர்களிடம் ஏதாவது பேச வேண்டுமென்று நினைத்தேன். "உன் தம்பியின் பெயர் என்ன சபாஹு?"

"பாய்!" என்னைப் பார்க்காமலேயே சபாஹு பதில் கூறினான்.

''நீங்கள் செம்மான் இனத்தைச் சார்ந்தவர்கள் இல்லையே?''

''இல்லை இல்லவே இல்லை சார்!'' வலியுறுத்திக் கூறினான். ''நான் ஒரு பழ வியாபாரியின் மகன். பணம் கிடைக்கும் என்று 'பாலிஷ்' போடுகிறோம். அத்துடன் நேர்மையான எந்த வேலையையும் செய்யலாம் என்று எங்கள் தாயார் கூறியிருக்கிறாள்'' என்றான்.

''அப்படியா?'' நேர்மையான உழைப்பின் தத்துவத்தைப்பற்றித் தெரிந்த அந்தச் சிறுவர்களைக் கவனித்தேன்.

வேலை முடிந்தது. பளிங்குக் கண்ணாடி போன்று மின்னின பூட்ஸ்கள். ஒரு ரூபாய் நோட்டைச் சபானுவிடம் கொடுத்தேன்.

''சில்லறையில்லையா சார்.''

''சில்லறை எதற்கு. நோட்டை எடுத்துக் கொள்.''

''அதெப்படி சார். செய்யாத வேலைக்கு எவ்வாறு பணம் வாங்க முடியும்? எங்களுக்குப் பணம் தேவை. அவசரமாகக்கூடத்தான் தேவைப்படுகிறது. அதற்காக நாங்கள் சன்மானம் பெற விரும்பவில்லை. உழைத்துச் சம்பாதிக்கவே விரும்புகிறோம்.''

சூரிய வெளிச்சத்தில் தோளோடு தோளாக நின்று கொண்டிருந்த அச்சிறுவர்களைப் பார்த்தேன். ஒருவன் செம்பட்டை முடி. நீலநிறக் கண்கள். மற்றவன் எண்ணெய் தடவாத முடி. கருமையான கண்கள். அவர்களது முகத்தில் தான் எத்தனை மிருதுத்தன்மை! விசித்திரமான பார்வை!

''ரொம்ப நல்லது. வேலை கொடுத்தால் நோட்டை எடுத்துக் கொள்வாயா?''

''சரி சார். வேலை கொடுங்கள். சந்தோஷமாகச் செய்கிறோம்.''

''அப்படியானால் என்னுடன் நகரத்துக்குள் வாருங்கள். வழிகாட்டுங்கள். என்னுடன் வருகிறீர்களா?''

''நிச்சயமாக. எஜமான் இதைவிட எங்களுக்கு வேறு என்ன வேலை?''

''ரொம்ப சரி!'' பங்களாவுக்குள் சென்று ஆடையணிந்து கொண்டு வந்தேன்.

அவர்கள் அவ்வளவு சிறந்த வழிகாட்டிகளாக இருப்பார்கள் என்று நான் நினைக்கவேயில்லை. அந்த நகரத்தின் ஒவ்வோர் அங்குலத்தையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். படையெடுப்பாளர்களின் அமளி துமளிகள் அனைத்தையும் அவர்கள் சரித்திரமாகக் கூறினார்கள். ஒரு மசூதி சிதைக்கப்பட்டிருந்தது. ஓர் இந்துக்கோவில் கொள்ளையடிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டிருந்தது. ஒரு முஸ்லிம் நிலப்பிரபுவின் வீட்டில் படையெடுப்பாளர்கள் அவரைக் கொன்று விட்டனர். அவமானத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக அவரது பெண்டு பிள்ளைகள் ஜீலம் நதியில் மூழ்கிவிட்டனர். இதோ இந்தச் சதுக்கத்தில் தான், படையெடுப்பாளர்களை எதிர்த்துத் தாக்குவதற்காக மக்களைத் திரட்டிய மக்பூல் ஷெர்வானி நகத்தில் ஊசியேற்றப்பட்டுச் சித்திரவதைக்குப் பின் கொலை செய்யப்பட்டான். இந்தக் கடை வீதியைத்தான் படையெடுப்பாளர்கள் முழுமையாக நொறுக்கினர். பள்ளிக்கூடத்தையும், ஆஸ்பத்திரியையும்கூட அவர்கள் அழித்தனர். தானியக் கிடங்குகளிலும், வைக்கோல் போர்களிலும் தீ மூட்டப்பட்டது. பசுக்களும், ஆடுமாடுகளும் நெருப்புக்குள்ளாயின... கோரக் காட்சிகளை எனக்குக் காட்டிய சபானு சகோதரர்கள் ஒளிமிகுந்த பகுதிகளையும் காட்டத் தவறவில்லை. படையெடுப்பாளர்கள் ஸ்ரீநகரின் நல்ல வாயிலில் நுழைந்ததையும், தகுந்த நேரத்தில் இந்திய ராணுவம் வந்து துணிச்சலாகப் போராடி எதிரிகளை ஓட ஓட விரட்டிக் காஷ்மீரைக் காப்பாற்றிய வரலாற்றையும் எடுத்துக் கூறினர். பின்னர் பாராமுல்லா மக்கள் தங்கள் வாழ்வை மீண்டும் செப்பனிட்டுக் கொண்டனர். இழந்து போன வீடுகளையும், கடைகளையும் கோவில்களையும் சீர் செய்துவாழ்வைத்தொடங்கினர். புனரமைப்பு வேலையில்தான் எவ்வளவு தோழமையுணர்வு!

ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டனர். அவர்களது வீடுகள் கொள்ளி வைக்கப்பட்டன; சூறையாடப் பட்டன. ஆனால் கொள்ளி வைத்தவர்கள் அந்த மக்களது உள்ளத்திலும் கொள்ளிவைத்து நம்பிக்கை, தன்னம்பிக்கை என்ற ஒளியை ஏற்படுத்தி விட்டனர்.

''இன்னும் ஒரு வருடம் கழித்து நீங்கள் அவசியம் வரவேண்டும் சார்...'' சபானு சகோதரர்கள் திரும்பத் திரும்பக் கூறினர். ''நீங்கள் மறுபடியும் வரும்பொழுது எங்கள் நகரம் படையெடுப்புக்குட்பட்ட நகரம் என்பதை நம்ப மாட்டீர்கள். அதற்குள் நாங்கள் நகரைச் செம்மைப்படுத்திப் பழைய படி அழகுள்ள நகரமாக்கி விடுவோம்.....'' காஷ்மீரைப் பற்றிப் புத்தகத்தில் படித்துத் தெரிந்ததைவிட இச்சிறுவர்களின் மூலம் நான் அதிகம் தெரிந்து கொண்டேன். சபானுவுக்கு இன்னொரு நோட்டைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அப்படிக் கொடுப்பது அவனது கௌரவத்துக்கு இழிவாகும் என்று எண்ணி நான் அப்படிச் செய்யவில்லை. முசாபரி பங்களாவுக்குத் திரும்பியதும் அவர்களுக்கு என் இதய பூர்வமான நன்றியை மட்டும் தெரிவித்தேன்.

மதிய உணவு பரிமாறிய அஹமது, ''வழிகாட்டிகள் எப்படி எஜமான்!'' என்றான்.

''இதுபோன்ற சகோதரர்களை நான் இது வரை பார்த்ததில்லை. அவர்கள் இரட்டையர்களா அஹமது? அப்படித்தான் இருக்கவேண்டும்'' என்றேன்.

''இல்லை, எஜமான் அவர்கள் இரட்டையர்கள் இல்லை. அவர்கள் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள்கூட இல்லை. ஆனால் சகோதரர்கள் என்றுதான் கூறிக் கொள்வார்கள்.''


எனக்கு ஆச்சரியமாயிருந்தது. தலையை அசைத்தேன்.

''நம்புங்கள், எஜமான்! அவர்களைச் சிறு வயது முதலே எனக்குத் தெரியும். சபானு, பாய் என்று அழைக்கும் அந்தச் சிறுவன் ஓர் இந்து. அவனது பெயர் காசிநாத். அவனது தந்தை ஒரு காட்டிலாகா அதிகாரி. படையெடுப்பாளர்கள் அவரைக் கொன்று அவரது வீட்டுக்கும் தீ வைத்துவிட்டனர். காசிநாத் அனாதையாக விடப்பட்டான். சபானுவின் தாயார் அவனை எடுத்துத் தனது குடும்பத்தில் ஒருவனாகச் சேர்த்துக் கொண்டாள். பட்டினி

TALC

by MAX FACTOR

keeps you deliciously cool,
delightfully fresh





Supplies are once more available

ORIENT COSMETICS PRIVATE LIMITED • BOMBAY • MADRAS

ஈறுகளை உறுதியுடனும்
பற்களை ஆரோக்கியத்துடனும்
சுவாசத்தை நறுமணத்துடனும்

இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்

பனிச்சென்று ஒளிவீசும் வெண்மையும்
ஆரோக்கியமுமான பல் வரிசைகளை
அடைய வேண்டுமானால்

போர்ஹான்ஸ்

பற்பசையை உபயோகியுங்கள்



ஈறுகளின் உறுதிக்காக என்றே டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் கண்டுபிடித்து அளிக்கும் விசேஷத் துவர்ப்புப் பொருள் கலந்துள்ள பற்பசை இது ஒன்றுதான்.

Geoffrey Manners & Co. Private Ltd.

TAM

- B.27

C
A
Q

ஸ்பென்ஸர் அளிக்கும் சேவை

சீதளம், ஜலதோஷம், தசை வலி
ஜுரம் முதலியவைகளுக்கு

C.A.Q

REGD. TRADE MARK

கேள்வியும் சந்தேகமும் வேண்டாம்

சி. ஏ. க்யூ. ஒன்றே.
அதை தயாரிப்பவர்
ஸ்பென்ஸரே

CQ-14A

திரவ மருந்தாகவும், கேப்ஸுலாகவும் எல்லா
மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

ஸ்பென்ஸர் & கம்பெனி லிமிடெட்

மதராஸ் : : பம்பாய் : : கல்கத்தா : டில்லி மற்றும் கிளைகள்

யையும், நாசத்தையும் அவன் நேரடியாகப் பார்த்து அனுபவித்தவன். படைவெடுப்பாளர்கள் அவனது வீட்டையும், கடையையும் கூட நாசப்படுத்தி விட்டனர். ஆனால் அவள் ஒரு வீர மாது. அவளது மூத்த மகனைத் தற்காப்புப் படையில் சேர அனுமதித்தாள். அவன் ஊரி முகாமில் இருக்கிறான். இன்று அந்த வீட்டில் உயிர்வாழுவது இந்தச் சிறுவர்களால்தான். அந்தச் சிறுவர்கள் கொஞ்சம் பணமும் சேர்த்துள்ளனர். அதை வைத்துத் தான் கடையைக் கட்டப் போவதாகக் கூறினார்கள்.''

''அவர்கள் நன்றாயிருக்கட்டும். ஆனால் தனக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப் பற்றிச் சபான் ஒன்றும் கூறவில்லையே?''

''அவன் கொஞ்சம் கர்வக்காரன் எஜமான்! அதனால்தான் தனது துக்கத்தைப் பற்றிக் கூறவில்லை.''

''காசிநாத்தின் தந்தை இறந்தது பற்றியும் கூறவில்லையே?''

''காசிநாத்தைத் தன் சொந்த சகோதரன் என்றே எல்லோரும் நம்ப வேண்டும் என அவன் விரும்புகிறான். அவனது தாயார் கூறுவது என்ன தெரியுமா? அவள் தனக்கு இரண்டு பையன்கள்தான் என்று யாரிடமும் கூறமாட்டாள். மூன்றுபேர்கள் இருப்பதாகத் தான் சொல்வாள்.''

இதற்குப் பின் அநேகமாக பல விஷயங்களைப் பற்றிப் பேசினான். ஆனால் என் இதயத்தில் சபானும் அவனது பார்வையிழந்த தாயும் தான் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர். ஓய்வெடுப்பதற்காகப் படுத்தேன். இன்னும் சில மணி நேரங்களில் பாராமுல்லாவை விட்டுப் போய்விடுவோமே! மீண்டும் அந்தச் சிறுவர்களைப் பார்க்க முடியாதே என்ற ஆதங்கம் மேலிட்டது.

சிறிது நேரம் கழிந்தது. நான் போக வேண்டிய ராணுவ மோட்டார் வந்து விட்டது. முற்றத்துக்கு வந்தேன். என்ன ஆச்சரியம்! பங்களாவின் முன்னால் சபான் சகோதரர்கள் நின்று கொண்டிருந்தனர். நான் மகிழ்ச்சியடைந்தேன்.

''சபான்! நான் இப்பொழுது ஊரிக்குப் போகிறேன்'' என்றவாறே சகோதரர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தேன்.

''நல்லது சார்! எங்களுக்குத் தெரியும். காலையில் நீங்கள் சொன்னீர்கள் அல்லவா? அதனால்தான் வந்தோம்.''

''ஆஹா! என்னை வழியனுப்ப வந்தீர்கள். இல்லையா?''

''ஆமாம், சார்.'' பின்னர் கொஞ்சம் சந்தேகத்துடன் ''சார், எங்களுக்காக இல்லை, எங்கள் தாயாருக்காக நீங்கள் ஒரு சிறு உதவி செய்ய முடியுமா?'' என்றான் சபான்.

''மகிழ்ச்சியுடன் செய்கிறேன், சபான்! உன் தாயாருக்காக நான் என்ன செய்ய வேண்டும். சொல்.''

''ஊரியிலிருக்கும் என் அண்ணன் உஸ்மானுக்காக அவள் தின்பண்டங்கள் தயாரித்திருக்கிறாள்.'' ஒரு தகர டப்பாவைக் காட்டினான். ''என் அண்ணனிடம் கொடுத்து விடுவீர்களா? அவர் ஊரியில் தற்காப்புப் படையில் இருக்கிறார்.''

டப்பாவை அவன் கையிலிருந்து வாங்கினேன். ''உன் அண்ணனிடம் வேறு ஏதாவது சொல்ல வேண்டுமா?''

''விசேஷமாக ஒன்றுமில்லை சார். ஒரு சைக்கிள் கிடைத்தால் இந்த வாரக் கடைசியில் அவரைப் போய்ப் பார்க்க நினைத்திருக்கிறேன். நாங்கள் எல்லோரும் சௌகரியமாக இருக்கிறோம் என்று சொல்லுங்கள். கடையைக் கட்டி முடித்து விட்டோம். கொஞ்சம் ஆப்பிள் மற்றும் சாமான்கள் வாங்கப் பணம் கிடைத்ததும் கடையில் வியாபாரம் ஆரம்பித்து விடுவோம் என்று கூறுங்கள்.'' அவசரப்பட்டுக் கூறிவிட்ட சபான் தன் தவறை உணர்ந்து கொண்டான். ''சார்! கடை விவகாரத்தைச் சொல்ல வேண்டாம். எங்களுக்குப் பணம் தேவை என்பது உஸ்மானுக்குத் தெரியக் கூடாது. எங்களைப் பற்றிய கவலை அவருக்கு இருக்கக் கூடாது. நாங்களே சமாளித்துக் கொள்வோம். என்ன, கொஞ்ச நாட்களாகும். பரவாயில்லை. நாங்கள் சுகமாயிருக்கிறோம். சந்தோஷமாயிருக்கிறோம், கடையைக் கட்டி விட்டோம் என்று மட்டும் உஸ்மானிடம் கூறுங்கள்.''

''வியாபாரம் ஆரம்பிக்க எவ்வளவு பணம் வேண்டும், சபான்?'' எனக் கேட்டேன் நான்.

''முப்பது ரூபாயாவது வேண்டும். எப்படியும் சேர்த்து விடுவோம், சார்.''

''நிச்சயமாகக் கிடைக்கும், சபான்!'' கீழே குனிந்து பையன்களின் முதுகைத் தட்டிக் கொடுத்தேன்.

அவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தனர். சலாம் போட்டனர். மோட்டாரில் ஏறி உட்கார்ந்து கையை அசைத்தேன். சபான் என் அருகில் வந்தான். ''சார்! உஸ்மானிடத்தில் பணத்தைப் பற்றி ஒன்றும் சொல்லாதீர்கள்'' என்றான். மறுகணம் மோட்டார் புறப்பட்டு விட்டது.

இரண்டாம் நாள். ஊரியில் தங்கியிருந்த நான் ஊரியிலுள்ள விசேஷ அவசர கால ராணுவ அதிகாரியைச் சந்தித்தேன். ''தற்காப்புப் படையில் உஸ்மான் என்ற பெயருடைய வாலிபன் இருக்கிறானா? நான் அவனைப் பார்க்க வேண்டும்'' என்றேன்.

அதிகாரியின் முகம் மாறியது. பேசாமல் இருந்தார். எனக்குக் குழப்பமேற்பட்டது. ''உஸ்மானைப் பார்க்க முடியுமா?'' என்று மறுபடியும் கேட்டேன்.

அதிகாரி தலையை அசைத்தார். ''மன்னித்துக் கொள்ளுங்கள் சார். நீங்கள் அவனைப் பார்க்க முடியாது.''

''ஏன்? சட்டம் இடம் கொடுக்கவில்லையா?''

''சட்ட விரோதம் இல்லை, சார்! உண்மையில் தற்காப்புப் படையிலுள்ள அனைவரையும் நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். பார்த்தால் தான் அந்த வாலிபர்கள் எப்பேர்ப்பட்டவர்கள், இந்திய ராணுவத்துக்கு அவர்கள் எவ்வாறு உதவி செய்கிறார்கள் என்பது தெரியும்'' என்றார்.

''அப்படியானால் நான் உஸ்மானை மட்டும் ஏன் பார்க்க முடியாது?''

''இல்லை...'' அவரது உதடுகள் நடுங்கின. நாக்குழறியது. ''இல்லை..அவன் இப்பொழுது எங்களுடன் இல்லை. நேற்று மாலை அவன் இறந்து போனதாகத் தகவல் வந்துள்ளது..''

''இறந்து விட்டானு?''

''சார்! அதிர்ச்சி தரும் செய்தியே. ஆனால் உண்மை.'' பின்னர் அந்த அதிகாரி உஸ்மானின் பயங்கர முடிவை விவரித்தார். மலையுச்சியில் பாரா இருந்தவர்களுக்கு உணவு கொண்டு செல்லும்போது ஒரு துப்பாக்கித் தோட்டா அவனது மார்பில் பாய்ந்ததால் செத்து விழுந்தானும்.

பயங்கரம்! என்னால் பேச முடியவில்லை. என் நரம்புகள் துடித்தன. மண்டை கனத்தது.

''உஸ்மான் சரியான பையன். அவனை உங்களுக்குத் தெரியுமா?'' என்றார் அதிகாரி.

அவரிடம் பதில் சொன்னேனு என்பதுகூட எனக்கு நினைவில்லை.

மாலையில் ஊரை விட்டுக் கிளம்பினேன். ஜீப் பாராமுல்லாவில் நிற்கும். சபாநு சகோதரர்கள் அங்கு நிற்பார்கள். இந்த எண்ணம் என்னை அலைக்கழித்தது. அவர்கள் என்னிடம் ஓடோடி வந்து உஸ்மானைப் பற்றி விசாரிப்பார்கள். அவர்களிடம் நான் என்ன பதில் சொல்வேன்? கர்னலிடம் 'பாராமுல்லாவில் காரை நிறுத்த வேண்டாம்' என்று சொன்னேன். ஆனால் அவரோ 'பாராமுல்லாவில் காரைக்கட்டாயம் நிறுத்திப் பரிசோதனை செய்ய அனுமதிக்கவேண்டும். வேண்டுமானால் அதிக நேரம் நிறுத்தவில்லை' என்றார். பாராமுல்லாவுக்குப் போகும்போது அந்தச் சிறுவர்கள் எப்படியாவது ரஸ்தாவுக்கு வராதிருக்க வேண்டும் எனக் கடவுளை வேண்டிக் கொண்டேன். ஆனால் வேண்டுதலுக்குப் பலனில்லை. கடவுள் இரக்கம் காட்டவில்லை. கொஞ்ச தூரத்தில் ரோட்டு ஓரத்தில் அந்தச் சிறுவர்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஜீப் நின்றதும் அவர்கள் மகிழ்ச்சி பொங்க என்னிடம் ஓடி வந்தனர். ''மீண்டும் ஒரு நாள் இங்கு தங்குவீர்களா?'' எனக் கேட்டான் சபாநு.

''இல்லை, சபாநு. தங்கத்தான் விரும்புகிறேன். ஆனால் முடியாது. இன்று இரவே நான் ஸ்ரீநகருக்குப் போக வேண்டும்.''

''டப்பாவை உஸ்மானிடம் கொடுத்தீர்களா, சார்?''

''நான் பேசாமல் தலையசைத்துச்சிரித்தேன்.

''அம்மா சந்தோஷமாயிருப்பதாகச் சொன்னீர்களா, சார்?''

மறுபடியும் தலையை யசைத்தேன். மேலும் என்னால் சிரிக்க முடியவில்லை.

''உஸ்மான் சுகமாயிருக்கிறானல்லவா?''

''சுகமாகத்தான் இருக்க வேண்டும், சபாநு!''

அந்தச் சிறுவர்களின் முகங்கள் சந்தோஷத்தால் மலர்ந்தன.

கர்னல் ஜீப்பை ஓட்ட ஆரம்பித்தார்.

''சபாநு, இங்கே வா'' எனக் கத்தினேன். அவன் என்னை நெருங்கியதும் மூன்று பத்து ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தேன்.

''உஸ்மான் கொடுத்தனுப்பினான்'' என்று கூறி அவனது கன்னத்தைத் தடவிக் கொடுத்தேன். ''சார்! பணத்தைப் பற்றி உஸ்மானிடம் சொல்லவேண்டாம் என்று கூறியிருந்தேனே?'' சபாநு கண்டிப்பாகப் பேசினான். ஜீப் முன்னால் பாய்ந்தோடியது.

ஸ்ரீநகரில் நான் ஒருவாரம் இருந்தேன். மறுபடியும் ஒருநாள் ஊருக்குப் போகவேண்டியிருந்தது. இதற்கிடையில் சபாநுவுக்கும் அவனது தாயாருக்கும் உஸ்மானின் முடிவு பற்றித் தெரிந்திருக்கும் என்று நம்பினேன். இப்பொழுது நான் சபாநுவைப் பார்க்க விரும்பவில்லை. அந்த இரு சிறுவர்களின் அழகான முகங்களை, இப்பொழுது தாங்கமுடியாத வருத்தத்தால் ஒளியிழந்து போன முகங்களை நான் பார்க்க விரும்பவில்லை... எனினும் என் இதயத்தின் ஒரு மூலையில் அந்த இரு தேவபாலர்களின் முகங்களை, எங்கிருந்தோ வந்து என் இதயத்தைத் தொட்ட அவர்களது முகங்களை, காஷ்மீரின் பிரதிபலிப்பான அ◌ர்களது முகங்களை, காஷ்மீர் மக்களின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் அவர்களது முகங்களை, எதிரிகளால் சின்னபின்னப்படுத்தப்பட்டு இன்று தைரியத்துடனும் விவேகத்துடனும் தங்கள் பூமியைப் புனரமைக்கும் காஷ்மீர் மக்களின் பிரதிபலிப்பான அந்தச்சிறுவர்களின் முகங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆதங்கம் மேலிட்டுக் கொண்டிருந்தது...இப்பொழுது நான் காஷ்மீரைப் பற்றி நினைக்கும் போது அந்த எழில்மிகு பூமியில் நான் பார்த்த இந்திய ராணுவத்தின் மகத்தான சாதனைகள், தலைவர்கள் பேசிய பெரும் பெரும் கூட்டங்கள் என் நினைவுக்கு வரவில்லை. என் கண்களுக்கு முன்னால் சபாநு சகோதரர்கள் முட்டை விற்பதும், கணவனிழந்த தாய்க்கு அவர்கள் உதவி செய்வதும் தான் தெரிகின்றன. முசாபரி பங்களாவுக்கு முன்னால் பூட்ஸ்களைப் பாலிஷ் செய்து கொண்டே அவ்விருவரும் பேசிக் கொண்டிருப்பதுதான் எனக்குத் தெரிகிறது. ''சார்! மீண்டும் பாராமுல்லாவுக்கு வாருங்கள்'' என அவர்கள் அழைப்பதைக் கேட்கிறேன். அவ்விரு சிறுவர்களும் என் கண்களுக்குத் தோன்றும்போது எனக்குள் நான் சொல்லிக் கொள்கிறேன். ''புதிய காஷ்மீர் உதயமாகி விட்டது. உலகத்தில் இனி எந்தச் சக்தியும் காஷ்மீரைக் கொள்ளையிட முடியாது. காஷ்மீரின் சுதந்திரத்தைப் பறிக்க முடியாது. காஷ்மீரின் புகழை அழிக்க முடியாது...''

காவேரி

ஆறு குடகில் உதயமாகி தமிழ் நாட்டில் பாய்ந்து வளம் கொழிக்கச் செய்கிறது......

காவேரி

பத்திரிகை தமிழ் நாட்டில் தோன்றி நாடெங்கும் ஊடுருவிப் பாய்ந்து இன்ப வெள்ளம் பெருகச் செய்கிறது. வடநாடு, தென்னாடு எல்லை அதற்குக் கிடையாது

காவேரி

வெறும் பொழுது போக்குக்கான பத்திரிகை மட்டுமல்ல. சிந்தனையைக் கிளறி, மனதில் தைத்து நிற்கும் எண்ணக் குவியல்கள் கொண்ட கதைகள், வாழ்க்கையை ஒட்டி ஓடும் விஞ்ஞான ஆராய்ச்சிகள், புதிய சிறு தொழில்கள் ஆரம்பிக்க உதவும் கட்டுரைகள், பெண்களுக்கு அத்தியாவசியமான குறிப்புகள் சிறுவர்களின் புத்தியை வளர்க்கும் புதிர்கள், கணக்குகள், தற்கால அரசியல் ஓட்டத்தைப் பொதுஜனங்கள் கோணத்திலிருந்து விளக்கும் டெல்லித் தபால் இன்னும் அநேக ரசமான அம்சங்கள் நிரம்பிய மாதப் பத்திரிகை

தமிழ் மணம் கமழும் எல்லா ஊர்களிலும் சிலோன் மலேயா உள்பட ஹிக்கின்பாதம்ஸ் சுதேசமித்திரன், வீலர்ஸ் மற்றும் எல்லா ரெயில்வே ஸ்டால்களிலும் காவேரி கிடைக்கும்

ஒவ்வொரு வீட்டிலும் பெரியோர் முதல் சிறியோர் வரை
படித்து இன்புற வேண்டிய சிறந்த பத்திரிகை

தனிப் பிரதி 50 காசு . . . வருடச் சந்தா ரூ. 7-50

விவரங்களுக்கு : **காவேரி காரியாலயம், கும்பகோணம்**

"மூலம் தீராத வினையன்று"

பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்-புதிய நிவாரணி அரிப்பு, எரிச்சல் மற்றும் வலியிலிருந்து குணமளிப்பதுடன் மூலத்தையும் சுருக்குகிறது.



உலகப் பிரசித்தமான ஆராய்ச்சிக் கூடமொன்று மூலத்தைச் சுருக்குவதுடன், வலியற்றமுறையில் குணப்படுத்தக்கூடிய புதிய பொருள் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறது. அப்பொருள் சில நிமிடங்களிலேயே அரிப்பையும் வலியையும் போக்குவதுடன் பாதிக்கப்பட்ட தசைநார்களையும் குணப்படுத்துகிறது. உண்மையாகவே, சுருக்கமும் ஏற்படுகிறது. டாக்டர்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளும்-10,-30 வருஷங்களான கேஸ்களில்கூட-இதை நிரூபித்தன. மேலும் வியக்கத்தக்கதென்னவென்றால், இந்த நல்ல முன்னேற்றம் பல மாதங்களுக்கு நீடித்திருந்தது. உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்கள், இதனால் அடைந்த பூரணக் குணத்தைக் கண்டு வியந்து "மூலம் தீராத வினையன்று" எனக்கூறினார்கள். இவ்வளவு பலன்களும், எந்த விதமான போதை தரும் மருந்துகளோ, அல்லது துவர்ப்பு பொருள்களோ, மயக்க மருந்துகளோ, உபயோகிக்காமல் அடையப் பெற்றவை. இரகசியம் என்னவென்றால், இந்த விசேஷமான புதிய நிவாரணி (பயோ-டைன் *) புண்ணான இடத்தைச் சீக்கிரத்திலேயே குணப்படுத்தி, மறுபடியும் ஆரோக்கியமான தசை துரிதமாக வளர உதவுகிறது. இப்பொருள் களிம்பு வடிவத்தில் ப்ரிப்பரேஷன் H * என்ற பெயரில் கிடைக்கிறது. உண்மையாகவே மூலத்தைச் சுருக்குவதுடன்-ப்ரிப்பரேஷன் H*, வழவழப்பாக்குவதன் மூலம் கழிவுப் பொருள் வெளியேறும் போதுள்ள வலியைக் குறைக்கிறது. அது மூலத்தின் முக்கிய காரணமான இரணம் பரவுவதையும் தடுக்கிறது.

இப்பொழுது இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:

ஜாப்ரே மானேர்ஸ் & கோ (பி) லிட்.

டிரேட்மார்க் உரிமையாளர்கள்:

ஒயிட்ஹால் லாபரட்டரீஸ், U.S.A.

ப்ரிப்பரேஷன் H *

களிம்பு * டிரேட் மார்க்,

சதுரங்கம்

படியேறித் தன் வீட்டுக்குள் வந்துகொண்டிருந்த மங்கையைப் பார்த்தாள் ருக்மிணி.

கலோசனாவா!—அவநம்பிக்கையுடன் மீண்டுமொருதடவை உற்று நோக்கினாள்.

கலோசனாவேதான் ! சிறிதும் சந்தேகம் தேவையில்லை !

ருக்மிணி வியந்து திகைத்தாள். அவள் எப்படி இந்த ஊருக்கு வந்தாள் ? எதற்காகத் தன் வீட்டுக்கு வருகிறாள் ? அவள் மனம் எப்படி இடம் கொடுத்தது ?

கலோசனாவின் குரல் ஒலித்தது : "என்ன அப்படிப் பார்க்கிறீர்கள் ? என்னை அடையாளம் தெரியவில்லையா, என்ன ?"

ருக்மிணி விரைவாகத் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "வா, கலோசனா ! அடையாளம் தெரியாமல் கூடப் போய்விடுமா? திடீரென்று எதிர்பாராமல் உன்னை இங்கே பார்த்தது திகைப்பாயிருந்தது. வேறொன்றுமில்லை. உட்கார் !" என்று பாயை எடுத்து விரித்து அவளை அமரச் செய்தாள். அவள் குடும்பத்துக்கும் தன் பிறந்த வீட்டுக்கும் என்னதான் உறவு சரியான நிலைமையில் இல்லை என்றாலும், வீடு தேடி வந்திருப்பவளை உபசரிக்காமல் இருப்பது பண்புக் குறைவுதானல்லவா ?

சம்பிரதாயமாகக் குசலம் விசாரித்தாள் ருக்மிணி. "ஊரில் எல்லாரும் சௌக்கியந்தானே, கலோசனா ?"

"சௌக்கியந்தான் !"

"நீ எப்போது பட்டணம் வந்தாய் ?"

"நான் ஆறு மாதங்களாக இங்கேதான் இருக்கிறேன் !"

"அப்படியா ? இங்கே எங்கே இருக்கிறாய் ? ஒருவேளை..." என்று தான் கூற வந்ததை முடிக்காமல் மென்று விழுங்கியவாறு அவள் கழுத்தை உற்று நோக்கினாள் ருக்மிணி.

கலோசனா புன்னகை செய்ய முயன்றவாறு, "கல்யாணமாகிக் குடித்தனம் பண்ண வந்திருக்கிறேனா என்றுதானே கேட்கிறீர்கள்? இல்லை. கல்யாணமானால் உங்களுக்கு அழைப்பு அனுப்பாமல் இருப்பேனா? இங்கு ஒரு கம்பெனியில் வேலையாயிருக்கிறேன். வீட்டில் வெட்டிப்பொழுது கழிக்காமலும் இருக்கலாம், சம்சாரியான ஏழைப் பெற்றோர்களுக்குக் கொஞ்சம் பாரமும் குறையுமல்லவா ? நான் இருப்பது உங்கள் கணவர் உதவி மானேஜரா யிருக்கும் 'சூர்யா கம்பெனி'யில்தான் !" என்று கூறினாள்.

"அப்படியா ! அவர் கம்பெனியில் நீ உத்தியோகமா யிருக்கிறாயா ? எனக்கு இவ்வளவு நாட்களாகத் தெரியாதே !"

"எனக்கும் ராமகிருஷ்ணன் உங்கள் கணவர் என்பது சமீபத்தில்தான் தெரியவந்தது. உங்கள் கல்யாணத்தின் போது எனக்கு ஜுரமா யிருந்ததால் உங்கள் கல்யாணத்துக்குக் கூட நான் வரவில்லையல்லவா ? அவர் உங்கள் கணவர் என்பது தெரியவந்ததும் எனக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டது."

"ஆறுதலா ?" வியப்புடன் கேட்டாள் ருக்மிணி.



"ஆமாம். அவர் கொடுக்கும் தொல்லையிலிருந்து எப்படி விடுபடலாம் என்று தத்தளித்துக் கவலைக் காரிருளில் மூழ்கியிருந்த எனக்கு அந்தச் செய்தி ஓர் ஒளி விளக்காகத் தோற்றமளித்துத் தெம்பும், ஆறுதலும் அளித்தது. சமயம் பார்த்துக் கொண்டே யிருந்தேன். இன்று அவர் ஆபீஸ் காரியமாகச் செங்கல்பட்டுக்குப் போயிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். உங்களைத் தனியாகச் சந்திக்கலாம் என்று கருதி ஓடி வந்தேன்."

"என் கணவர் உனக்குத் தொல்லை கொடுக்கிறாரா ? ஏன், அற்ப விஷயங்களை யெல்லாம்

எஸ். வைத்தியநாதன்

டெ'ந்து படுத்தி எரிந்து விழுகிறாரா? உன்னிடம் கடுமையாக நடந்து கொள்கிறாரா?''

'' கடுமையாக நடந்து கொண்டால் கூட நான் பாராட்ட மாட்டேனே! அவர் அன்பு காட்டுவதைத்தான் என்னால் தாங்க முடிய வில்லை! அளவுக்கு மீறிய - நியாயமற்ற அன்பு அல்லவா காட்டுகிறார்? அவர் பார்வையும் பேச்சும், நடவடிக்கைகளும் — ஒன்றும் சரியா யில்லை என் சம்பந்தப்பட்ட வரையில்!...''

அதிர்ச்சிக்குள்ளான ருக்மிணி, ''என்ன!... நீ என்ன சொல் கிறாய்?'' என்று கேட்டாள்.

'' என்னத்தைச் சொல்வது! எனக்கு வேலை கற்றுக் கொடுப்பதும் என் வேலையை மேற்பார்வையிடுவதும் அவர் பொறுப்பில் விடப் பட்டிருக்கின்றன. அந்த வாய்ப்பை உபயோகித்து, என்னிடம் பல்லை இளித்து ஒரு மாதிரியாக நடந்து கொள்ள முயல்கிறார் அவர். அதுவும் மணமானவர், ரதி மாதிரி மனைவியை அடைந்திருப்பவர், இப்படியெல்லாம் நடந்து கொள்வது எவ்வளவு கேவலம்!''



ருக்மிணி ஈனஸ்வரத்தில், ''இதெல்லாம் வாஸ்தவந்தானா? என் கணவரா இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்?'' என்றாள்.

''பொய் சொல்வதற்காகவா வேலை மெனக்கெட்டு இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்!...... இதோ பாருங்கள் சாட்சியம்!'' என்று தன் முடிப்பிலிருந்து ஒரு மோதிரத்தை எடுத்து அவளிடம் அளித்தாள் சுலோசனா.

நீலக் கல் பதித்த கவர்ச்சிகரமான அச்சிறு மோதிரத்தைப் பார்த்தவாறு, ''இந்த மோதிரம் எதற்குச் சாட்சியம்?'' என்று கேட்டாள் ருக்மிணி திகிலுடன்.

'' சொல்லுகிறேன்...... பழைய மாம்பலத்தில் ஒரு வீட்டின் மாடியில் அறை எடுத்துக்கொண்டிருக்கிறேன் நான். ஒருநாள் சாயங்காலம் உங்கள் கணவர் திடீரென்று என் அறையைத் தேடிக் கொண்டு வந்தார். 'இன்று உனக்குப் பிறந்த நாள் அல்லவா?' என்றார். அன்று என் பிறந்தநாள் என்பது எனக்கே

ஞாபகமில்லை. அவருக்கு எப்படித் தெரிந்தது என்று ஆச்சரியம் தெரிவித்தேன். வேலையில் சேரும்போது நான் கம்பெனியில் கொடுத்த எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட் புஸ்தகத்திலிருந்து என் பிறந்த தேதியை அவர் தெரிந்து கொண்டிருந்தாராம். என் பிறந்த நாள் பரிசாக இந்த மோதிரத்தை வாங்கிக் கொண்டு வந்தாராம். அதை வாங்கிக் கொள்ள மறுத்தேன். அவர் விடவில்லை; 'உனக்குப் பரிசளிக்க எனக்கு உரிமை உண்டு!' என்று என்னவெல்லாமோ பேச ஆரம்பித்து விட்டார்! நான் அதற்கு மேலும் மறுத்தால் என் விரலைப் பிடித்திழுத்து அவரே மோதிரத்தை மாட்டி விடுவார் போலிருந்தது! என்ன செய்வது! தலைவிதியே என்று வாங்கிப் போட்டுக் கொண்டேன்.....''

துக்கம் நெஞ்சைப் பிளக்க, ''உம்.... அப்புறம்?'' என்றாள் ருக்மிணி.

''மூந்தா நாள் ஓர் உயர்தர கிரேப் ஸில்க் புடவையுடன் வந்தார். கடையொன்றில் தொங்கிக் கொண்டிருந்த அந்தப் புடவையைத் தற்செயலாகப் பார்த்தாராம். என் பொன்னுடலுக்கென்றே தயாரிக்கப்பட்டது போலிருந்ததாம் அது! அந்தக்கணமே அந்த மோஸ்தரில் ஒரு புடவை வாங்கிக் கொண்டு வந்து விட்டாராம்! அதைத் தொடவே எனக்குக் கை கூசியது. இந்த அழகில் நேற்று ஆபீஸில் வேறு 'அந்தப் புடவையைக் கட்டிக் கொண்டு வரவில்லையே, ஏன்?' என்றார் அவர். 'இன்று மரண யோகம்' என்று கூறி மழுப்பி விட்டேன். அந்தப் புடவையையும் இதோ கொணர்ந்திருக்கிறேன்'' என்று கைப்பையிலிருந்த புடவைப் பொட்டலத்தை எடுத்து ருக்மிணியின் எதிரில் வைத்தாள்.

பிரமை பிடித்தவளைப் போல் அமர்ந்திருந்த ருக்மிணி அதைப் பிரித்துக் கூடப் பார்க்கவில்லை.

சுலோசனா தொடர்ந்தாள்: ''நீங்கள் தான் அவர் என்னிடம் தவறான முறையில் நடந்து கொள்ளாமலிருக்கும்படி செய்ய வேணும். எப்படி, என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால் என் வேலைக்கு ஆபத்து ஏற்படாமலிருக்கும் முறையில் அதைச் செய்ய வேணும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். உங்களுக்கு இந்த விஷயம் என்னால் தெரிந்தது என்பதும் அவருக்குத் தெரிய வேண்டாம். கவனிக்கிறீர்களா! நான் வரட்டுமா?'' என்று எழுந்தாள் சுலோசனா.

ருக்மிணி பீறிக்கொண்டு வந்த அழுகையைச் சமாளிக்க முயன்றவாறு, ''கவனிக்கிறேன்! இந்த மோதிரத்தையும் புடவையையும்...'' என்பதற்குள் இடைமறித்த சுலோசனா, ''என்னையே வைத்துக்கொள்ளச் சொல்கிறீர்களா? நன்றாயிருக்கிறதே நீங்கள் சொல்வது! அவை உங்களுக்குரியவை. அவைகளைத் தொடவே எனக்கு அருவருப்பாயிருக்கிறது. அவைகளை என்ன செய்வீர்களோ, அது உங்கள் பொறுப்பு! நான் போய் வருகிறேன். என்னைக் காப்பாற்றுவது உங்கள் கையில்தான் இருக்கிறது. ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று கூறி விட்டுக் கிளம்பிப் போய்விட்டாள்.

மிகுந்த பிரயாசையுடன் கட்டுப்படுத்தி வைத்திருந்த ருக்மிணியின் துக்கம் விம்மலாக வெடித்தது!

* * *

ருக்மிணியும் சுலோசனாவும் கடலூரைச் சேர்ந்தவர்கள். ருக்மிணியின் அப்பா பட்டு சாமி அவ்வூரில் பிரபல வக்கீல். சுலோசனாவின் தந்தை ராஜாராமன் நகரசபையில் பில் கலெக்டர். இரு குடும்பங்களுக்கும் பழக்கம் உண்டு. ஓரளவு நட்புக்கூட இருந்தது என்று சொல்லலாம். ஆனால் அந்த நட்பு திடீரென்று முறிந்துவிட்டது. காரணம் ருக்மிணியின் அண்ணா ராகவனும் சுலோசனாவும் பரஸ்பரம் மையல் கொண்டதுதான். பிரமிக்கத்தக்க அழகியான சுலோசனாவை மருமகளாக ஏற்றுக் கொள்வதில் பட்டுசாமிக்கோ, அவர் மனைவிக்கோ அவ்வளவாக ஆட்சேபனை இல்லை என்றே சொல்லலாம். ஆனால் அவர்கள் கேட்ட வரதட்சிணை ராஜாராமனின் சக்திக்கு வெகு தூரம் அப்பாற்பட்டதாயிருந்தது. எனவே அவர், ''குடிசை ராஜ முழி முழிக்கச் சொல்கிறீர்களே! ஏதோ பொன் வைக்கிற இடத்தில் பூ வைத்துக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறேன். அவ்வளவே என்னால் முடியும்'' என்று கூறிவிட்டார். வக்கீல் தம்பதி அதற்குச் சம்மதிக்கவில்லை. பேச்சு வார்த்தை முறிந்துவிட்டது.

வேறு இடங்களில் ராகவனுக்குப் பெண் பார்க்க முயன்றார்கள் பெற்றோர். அவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. ''எனக்கு இப்போது கல்யாணம் தேவையில்லை. கல்யாணத்தில் நாட்டம் ஏற்படும்போது உங்களுக்குத் தெரிவிக்கிறேன்!'' என்று உறுதியாகக் கூறிவிட்டு, பெங்களூர் விமானத் தொழிற்சாலையில் ஓர் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டு அங்கு போய்விட்டான். வக்கீலுக்கும் ஸ்ரீமதி வக்கீலுக்கும் தாங்க முடியாத ஆத்திரம். சுலோசனா அவனை 'மயக்கி' அவன் மனசைக் கெடுத்து விட்டாள் என்று கண்டபடி அவளைத் தூற்ற ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு இரு குடும்பத்துக்கிடையேயும் போக்குவரத்தும் பேச்சு வார்த்தையும் நின்று போய்விட்டன!

ராஜாராமன் சுலோசனாவுக்கு வேறு வரன் பார்க்கலானார். அவள் அதை எதிர்த்தாள். ''எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி அப்பா? கூடை செங்கல்லும் பிடாரிகள்! சும்மா எவனும் என்னைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டான். அவர்கள் பணப் பசிக்குத் தீனி போடவோ நம்மிடம் சொத்து இல்லை. வீணாக அலைந்து திரிந்து தோல்வி யடைந்து உடலையும் உள்ளத்தையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள். நான்தான் ஸ்கூல்-பைனல் தேறியிருக்கிறேன். எனக்கு ஏதாவது உத்தியோகம் பாருங்கள். பணம் கோராமல் என்னை ஏற்றுக்கொள்ள எவனாவது வலுவில் முன்வந்தால், கல்யாணத்தைப் பற்றி அப்போது யோசனை பண்ணிக் கொள்ளலாம்!'' என்று கூறினாள்.

அது நியாயமாகப் படவே ராஜாராமன் அந்த யோசனையை ஏற்றார். உள்ளூரிலேயே அவளுக்கு உத்தியோகம் தேடித் தர முயன்



ESTD: 21-3-52. **தபால் மூலம்** GOVT REGD: 3072.

இலவசக் கல்வி போதனை

வகுப்புகள் ஆரம்ப தேதி 24 – 2 – 61

ஆண்-பெண் இருபாலரும் தங்கள் படிப்பை இடையே நிறுத்தியவர்களும், 61-62ம் வருடத்திற்கண்ட சர்க்கார் தேர்வுகளுக்கான வகுப்புகளில் சேர்ந்து உத்தரவாதத்துடன் மாதம் மும்முறை பாடங்கள் பெற்று பயனடைய உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

1. குவாலியர் : I. A. *2.* I. Com. *3.* மெட்ராஸ்-மெட்ரிகுலேஷன். *4.* பிரீ-யுனிவர்சிடி. *5.* தமிழ் வித்வான் வகுப்புகள். *6.* சர்வீஸ் கமிஷன். (Oct. 61) *7.* S.S.L.C. (Oct.61 & March 62) *8.* E. S. L. C. *9.* கைத்தறி நெசவு. *10.* விவசாயம். *11.* அக்கௌண்டன்ஸி. *12.* ஓவர்சியர். *13.* Postal Clerk. *14.* Post-Man. *15.* கிராம-மணியம் & கர்ணம். *16.* ஹிந்தி வகுப்புகள் (61 ஆகஸ்ட்). *17.* ஹோமியோபதி (தமிழ் & ஆங்கிலம்) *18.* கிராம வைத்தியம். *19.* பேசிக் - ஆங்கிலம் முதலிய வகுப்புகளுக்கு.

ஆண்டுதோறும் 7600க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளித்து வருகிறது நமது கல்வி ஸ்தாபனம். ஆகவே 24-2-61 முதல் ஆரம்பமாக விருக்கும் நமது வகுப்புகளின் முழு விவரங்களுக்கு 15 ந.பை. ஸ்டாம்புடன் விண்ணப்பித்து விரும்பும் வகுப்பில் உடன் சேர்ந்துகொள்ளவும்.

தமிழ் நாட்டின் தனிப்பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்!

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

சென்னைக் கிளை : தபால் பெட்டி எண் 392, சென்னை - 2

H.O. ரிஷிவந்தியம் கிளைகள் : சென்னை, மலேயா, சிலோன், தெ.ஆப்பிரிக்கா

ரூர். கிடைக்கவில்லை. கடைசியில் சென்னை நண்பர் ஒருவர் உதவியால் அந்த மாநகரில் 'சூர்யா கம்பெனி' என்ற வர்த்தக ஸ்தாபனத்தில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. அந்த வேலையை ஏற்று, அப்பாவின் அந்த நண்பர் வீட்டிலேயே ஓர் அறையில் ஜாகை வைத்துக் கொண்டிருந்தாள் சுலோசனா. அதே கம்பெனியில்தான் ருக்மிணியின் கணவன் ராமகிருஷ்ணன் உதவி மானேஜரா யிருந்தான்.

* * *

பரம யோக்கியன் என்று எண்ணித் தான் இறுமாந்திருந்த தன் கணவன் இப்படிப்பட்டவன் என்று தெரியவந்ததும் ருக்மிணிக்கு ஏற்பட்ட வேதனையும் துக்கமும் சொல்லத்தரமன்று. அதே சமயத்தில் சுலோசனாவின் மீது அவளுக்கு எல்லையற்ற மதிப்பும் ஏற்பட்டது. எவ்வளவு தங்கமான பெண் அவள்! ராமகிருஷ்ணன் அளித்த பரிசுகளைக் கூடத் தன்னைத் தேடி வந்து ஒப்படைத்து விட்டுப் போனவள் எவ்வளவு பரிசுத்தமானவளா யிருக்கவேண்டும்! — ராகவன் காதல் காரணமாக அவளிடம் ஏற்பட்டிருந்த பழைய மனக் கசப்பு கூட ருக்மிணிக்குப் பெரும் பாலும் மறைந்து விட்டது.

தன் கணவனை வழிக்குக் கொணர்வது எப்படி என்பதைப் பற்றி ருக்மிணி சிந்திக்கலானாள். சுலோசனாவை அவனிடமிருந்து தப்புவிப்பதற்காக மட்டுமின்றித் தன் சுயநலத்தை உத்தேசித்தும் அவனை அந்தத் தகாத காரியத்திலிருந்து விடுவிக்க வேண்டியது அவசியம் என்பதை அவள் உணர்ந்தாள்.

ராமகிருஷ்ணன் செங்கல்பட்டிலிருந்து திரும்பிவந்தபோது இரவு ஒன்பது மணியிருக்கும். ருக்மிணி அவனோடு முகம் கொடுத்துப் பேசக்கூட இல்லை.

சாப்பிட்டுக் கைகழுவிக் கொண்டு மீண்டும் உள்ளே வந்த அவன், "உடம்பு கிடம்பு சரியில்லையா ருக்மிணி!" என்றான் மறுபடியும்.

"ஐயோடி! என்ன கரிசனம்!...எனக்கு ஒரு கேடுமில்லை!" என்று எரிந்து விழுந்தாள்.

"நான் நம்பமுடியாது! எதையோ என்னிடமிருந்து மறைக்க முயலுகிறாய்!"

"நானா? நீங்களா? என்ன வேஷம், என்ன வேஷம், என்ன நடிப்பு!...இனியுமா என் கண்ணில் மண்ணைத் தூவ முடியும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்!"

"விஷயத்தைச் சொல்லிவிட்டு அப்புறம் உன் வியாக்கியானங்களையும் விமர்சனங்களையும் வைத்துக் கொள்ளலாமே!"

"உங்கள் ஆபீஸில் சுலோசனா என்ற பெண் வேலையாக இருக்கிறாள் அல்லவா!"

"ஆமாம்!......ரொம்ப நல்ல பெண்! அவளுக்கென்ன?"

"நல்ல பெண் மாத்திரந்தானா! ஊர்வசி மாதிரி அழகான பெண்கூட! அதனால்தான் அவளிடம் சதா பல்லை இளித்துக் கொண்டிருக்கிறீர்கள்!"

"பெண்பாலரோடு பழகும்போது சுமுகமாக—புன்சிரிப்புடன்—பழகவேணு மல்லவா? அது ஒரு குற்றமா? அழுகிறாற்போல் முகத்தை வைத்துக் கொள்ளணும் என்கிறாயா?......"

"சமத்காரப் பேச்சு என்னை ஏமாற்றப் பிரயோசனப் படாது. ...நீங்கள் அவளைச் சுற்றி வருவதும், பல்லிளிப்பதும், பரிசளிப்பதும் விகல்பமான எண்ணத்துடன்தான் என்பது எனக்குத் தெரியும்!"

"பரிசா!...சுத்தப் புளுகு!..."

"புளுகா? இதோ வந்து விட்டேன்" என்று விரைந்து சென்று கூடத்து அலமாரியில் வைத்திருந்த மோதிரத்தையும், புடவையையும் கொணர்ந்த ருக்மிணி, "எங்கே, சத்தியமாய்ச் சொல்லுங்கள்! நீங்கள் இவைகளை அவளுக்குப் பரிசளிக்கவில்லை?" என்று கேட்டாள் ஆத்திரத்துடன்.

ராமகிருஷ்ணன் திகைத்துப் போய் மௌனமாக நின்றான்.

"நான் பரிசளித்தது வாஸ்தவம்தான். ஆனால் தப்பான நோக்கத்துடன் அல்ல; அவள் ஏழைப் பெண், நல்ல சுபாவமுள்ளவள்; அதனால் ஏற்பட்ட அநுதாபத்தினால்தான் வாங்கிக் கொடுத்தேன்."

"அவளுடைய நல்ல சுபாவத்தையும், ஏழைமையையும் கண்டு அப்படியே உருகிப் போய் விட்டீர்களாக்கும்! சீச்சீ, என்ன வெட்கக்கேடு!...வேணும் என்றால் அவளைக் கல்யாணமே பண்ணிக் கொண்டு விடுங்கள். இதைவிட அது கௌரவமாயிருக்கும்...நான் குறுக்கே நிற்கவில்லை!"—பீறிக் கொண்டு வந்த துயரத்தை அடக்க மாட்டாமல் விக்கி விக்கி அழுதாள் ருக்மிணி.

அவன், "அழு அழு; நெடுங் குரலெடுத்துப் பிலாக்கணம் வேணுமானாலும் பாடு! இதற்கெல்லாம் நான் மிரண்டுவிட மாட்டேன்!" என்று கூறிச் சரேலென்று மாடிக்குப் போய் விட்டான்!

மறுநாளும் அடுத்த நாளும் தம்பதிக்குள் பேச்சுவார்த்தையே இன்றிக் கழிந்தன. ஆனால் அவனோ எதையும் லட்சியம் செய்யவில்லை. அவளுக்குமேல் அவன் விறைப்பாயிருந்தான்!

ருக்மிணிக்கு ஆத்திரம் இன்னும் கொழுந்து விட்டு எரிந்தது. வேறு என்ன செய்து அவனைத் திருத்தி வழிக்குக் கொணரலாம் என்பது புரியாமல் திணறினாள்.

மூன்றாம் நாள் மாலை சுலோசனா மீண்டும் அவள் வீட்டுக்கு வந்தாள். இன்னும் என்ன பயங்கரச் செய்தியைக் கொண்டு வருகிறாளோ அவள் என்று கதிகலங்கிய ருக்மிணி, அவளை வரவேற்கக்கூடத் தோன்றாமல் பரிதாபமாகப் பார்த்தாள்.

"நேற்று ஆபீஸில் அவர் 'அந்த மோதிரமும் புடவையும் எப்படி என் மனைவியிடம் வந்தன. அவளிடம் ஏன் கொடுத்தாய்?' என்று கேட்டார். 'நானாகக் கொடுக்கவில்லை. அவள் நேற்று மாலை என் இருப்பிடத்தை எப்படியோ தெரிந்து கொண்டு வந்து விட்டாள். அவள் எங்கள் ஊரைச் சேர்ந்தவளாகையால் எனக்கு முன்னமேயே தெரியும். எனவே மகிழ்ச்சியுடன் 'வாருங்கள்' என்று வரவேற்றேன். அவளோ கோபத்துடன் 'உன் உபசாரமெல்லாம் அப்புறம் இருக்கட்டும். ரொம்ப நல்லவள் மாதிரி வேஷம் போடுகிறாயோ? அவர் வாங்கிக் கொடுத்தவைகளெல்லாம் எங்கே? மரியாதையாய் எடு. உனக்கு என்னடி அவர் கொடுப்பது!' என்றாள். நான் திகிலடைந்து மோதிரத்தையும் புடவையையும் எடுத்துக் கொடுத்துவிட்டேன். எனக்கு ரொம்பவும்

பயமாயிருக்கிறது. நீங்கள் தயவுசெய்து அளவுக்கு மீறி என்னிடம் பழகுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்!' என்று பெரும் பொய் ஒன்றைச் சொல்லி வேண்டிக்கொண்டேன். 'அவள் இடக்கிறாள். அவளால் என்ன செய்துவிட முடியும்? வாயால் வேணுமானால் குரைப்பாள். ஓர் அளவுக்கு மேல் போனால் அதையும் அடக்க எனக்குத் தெரியும்....அவள் எப்படியோ இந்த விஷயங்களைத் தெரிந்து கொண்டு வந்து உன்னிடம் கேட்டாலும் நீ அவளுக்கு இடம் கொடுத்திருக்கக் கூடாது! அவளுக்காக நம் சிநேகிதத்தை விட்டு விட முடியுமா?' என்றெல்லாம் கூறினார் அவர். நீங்கள் அவருக்குப் புத்திமதி சொல்லவில்லையா ஒன்றும்?''

அழுகையும் ஆத்திரமும் பொங்க ருக்மிணி, ''சிநேகத்தை விடமாட்டாராமா?'' என்றாள்.

''அப்படித்தான் சொல்கிறார். அவர் நடவடிக்கையும் அதற்கேற்றாற் போல்தானிருக்கிறது! இன்று கடற்கரைக்குக் கூப்பிடுகிறார். பாருங்களேன்!...அவர் என்னைச் சுற்றி வீசும் வலை நாளுக்கு நாள் இறுகிக் கொண்டிருக்கிறது. எப்படித் தப்பப் போகிறேனோ, தெரியவில்லை. நீங்கள் தான் என்னை விடுவிக்க வேணும். அசந்து மறந்துகூட நான் இங்கே வந்துவிட்டுப் போனதை அவரிடம் வெளியிட்டு விடாதீர்கள்!...அவர் வந்துவிடப் போகிறார். நான் போய் வருகிறேன்!'' என்று சுலோசனா விடைபெற்றாள்.

உட்கார்ந்த இடத்திலேயே வெகுநேரம் துயரத்துடன் சிந்தித்துக் கொண்டிருந்த ருக்மிணிக்குத் திடீரென்று அற்புதமான யோசனை ஒன்று பளிரென்று உதயமாயிற்று. அந்த யோசனைக்கு மூலம், அன்று சுலோசனா 'வேலையை விட்டுவிட்டு என்ன செய்ய? எவனாவது பணமின்றி என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வானா?' என்று கூறிய வார்த்தைகள்தான்! கணவன் வந்ததும் ருக்மிணி தன் பேசாவிரதத்தைக் கைவிட்டு, ''அந்தச் சுலோசனாவை நீங்கள் இன்னும் மறக்கவில்லையா? அவளைச் சுற்றி வலை வீசுவதை விடவில்லையா?'' என்றாள் கம்பீரமாக.

''உன் பிதற்றலை இன்னும் விடவில்லையா நீ!'' என்றான் அவன் உஷ்ணமாக.

''அவளை உங்கள் ஆபீஸிலிருந்து வெளியேறும்படி செய்து விட்டால் தன்னால் நீங்கள் ஒழுங்காகி விடுவீர்கள்.''

''அவளை டிஸ்மிஸ் பண்ணப் போகிறாயா! எப்போது எங்கள் கம்பெனியின் அதிகாரி ஆனாய் நீ!''

''ஏனம் பண்ண வேண்டாம். சில தினங்களுக்குள்ளேயே என் சக்தி தெரியும்!''

மறுநாள் அதிகாலை ராமகிருஷ்ணன் தூங்கி எழுந்து வந்தபோது, ருக்மிணி கடலூருக்குப் பயணம் கிளம்பச் சித்தமாயிருந்தாள். அதைக் கண்டும் காணாதவன் போல் அசட்டையுடன் ராமகிருஷ்ணன் இருந்தான்.

வந்ததும் வராததுமாக 'ஹோ' வென்று கண்ணீர் விட்டுக் கதறிய பெண்ணைக் கண்டு பட்டுசாமியும் அவர் மனைவியும் பதறிப்போய், ''ஏண்டி குழந்தை! என்ன நேர்ந்துவிட்டது உனக்கு!'' என்றார்கள்.

விம்மலினூடே தன் கணவனின் விரும்பத்தகாத போக்கை விவரித்தாள் ருக்மிணி.

''கட்டையிலே போகிறவள் என் பிள்ளையைத்தான் மயக்கிக் கெடுத்தாள் என்றால் மாப்பிள்ளைக்கும் வலை வீசிவிட்டாளா? நன்றாயிருப்பாளா அவள்?'' என்று கத்தினாள் ருக்மிணியின் தாயார்.

''அவளை ஏன் சும்மாவிட்டாய்? கன்னத்தில் நாலு அறை கொடுத்து 'இனி என் புருஷன் வழிக்கு வராதே!' என்று எச்சரிப்பதற்கென்ன?'' என்றார் பட்டுசாமி.

''அவள்மேல் ஒரு தப்புமில்லை, அப்பா! மிகவும் ஒழுங்கான பெண் அவள். அவள் தான் அவர் போக்கைப் பற்றி என்னிடம் புகார் செய்தவள். அவர் தீய நோக்கத்துக்கு உட்பட அவளுக்குத் துளியும் சம்மதமில்லை. ஆனால் வேலைக்கு ஆபத்து வந்துவிடுமே என்ற எண்ணத்தினால் அவரைக் கண்டிக்கப் பயப்படுகிறாள். அப்புறம் என் வாழ்க்கை என்ன ஆகும்? உங்கள் மாப்பிள்ளை என்னை வீட்டை விட்டே வெளியேற்றி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!'' என்று கூறிக் கண்ணீர் விட்டாள் ருக்மிணி.

அவளுடைய துயரத்தைக் கண்டு பெற்றோர் தாங்கவொண்ணா வேதனை யடைந்தார்கள்.

''அவளை அவர் கண் எதிரிலிருந்து அகற்றி விட்டால்—அதாவது அந்த வேலையை விடும்படி செய்தால்-பிரச்னை எளிதில் தீர்ந்துவிடும். யாராவது அவளைக் கல்யாணம் செய்து கொள்ள முன் வந்தால் அவள் வேலையை விட்டுவிடுவாள். என் வாழ்க்கையும் பாழாகாமல் இருக்கும்!...நீங்கள் மனசு வைத்தால் எனக்கு வாழ்வளிக்க முடியும்!'' என்று மேலும் கூறினாள் ருக்மிணி.

''என்ன செய்யணும் என்கிறாய்?'' என்று கேட்டனர் பெற்றோர் இருவரும்.

''நம் ராகவனுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் என்னை எதிர்நோக்கியிருக்கும் பேராபாயம் நீங்கிவிடும் தன்னால்!''

''யார் மாட்டேன் என்றார்கள்? முன்னமே தயாராகத்தானே இருந்தோம்? அவர்கள்

சங்கர ஞயசம்பு தாளிணை யென்றும் வாழி
சங்கர வாசான் செய்ய தாண்மலர் தாழும் வாழி
சங்கரன் சரித மெங்கும் தழைத்திடச் செய்வார் வாழி
சங்கரம் போற்று வார்கள் சாசுவதமாக வாழி.

தானே நாம் கேட்ட வரதட்சிணையைக் கொடுக்க மறுத்தார்கள்?''

''அவர்கள் பணத்துக்கு எங்கே போவார்கள் பாவம்! நமக்கு இருக்கும் பணம் போதாதா, அம்மா? அவர்கள் கொடுத்துத்தானா நமக்கு விடியப் போகிறது!''

''அதற்காக ஒன்றுமே இல்லாமல் பண்ணிக் கொள்வார்களா என்ன?''

''சரி அம்மா! நீங்கள் பண்ணிக்கொள்ள வேண்டாம்! என் வாழ்க்கை குட்டிச்சுவராகட்டும்! அதைப் பார்த்து நீங்கள் சந்தோஷப்படுங்கள். உங்கள் பிள்ளை ராகவனோ பணப்பேராசையின் காரணமாகக் கல்யாணமில்லாமலேயே நிற்கப் போகிறான். பெண்ணோ கல்யாணமாகியும் வாழாவெட்டியாகப் பிறந்தகத்திலேயே கழிக்கும்படி ஆகப் போகிறது! நீங்கள் இரட்டைச் 'சந்தோஷம்' அனுபவிக்கப் போகிறீர்கள்!'' என்று கூறிக் கதறி அழுதாள் ருக்மிணி.

'பட்' என்று முடிவுக்கு வந்தார் பட்டுசாமி.

''குழந்தே! அழுகையை நிறுத்தம்மா! அந்தச் சுலோசனாவே உன் மதனி ஆகப் போகிறாள். கல்யாணம்கூட நம் வீட்டிலேயே விமரிசையாக நடக்கப்போகிறது! நாம்தான் பெருந்தன்மையாக நடந்து கொண்டதாக இருக்கட்டுமே! உன் வாழ்க்கையே குலைந்து போய்விடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கும் நிலைமையிலும் பணம் ஒன்றே குறியாக இருப்போமா?'' என்று கேட்டவாறே மனைவியின் பக்கம் திரும்பினார்.

''ஜமாயுங்கள்! உங்கள் தீர்ப்புக்குமேல் அப்பீலேது?''என்றாள் ருக்மிணியின் தாயார்.

நேரே ராஜாராமன் வீட்டுக்குப் போனார் பட்டுசாமி. அவருடன் பேசினார். அதன் பயனாக 'சுலோசனாவுக்கும் உனக்கும் கல்யாணம்! உடனே புறப்பட்டுவா!' என்று ராகவனுக்குத் தந்தி போயிற்று. சுலோசனாவையும் வேலையை ராஜினாமா செய்யச் செய்து, கையோடு அழைத்து வருவதற்காக ராஜாராமன் பட்டணம் போனார். வெற்றிப் பெருமிதத்துடன் ருக்மிணியும் அன்றே பட்டணம் கிளம்பினாள்.

''வரமாட்டாய்; என்றல்லவா நினைத்தேன்!'' என்றான் ராமகிருஷ்ணன்.

''போன காரியம் முடிந்துவிட்டது! வந்துவிட்டேன்!'' என்றாள் ருக்மிணி.

''என்ன அப்படித் தலைபோகிற காரியம்?''

''என் சம்பந்தப்பட்டவரை தலைபோகிற காரியந்தான்! என் சபதப்படி சுலோசனாவை உங்கள் ஆபீசிலிருந்து அகற்றுவதற்காகத்தான் போனேன்; அதில் நான் வெற்றியும் பெற்றுவிட்டேன்!''

''என்ன!!''

''ஆமாம், அவள் இன்று ராஜினாமாக் கொடுத்துவிடுவாள். என் அண்ணாவுக்கும் அவளுக்கும் சீக்கிரத்தில் கல்யாணம் நடக்கப் போகிறது!''

பேரதிர்ச்சிக்கு உள்ளானவன் போல் மௌனமாக நின்றான் ராமகிருஷ்ணன்.

ருக்மிணி விஷமப்புன்னகையுடன், ''பாவம்! இனி வருத்தப்படுவதில் லாபமில்லை! நீங்கள் அவளுக்காக வாங்கிய புடவையையும் மோதிரத்தையும் அவள் கல்யாணத்தின் போது பரிசளித்து விடுவோம்! அந்த ஆறுதலுடன் இனியாவது நீங்கள் ஒழுங்காயிருங்கள்!'' என்றாள்.


வாய் திறவாமல், ஆனால் மனத்துக்குள் சிரித்தவாறு அவன் அகன்றான்.

அவன் எதிர்பார்த்ததுதானே இது? அதற்காகத்தானே அவன் அப்படி ஒரு நாடகம் நடத்தினான்!

சுலோசனாவுக்கும் அவள் விரும்பிய ராகவனுக்கும் கல்யாணம் நடக்கும்படி செய்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் ராமகிருஷ்ணன். ருக்மிணியின் பொறாமையைத் தூண்டிவிடுவதன் மூலம் அதை எளிதாகச் சாதித்துக்கொள்ளலாம் என்று கருதிச் சுலோசனாவையும் தயார் பண்ணினான். அவன் 'டைரக்ஷன்'படி சுலோசனாவும் திறமையாக நடித்தாள். அவர்கள் ஆடிய சூதாட்டம் வெற்றியைக் கொடுத்துவிட்டது.

அவர்கள் ஆடிய சதுரங்கத்தில் தன்னைக் காயாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது பேதை ருக்மிணிக்கு எப்படித் தெரியும் என்று எண்ணினார்கள் அப்பாவிகளான சுலோசனாவும் ராமகிருஷ்ணனும். ஆனால் அவர்கள் இருவரையும் பேதையாக்கி விட்டவள் ருக்மிணிதான் என்று தெரிந்தால், ஏன் இப்படி இறுமாறப் போகிறார்கள் அவர்கள்? என்ன ஆனால் என்ன, சதுரங்க ஆட்டம் கனஜோராக நடந்து முடிந்து விட்டது!

வாழ்க்கை வண்டி



ஜெ. சாமிநாதன்

முதலோ முடிவோ இல்லாத கடவுளைப் போல் 'க்யூ' நீண்டிருந்தது. ஒரு வழியாய் நிற்க வேண்டிய இடத்துக்கு வந்து நின்றேன். குறைந்தது இரண்டு பஸ் வந்தால் தான் இருக்கும் கூட்டத்தைப் புளி மூட்டையாய் அடைத்துச் செல்ல முடியும்.

கையில் சின்னக் கைக்குட்டைகளை வைத்துக்கொண்டு சிறு பையன் ஒருவன் "நாலு நாட்களாய் வியாபாரம் இல்லே. வாங்கு சாமி" என்று பரிதாபமாய் எல்லோரையும் கேட்டுக் கொண்டிருந்தான். ஒருவராவது அவனிடமிருந்து கைக்குட்டை வாங்கி அவன் கண்ணீர் துடைக்க முன்வரவில்லை. நான் அவனை அழைத்தேன்; விலையை விசாரித்தேன். "இரண்டணா அது சார்!" என்றான்.

கைக்குட்டையைக் கொடுத்துவிட்டு அவன் அங்கிருந்து அகன்றுவிட்டான். எட்டு வயதில் தெருத் தெருவாய் அலைந்து விற்று வயிற்றை நிரப்ப அவனைப் பணித்த விதியை நினைத்து வருந்தினேன்.

"சார், அவனிடமிருந்தா வாங்கினீர்கள்?"

"ஆமாம்."

"அவன் இதையும்தான் இப்படிச் சொல்லி எல்லோரிடமும் விற்று விடுகிறான்."

"அப்படியா? ஆனால் ஒருவரும் வாங்குவதாகக் காணோமே... அதனால்தான் நானாவது வாங்கலாம் என்று நினைத்தேன்."

அதே கைக்குட்டையைக் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து வெளிச்சம் போட்டு, கடைக்குள் நுழைந்தவுடன் தலையில் ஐஸ் வைத்து விற்றால் அவர் எட்டணாவைக் கொடுத்து வாங்குவார். வயிற்றைப் பணயம் வைத்து விற்கும் ஒரு சிறுவனின் குரல் அவர் காதில் விழுமா, என்ன?

ஒரு வழியாகப் பஸ் வந்தது.

பஸ்ஸில் ஏறுவதில் பேதமேயில்லை. எல்லோருக்கும் ஒரே அவசரம். பஸ் வரும் வரைதான் 'க்யூ' முதலிய ஒழுங்குமுறைகளெல்லாம். பஸ் வந்தவுடன் தான் மனிதன் என்பதை மறந்து எல்லோரும் அடித்துப் பிடித்துக் கொண்டு ஏறும் அலங்கோலத்தை என்னவென்று சொல்வது? எல்லாம் தேர்தல் வரும்வரை ஒழுங்காயிருந்து, தேர்தல் வந்தவுடன் பதவிக்கு அடித்துக்கொள்ளும் அரசியல்வாதிகளைப் போலத்தான். பஸ்ஸுக்கு அவசரப்படுபவன் அன்றாடம்வாதி. பதவிக்கு அவசரப்படுபவன் அரசியல்வாதி.

வந்த பஸ் நிரம்பி வழிந்தது.

நான் 'க்யூ'வில் முதலில் நின்றேன். உடலை உலுக்கிக் கொண்டு முதல் பஸ் புறப்பட்டு விட்டது. அடுத்த பஸ்ஸுக்கு இன்னமும் எத்தனை நேரம் காத்துக் கொண்டிருக்க வேண்டுமோ?

நீளவரிசையின் அருகில் விரைந்தவன் அருகில் 'கர்' என்று விமானம் போல் பறக்கும் புதிய பச்சை வண்ணக் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து கண்ணைப் பறிக்கும் உடைகளுடன்.... அட, நம் ரங்கனா?

"உன்னைத்தான் சாமிநாதன்..." என்று சிரித்துக்கொண்டே என்னை அழைத்தான்.

"என்னையா?"

"வந்து ஏறிக்கொள்."

நான் ஒன்றும் புரியாமல் காரில் ஏறிக் கொண்டேன்.

"எத்தனை நேரமாய்ப் பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டிருக்கப் போகிறாய்? உன்னை எனக்கு அடையாளம் தெரிந்து விட்டது. ஆனால் உனக்குத் தெரியவில்லையோ?" என்று ரங்கன் என் தோளை அழுத்தினான்.

அவனையா அடையாளம் தெரியவில்லை?

ரங்கன் என்னோடு கல்லூரியில் படித்தவன். அவன் தந்தை பெரிய கண்ணாடிக்கடையின் முதலாளி. ரங்கன் என்னுடைய நெருங்கிய நண்பன். நல்லவன்.

"இப்போது எங்கே வேலையாயிருக்கிறாய்?" என்று என்னை விசாரித்தான். என்னைக் கடுங் காவலில் வைத்திருக்கும் கம்பெனியின் பெயரைச் சொன்னேன்.

"என் அப்பா போன வருஷம் இறந்து போய் விட்டார். நானும் என் அண்ணனும் தான் இப்போது கடையை நிர்வகித்து வருகிறோம். உனக்கு வேண்டுமானாலும் அங்கேயே வேலை தருகிறேன்" என்று அவன் சொல்லி விட்டு அரண்மனைக்காரத் தெருவில் காரை நிறுத்தச் சொன்னான்.

"எனக்குச் சிறிது வேலை இருக்கிறது. காரிலேயே இரு. ஐந்து நிமிஷத்தில் வந்து விடுவேன்" என்று சொல்லிவிட்டு இறங்கி எதிரேயிருந்த கம்பெனி ஒன்றில் நுழைந்தான்.

அவன் சென்றவுடன் நான் அமர்ந்திருந்த காரைப் பார்த்தேன்.

அப்பா, மனிதனுக்குத்தான் எத்தனை சுகம் வேண்டியிருக்கிறது! சற்று அசைந்தாலும் எழும்பித் துள்ளும் 'குஷன் ஸீட்'. காரின் இரு புறத்திலும் இரண்டு சிறிய மின்

விரிநீகள். கார் பளபளவென்று கண்ணாடி மாதிரி இருந்தது. நிலாவாய்ப் படகு போன்ற அதன் அமைப்பும்...

எனக்கு உள்ளம் இறுகியிருந்தது.

கண்கள்கூடச் சற்று மயங்கின.

வாழ்க்கை என்றால் இதல்லவா வாழ்க்கை!

திடீரென்று 'கரகர'வென்று சத்தம் கேட்டது. வெளியே பார்த்தேன்.

ஒரு வண்டி.

வண்டியா அது? ஒரு பழைய பலகை. அதன் நாலு மூலையிலும் நாலு மரச் சக்கரங்கள்.... நடை வண்டியின் சக்கரங்களை விடச் சற்றுப் பெரியவை. அந்த மரப் பலகையின் மீது ஒருவன்...அவன் மனிதனா? கால் இரண்டும் இல்லாமல், ஒரு கையும் இழந்து வண்டியை இழுத்துச் சென்றவன் தள்ளாடித் தள்ளாடி நடந்தான்; இல்லை—நகர்ந்தான். அவனுக்குக் கைகள் இரண்டும் மணிக்கட்டோடு மொழு மொழுவென்று இருந்தன. வண்டியென்று அவன் நினைத்துக் கொண்டிருக்கிற அந்தப் பலகையைக் கயிற்றோடு பிணைத்து அதை முழங்கையில் மாட்டியிருந்தான். ஒவ்வோர் அடி அதை இழுத்துச் செல்லும் போதும் அவன் உடல் அசதியாய் தளர்ந்தது. கண்கள் மழை பெய்தன. முழங்கை வளைவில் கயிற்றை மாட்டி இழுத்து இழுத்துப் புண்ணாகியிருந்தது.

நான் பிரமை பிடித்தவனாய் அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

கால் அற்றவன் அந்த மரப் பலகையில் உட்கார்ந்திருப்பதும், கை முடமாகி யுள்ளவன் அதை இழுத்துச் செல்வதும்...

காரின் கதவைத் திறந்து ரங்கன் உட்கார்ந்து கொண்டான்.

காரைத் தாண்டிக் கொண்டு 'இரீச் இரீச்' என்று சத்தமிட்டுக் கொண்டு மாபெரும் தேர்போல அந்த ஓட்டை வண்டி சென்றது.

கார் புறப்பட்டது. மயிலாப்பூரில் வந்து நின்றது எதுவுமே எனக்கு ஞாபகமில்லை.

''உன் வீடு இங்கேதானே?'' என்று அவன் கேட்டவுடன்தான் விழிப்பு வந்தது. 'நன்றி' என்று சொல்லிவிட்டு இறங்கிக் கொண்டேன். அன்னம் போல் இருந்த கார் தார் ரோடில் வழுக்கிக் கொண்டு சென்றது.

என் காதில் 'இரீச் இரீச்' என்று வண்டியின் சத்தம் ஒலித்த படியிருந்தது.

மறுநாள் மத்தியானம் உன்னத்திலே ஆவல் உந்த மறுபடியும் அரண்மனைக்காரன் தெருவுக்கு வந்தேன். கடையில் வெற்றிலை வாங்கும் சாக்காய் நின்று 'அது' வருகிறதா என்று காத்துக் கொண்டிருந்தேன்.

அந்த வண்டி வரவில்லை.

எதிரே சாப்பாடு கொண்டு வருபவர்கள் மீதமிருப்பதை ரிக்ஷாக்காரர்களுக்குக் கையில் பிசைந்து போட்டுக் கொண்டிருந்தனர்.

நான் மறுபடியும் தெரு மூலையைப் பார்த்தேன்.

அவர்கள் இன்னும் வரவில்லை.

ரிக்ஷாக்காரர்களும் சாப்பாடு கொண்டு வருபவர்களும் சாப்பாட்டின் விலையைப் பேரம் செய்து கொண்டிருந்தனர்.

இரீச் இரீச்...

ஆ, அவர்களேதான். தூரத்தில் அதோ, அந்தா...அந்த வண்டி எவ்வளவு மெதுவாக வருகிறது. இழுத்து வருபவன் மலையை இழுப்பதைப் போலே முழங்கையில் கயிற்றை மாட்டித் தள்ளாடித் தள்ளாடி இழுத்து வருகிறான். உடல் முழுதும் குளித்தாற் போல் வியர்வை பெருகியிருக்கிறது.

உடலை முடக்கிக் கொண்டு அந்தப் பலகை வண்டியில் ஒடுங்கிக் கிடக்கிறான் இன்னொருவன்...

வண்டி 'இரீச் இரீச்' என்று நெருங்குகிறது. ஓர் அடி நகர்வதற்குள் அப்படியும் இப்படியும் நொடித்து ஆடி...

வண்டி சாப்பாட்டுக் கடைக்காரியிடம் நின்றது.

நான் மெல்ல அங்கே சென்றேன்.

''ஏன் இம்மாம் நேரம்?'' என்று கடைக்காரி கேட்டாள். ''காக சேர்க்க வேணுமா?'' என்று வண்டியில் இருக்கிறவன் தீனமான குரலில் கேட்டான்.

அவள் மீதமிருக்கும் சோற்றை எல்லாவற்றுடன் கலந்து உருட்டினாள்.

இருவரும் நாக்கைத் துழாவிக்கொண்டனர்.

அவள் பிசைந்தவுடன் ''வியாதிக்காரப் பசங்க..'' என்று முணுமுணுத்துக் கொண்டே அங்கே கிடந்த கிழிசல் காகிதத்தில் அதை உருட்டித் தூர வைத்தாள்.


பலகையில் உட்கார்ந்திருந்தவன் அதை எடுக்கக் கையை நீட்டினான்.

'சரக்'...

வண்டி குடை சாய்ந்தது. நொண்டி சோற்றின் மீது விழுந்தான். வண்டியை இழுப்பவன் தானே அவனை உட்கார வைத்தான். குடைசாய்ந்த வண்டியை நேரே நிமிர்த்தினான்.

நொண்டி ஆவலுடன் அந்தக் கிழிசல் காகிதத்தில் இருந்த சோற்று உருண்டையை எடுத்துக் கையற்றவனின் வாயில்..

ஐயோ, அதை நான் எப்படிச் சொல்வேன்!



கையற்றவன் வாயில் அந்த அமுதத்தை எடுத்து ஊட்டினான். அவனுக்கு விக்கியது. குவளையில் இருந்த நீரை அவன் வாயில் ஊற்றினான்.

கூடைக்காரி அருவருப்புடன் கூடையை இழுத்துக் கொண்டாள்.

கையற்றவனுக்கு ஊட்டியதும் மீதத்தைத் தானும் சாப்பிட்டான் அந்த நொண்டி. கூடைக்காரியின் கையில் நாலணாவாக இருபது விழுந்தது.

மறுபடியும் நொண்டி நகர்ந்து நகர்ந்து வண்டியில் உட்கார்ந்து கொண்டான். இன்னொருவன் மரநிழலுக்கு வண்டியை இழுத்துக் கொண்டு சென்றான்.

திடீரென்று என் தோளை யாரோ தட்டினார்கள்.

ரங்கன்!

"என்னடா... ஏன் இப்படி... உன் முகமெல்லாம் வெளிறிப் போய்... ஏன், உன்னுடைய கார் எங்கே?"

"என்னுடைய காரா?"

அவன் சிரித்துக் கொண்டான்.

"அண்ணாவுக்கும் எனக்கும் தகராறு. அவன் சட்டத்தில் ஏதோ நுணுக்கம் கண்டு பிடித்து எனக்குச் சல்லிக் காசுகூட இல்லாமல் செய்து விட்டான். காரும் போச்சு; கடையும் போச்சு..."

"அடப்பாவி!" என்று அடிவயிற்றிலிருந்து கூவினேன்.

"எனக்கு வேலை இருக்கிறது" என்று வேகமாய் அவன் போய்விட்டான்.

பச்சை வண்ணப் புதுக் காரிலே நேற்றுச் சென்றவன்....

கிரீச்....கிரீச்...

ஆமாம், மர நிழலிலிருந்து அந்த ஓட்டை வண்டி கிளம்பி விட்டது. மணிக்கட்டோடு முடமாய்ப் போய்விட்ட கைகளில் கயிற்றை மாட்டிக் கொண்டு வண்டியில் நொண்டியைக் கிடத்தி, அவன் வாழ்க்கை வண்டியை மெல்ல இழுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

தமிழ் கூறும் நல்லுலகம்

திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ ஆசிரமத்துக்குக் காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் 24-1-61 மாலை ஏழரை மணிக்கு எதிர்பாராமல் விஜயம் செய்தது எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கச் செய்துவிட்டது. சுமார் ஒரு மணி நேரம் தேவாலயத்தில் தங்கிச் சலவைக் கற்களில் சுவாமிகளின் ஆக்ஞைப்படி தமிழ், தெலுங்கு, தேவநாகரி லிபிகளில் பொறிக்கப் பட்டிருக்கும் கீர்த்தனைகளைப் படித்துப் பார்த்தார்கள். இக் கைங்கர்யத்தை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார்கள்



ஆசிரமத்தின் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீ சி.வி. ராஜகோபாலாச்சாரியாரும் ஸ்ரீரங்கம் சுந்தரமய்யரும் ஸ்ரீ வால்மீகி மண்டபம் வாசலில் பூர்ண கும்பத்துடன் சுவாமிகளை வரவேற்றனர். வால்மீகி மண்டபக் கட்டிட நிதிக்காகத் தலைக்கு ஒரு ரூபாய் வசூல் செய்துவரும் முறையைப் பாராட்டி அதை ஆதரித்த முறையில் சுவாமிகளும் ஒரு ரூபாய் கொடுத்தார்கள்.

பொறிக்கப்பட வேண்டிய பாக்கிக் கீர்த்தனைகளைப் பற்றியும் அதற்கான செலவைப் பற்றியும் கேட்டதற்கு இதுவரை 560 கீர்த்தனங்கள் ஆகிவிட்டதாகவும் மீதி 90 கீர்த்தனங்கள்தான் இருப்பதாகவும் ஸ்ரீரங்கம் சுந்தரமய்யர் சொன்னார். ஒரு சலவைக்கல்லின் செலவடக்கம் ரூபாய் இருநூறு ஆகிறது.

ஸ்ரீ சி. வி. ராஜகோபாலாச்சாரியாரின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் பாவா நைமி அக்ரஹாரம் வந்து பக்தர்களை அனுக்கிரகித்தார்கள்.

*


போபாலில் வடக்கு தாத்யா துபே நகரிலுள்ள ஸ்ரீ முத்துகிருஷ்ண அய்யர் அவர்கள் இல்லத்தில் ஸ்ரீ தியாகராஜ ஆராதனை உத்ஸவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று ஸ்ரீ என். முத்துகிருஷ்ண அய்யர், ஸ்ரீ ஏ. ஜி. நடராஜன் ஸ்ரீ கோபிநாத் ராவ், ஸ்ரீ தேவராஜன், குமாரி ஆஷா ராமன், குமாரி பத்மா ராமமூர்த்தி, ஸ்ரீமதி பத்மா ராமச்சந்திரன் ஆகியோர் தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடினர்.

*

திருவாவடுதுறையில் எட்டாவது திருமந்திர மாநாடு ஜனவரி 14, 15, 16 ஆகிய மூன்று நாட்களிலும் சிறப்பாக நடைபெற்றது. சித்தாந்த சைவச் செந்நெறியும், சிவயோகப் பயிற்சியும் மிக்க பல அறிஞர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு, அரிய சொற்பொழிவாற்றினார்கள்.

*

இந்தோர் தென்னிந்திய கலாசார சங்கம், கேரள சமாஜம் ஆகியவற்றின் ஆதரவில், ஜனவரி 22ந் தேதி ஜெயம் பத்மாசனி சகோதரிகளின் நடனக் கச்சேரி சங்கத்தின் கட்டிட நிதிக்காக நடைபெற்றது.


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எகானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!


'அனஸின்'
இப்பொழுது சுகாதார முறையில் ஸீலிட்ட புதுமாதிரியான ஸெல்லோபேன் பாக்கட்டுகளில் கிடைக்கிறது
4 மருந்துகள்
அடங்கியுள்ள
அனஸின் மிகச் சிறந்தது
ANACIN
Registered User: GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD.

ஆனந்தமான, ஆரோக்கிய வாழ்வின் வழிகாட்டி



உத்திரப் பிரதேசம், குமாவுன் குன்றின் ஜூகினுலி கிராமக் குழந்தைகளின் கனவு, கிராம சேவிகை மாயாதேவியினூலும் நிஜமாயிற்று. முன்பெல்லாம் குழந்தைகள் கவனிப்பார் இல்லாமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தனர். மாயாதேவியின் வருகைக்குப் பின், குழந்தைகள் படிக்கவும், எழுதவும் கற்றுக் கொண்டதுடன், பாட்டுகள் பாடவும், அழகிய பொம்மைகள் செய்யவும் தெரிந்து கொண்டனர்.

மாயாதேவியைப் போன்ற உற்சாகமுள்ள சமூக ஊழியர்கள்தான், ஆனந்தமான, ஆரோக்கிய வாழ்வு வாழ குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் வழிகாட்டி, நாட்டில் அமைதியான புரட்சியை செய்கின்றனர். குழந்தைகளுக்கு நன்கு போதனை அளித்து முன்னுக்கு கொண்டுவருவதின் மூலம் நவஇந்தியாவை நிர்மாணிக்க உதவி புரிகிறார்கள்.

சொர்க்கத்தின் நிழல்

அத்தியாயம் பதின்மூன்று

ஜெகசிற்பியன்

சாரங்கனின் மெல்லிய விரல்கள் 'லினே' யந்திரத்தின் 'கீ-போர்டில்' வெகு துரிதமாக நர்த்தனம் செய்து கொண்டிருந்தன. அந்த விரல்களின் தாளகதி பிசகாத அழுத்த அசைவினால், 'டைப்-காபினி'லிருந்து சங்கிலித் தொடராகச் சரிந்து வந்த பித்தளை அச்செழுத்துக்கள், ஒரு நீண்ட கம்பியில் சரம் கோத்தாற்போல் இணைந்து நகர்ந்து கொண்டேயிருந்தன. செய்திப் பிரதியில் ஒரு கண்ணும், சரம் கோத்து நகரும் அச்செழுத்துக்களில் ஒரு கண்ணுமாகச் செலுத்தி, இடக் கையால் அவ்வெழுத்து வரிசையைச் சரிசெய்தவாறே வலக்கை விரல்களால் பித்தான்களில் ஊர்ந்து கொண்டிருந்த சாரங்கன், ஒரு வரிக்குரிய அளவு நிறைவானதும் 'ஹாண்டில்' ஒன்றைக் கீழே அழுத்தினான். அந்த எழுத்து வரிசையிலிருந்த 'ஸ்பேஸ்' தகடுகள் மேலேறி வரியை இறுக்கிய வண்ணம் பக்கவாட்டில் இறங்க, இரண்டு சக்கரங்கள் ஓர் அரை வட்டத்துக்குச் சுழன்று ஒன்றுடன் ஒன்று படீரென்று மோதி விலகியதும், பளபளப்பான ஈயத்தகடு ஒன்று சிலுக்கென வெளியே வந்து விழுந்தது. அப்படி விழுந்த அந்த 'ஸ்லக்'கின் தலை மட்டத்தில் அழகான ஆங்கில எழுத்துக்கள் சொல் வடிவம் பெற்றுப் பளபளத்தன. காங்கோவைப் பற்றிய சூடான செய்தியொன்றின் சுவையான வரி அது! அவ்வரியைத் தாங்கிய அந்த 'ஸ்லக்'கும் இப்போது சூடாகத்தான் இருந்தது! அடுத்தபடியாக மேலிருந்து இறங்கிய ஓர் 'இரும்புக் கை', அந்தப் பித்தளை அச்சுக்களைக் கொத்தாகப் பிடுங்கிக் கொண்டுபோய், மேலேயிருந்த 'டைப்-காபினி'ல் ஒவ்வொன்றாக 'டிஸ்ட்ரிபியூட்' பண்ணத் தொடங்கியது. இவ்வளவும் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடக்கும் ஜால வித்தைகள். இந்த அபூர்வ அச்சுக் கோப்பு வித்தையை அநாயாசமாகச் செய்து கொண்டிருந்தான் சாரங்கன்.

''சார்!''

கூன் விழுந்த முதுகை நிமிர்த்திக் கொண்டு திரும்பினான். அவன் அருகில் வந்து நின்ற ஆபீஸ் பையன் தெற்றுப் பல் தெரியச் சிரித்தவாறு, ''ஏங்க சார், இங்கே கமலின்னு யார் சார் லினோ ஆபரேட்டர் இருக்காங்க?'' என்று கேட்டான்.

சாரங்கனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்னடா, என்ன உளர்றே?'' என்று சீறி விழுந்தான்.

''இல்லீங்க சார்! இதோ பாருங்க, இந்தப் புரூப்பை! இதைக் கம்போஸ் பண்ணினது 'கமலி'ன்னு மேலே போட்டிருக்கு! இது யாருன்னு, சப்-எடிட்டர் ஹரிஹரன் சார் கேட்டுக்கிட்டு வரச் சொன்னாரு!'' என்று விளக்கினான் பையன். அவனுக்கு உள்ளூறச் சிரிப்பு பொங்கியது.

அவசரமாக அந்தப் 'புரூப்'பை வாங்கினான் சாரங்கன். கிளிஞ்சல் ஓடு போன்ற மூடிக்கு அடியில் எரிந்துகொண்டிருந்த மின் விளக்கின் வெளிச்சத்தில் பிரித்து உற்றுப் பார்த்தான். பையன் சொன்னது உண்மையே; அந்தப் புரூப்பின் ஓரத்தில் கமலி என்னும் பெயர் தான் அச்சாகியிருந்தது!

மூக்கை உருவிவிட்டவாறு கடகடவெனச் சிரித்தான் சாரங்கன்.

''யாரு சார் இது? நம்ம ஆபீஸிலே யாராவது பொம்பளை ஆபரேட்டர், புதிசா 'அப்பாயிண்ட்' ஆகியிருக்காங்களா?'' என்று மிகவும் விநயமாகக் கேட்டான் பையன்.

''போடா முட்டாள்! இது நான் கம்போஸ் பண்ணின மேட்டர்தான்டா! என்னமோ ஞாபகத்திலே ஏதோ பெயரைப் போட்டுவிட்டேன்!''

''ஞாபக மறதியிலே கூட நீங்கள் ரொம்பவும் அழகான பேரைக் கற்பனை பண்ணியிருக்கீங்க சார்!'' என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்து சென்றான் பையன்.

அவன் தலை மறையும் வரை மௌனமாக இருந்த சாரங்கன் அந்தப் புரூப்பை அவசரமாகப் பிரித்துப் பார்த்து விட்டுத் தலையைச் சுழற்றிச் சுழற்றிச் சிரித்தான். சிரித்துக்கொண்டே கீழே வைக்கப்பட்டிருந்த ஓர் ஈயக் கட்டியை எடுத்து யந்திரத்தின் உருக்கு உலையில் போட்டுவிட்டுத் தன் வேலையில்

கவனம் செலுத்தினான். பழக்கத்தின் காரணமாக அவனுடைய கண்ணும் கையும் பிசகின்றி இயங்கிக் கொண்டிருக்க, அவனது சிந்தனை மட்டும் அங்கிருந்து வெளியே தாவி விரைந்தது.

ஆமாம்; அந்தச்சம்பவத்தை நினைக்கும்போதெல்லாம் இப்படித்தான் அவனுக்குச் சிரிப்பு குமட்டிக் கொண்டு வந்து விடுகிறது.

அன்றொரு நாள் கமலியைத் தேடிக் கொண்டு டாக்டர் ராமநாதனின் வீட்டை நோக்கி ஓடினான் அல்லவா? வீட்டை நெருங்கிய சமயம் அவனுக்கு வேறுசில குழப்பங்கள்ஏற்பட்டுவிட்டன.


'அங்கு போய் யாரிடம் இந்த விஷயத்தைச் சொல்வது? விவேகானந்தனோ தனக்கேற்பட்ட காதல் தோல்வியினால் மனம் உடைந்து சென்றிருக்கிறான். அவன் தன் வீட்டுக்குத்தான் சென்றானோ, அல்லது வேறெங்கேனும் போய் விட்டானோ! அப்படியே அவன் வீட்டிலிருந்தாலும் இந்த விஷயத்தைச் சொன்னால் அவனுக்குக் கோபம்தான் வரும். எடுத்தெறிந்து பேசி அவமானப்படுத்தி விடுவான். சுந்தரியம்மாளிடமோ டாக்டரிடமோ சொன்னாலும் அதனாலும் பல சங்கடங்கள் ஏற்பட வழியிருக்கிறது. தெருவில் சென்ற பெண்ணை நீ ஏன் ஆட்டோ-ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டு போனாய் என்று அவர்கள் கேட்டுவிட்டால் என்ன பதில் சொல்ல முடியும்? வீணான சந்தேகங்களும் அபவாதங்களும் அல்லவா நேர்ந்து விடும்?'

வெளியிலேயே தயங்கி நின்று விட்டான் சாரங்கன். அவனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. மதில் சுவர் ஓரமாக நின்று கழுத்தை நீட்டி உள்ளே எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பின்னால் யாரோ கனைக்கும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினான். அங்கே கடுகடுத்த முகத்துடன் நின்று கொண்டிருந்தாள் கமலி. தன் பூனைக் கண்களை நிமிண்டி விட்டுக் கொண்டு ... திருதிருவெனப் பார்த்து விழித்தான் சாரங்கன்.

கையைக் கட்டிக் கொண்டு அவனையே முறைத்துப் பார்த்த கமலி, "நல்ல காரியம் செய்தீர்களே! ஒரு பெண்ணிடம் இப்படித்தான் நீங்கள் நடந்து கொள்வதா?" என்று கோபமாகச் சீறிக் கேட்டாள்.

சாரங்கனுக்கு மூச்சு முட்டியது. எச்சிலைக் கூட்டி விழுங்கியவாறு அவளைப் பரிதாபமாகப் பார்த்து, "மன்னிக்க வேண்டும், அம்மணி! அடியேன் திரும்பி



வருவதற்குள் அவசரப்பட்டு நீங்கள் புறப்பட்டு விட்டீர்கள்" என்று குழறினான்.

"சும்மா கதை அளக்காதீர்கள். இந்த ஊருக்கு வந்த அன்றே நீங்கள்எப்பேர்ப்பட்ட ஆள் என்பதை நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன்."

"ஐயையோ! அப்படியெல்லாம் தப்பாக நினைக்காதீர்கள், அம்மணி! ஆட்டோ ரிக்ஷாவோடு நீங்கள் அந்தர்த்தியானம் ஆகிவிட்டதை அறிந்து நான் என்ன பாடுபட்டு விட்டேன், தெரியுமா? இதோ பாருங்கள், உங்களைத் தேடிக்கொண்டு ஓடி வந்த இரைப்பு எனக்கு இன்னும் அடங்கவில்லை!"

"போர்ட்டராக நடித்தவரில்லையா? இதெல்லாம் வெறும் வேஷம்!" என்று கடுகடுப்புடன் சொல்லிக் கொண்டே அங்கிருந்து காம்பவுண்டு வாயிலை நோக்கி விர்ரென்று நடந்தாள் கமலி.

சற்றுத் தூரம் சென்றவள் அதே வேகத்துடன் திரும்பி வந்து, "சீக்கிரம் எடுங்கள், மூன்று ரூபாய் பத்தணா!" ஆட்டோ ரிக்ஷாவுக்கு நான் கொடுத்த பணம் அது. ஊம், சீக்கிரம்!" என்று கையை நீட்டினாள்.

சாரங்கன் திண்டாடினான். ஜேபியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு விழித்தான்.


"என்ன விழிக்கிறீர்கள்? பணத்தை எடுங்கள்!" என்று அதட்டினாள் கமலி.

"இல்லை, அம்மணி! என்னிடம் ஒரு சல்லிக் காசுகூட இல்லை. அதனால்தான்... உங்களை வந்து...அங்கே..." என்று உளறினான் சாரங்கன்.

"ஓஹோ! அதனால்தான் என்னை நடுத் தெருவில் விட்டு விட்டுக் கம்பி நீட்டி விட்டீர்களோ?"

"ஆமாம்...இல்லை...வந்து..."

"என்ன, ஆமாம் இல்லை? எனக்கு அதெல்லாம் தெரியாது. பணத்தை வைத்தாக வேண்டும்!"



"அடியேன் இப்போது 'நில் பாலன்ஸா'ய் இருக்கிறேன் அம்மணீ! நிஜமாகத் தான் சொல்கிறேன். நீங்கள் வேண்டுமானால் என் ஜேபிகளைச் சோதனை போட்டுப் பார்த்துக் கொள்ளலாம்" என்று மென்று விழுங்கிச் சொல்லிக் கொண்டே தன் சட்டை, கால் சட்டை ஜேபிகளை அவசரமாக வெளியே இழுத்துத் தட்டித் துடைத்துக் காட்டினான் சாரங்கன். மீண்டும் அவன் தொடர்ந்து, "வேண்டுமானால்......அன்றைக்கு அடியேன்...தங்களுக்கு மூட்டை தூக்கிக் கொண்டு வந்த கூலியை இந்தத் தொகைக்கு நேர் செய்து கொள்ளுங்கள் அம்மணீ!" என்றான் பரிதாபமாக.

கமலி இதைக் கேட்டுக் கலீரெனச் சிரித்தாள். அவன் இவ்வளவு நேரம் அத்தனை கடுகடுப்பாகப் பேசியதெல்லாம் வெறும் நடிப்பு என்பதைத் தெள்ளத் தெளியக் காட்டுவதாக இருந்தது அந்த ஜலதரங்கச் சிரிப்பு. மையல் ரஸம் வழியச் சிரித்துக் கொண்டே அவனிடம் நெருங்கி வந்த அவள் நாணத்துடன் தலை கவிழ்ந்து, "கோபித்துக் கொள்ளாதீர்கள்! நான் வேண்டுமென்றுதான் ஆட்டோ-ரிக்ஷாவுக்குப் பணம் கொடுத்து அனுப்பி விட்டு வந்தேன். என்னைத் தேடிக் கொண்டு நீங்கள் வருகிறீர்களா, இல்லையா என்பதைப் பரிசோதிக்கவே அப்படிச் செய்தேன். பாவம், உங்களுக்கு மிகவும் சிரமம் கொடுத்து விட்டேன்; மன்னியுங்கள்!" என்று குழைந்து கூறினாள். பிறகு அங்கிருந்து சிட்டெனப் பறந்தோடி மறைந்தாள்!......

அச்செழுத்துக்களைச் சரித்துக் கொண்டு வரும் நாடாவின் சிறிய சக்கரச் சுழற்சியில் ஏதோ சிக்கலேற்படவே, அந்த இனிய நினைவுகளிலிருந்து விடுபட்ட சாரங்கன், அச்சிக்கலைச் சரிசெய்து மீண்டும் வேலையைத் தொடங்கினான்.

ஓர் ஐந்து நிமிஷத்தில் காங்கோச் செய்தி முழுவதையும் 'கம்போஸ்' பண்ணி முடித்த அவன் அதைப் 'ப்ரூப்' போட அனுப்பிவிட்டு, அடுத்த செய்திப் பிரதியை எடுத்தான். அது 'கடை சித் தந்தி'ச் செய்தி. டெலிப்ரின்டரில் 'டைப்'பான செய்தியாதலால் அது முழுக்கவும் 'காபிடல்' எழுத்துக்களிலேயே இருந்தன. இது கொஞ்சம் சிரமமான வேலை. எனவே, கவனம் செலுத்தி அதைக் 'கம்போஸ்' செய்து முடித்து விட்டு, இன்னொரு செய்திப் பிரதியை எடுத்தான். அது உள்ளூர்ச் செய்தியானதால் கையெழுத்தில் எழுதப் பெற்றிருந்தது. எதைப் பற்றிய செய்தி என்பதைக்கூடக் கவனியாமல் கண்ணையும் கையையும் மட்டும் அதிலே லயிக்கச் செய்து விட்டு, மனத்தை மறுபடியும் பழைய இடத்துக்கே கொண்டு போய் நிறுத்தினான் அவன்.

மானெனத் துள்ளி ஓடிய கமலி, டாக்டர் ராமநாதனின் பங்களாவுக்குள் சென்று மறைந்த பின்னும் சாரங்கனின் மனப்பிரமை நீங்கவில்லை. வலக் காலால் இடக் காலைத் தேய்த்தவாறு, அவள் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"சார்! சார்! நீங்க பார்த்தீங்களா சார்? எங்க சின்ன எஜமானைப் பார்த்தீங்களா, சார்?" என்ற உரத்த குரல் கேட்டுச் சட்டென்று திரும்பிய சாரங்கனின் எதிரே, அரக்கப் பரக்க ஓடி வந்து நின்றான் கண்ணையிரம்.

இதுவரை அநுபவித்தறியாத ஏதோ ஒரு புத்தம் புதிய இன்ப உணர்வில் மனம் கிறக்குற்ற, மலர்ப்பொறிக்குள்ளே சிக்கிக்கொண்டு தவிப்பவன் போல் திகைத்து நின்றிருந்த சாரங்கன், அவனைப் பரபரப்புடன் ஏறிட்டுப் பார்த்து, "என்ன, கண்ணு! என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"எங்க சின்ன ஐயாவைக் கேட்கிறேன், சார்! நீங்க அவரைப் பார்க்கலீங்களா?" என்று படபடத்தான் கண்ணையிரம்.

"விவேகானந்தனையா கேட்கிறாய்?"

"ஆமாங்க, சார்!"

"என்ன நடந்தது?"

"பெரிய எசமான் என்னமோ சொன்னாருங்க; அதனாலே சின்ன ஐயா கோவிச்சுக்கிட்டு வீட்டைவிட்டு எங்கோ போயிட்டாருங்க! எஜமானியம்மா அழுதுஅலமோதிக்கிட்டு இருக்கிறாங்க!"

மோவாயைத் தடவிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்த சாரங்கன் சற்று நேரம் கழித்து, "அது சரி; சிவப்பிரகாசத்தின் வீட்டிலிருந்து யாராவது வந்தார்களா?" என்று கேட்டான்.

"யாரும் வரலீங்க! டாக்டரய்யாவும் அம்மாவும்தான் அங்கே போறதா இருந்தாங்க. அதுக்குள்ளாற அங்கேயிருந்து டெலிபோன் வந்துச்சு. அப்புறம்தான் இந்தமாதிரி நடந்து போச்சுங்க!"

"ஓகோ....." என்று பலமாகத் தலையசைத்தான் சாரங்கன். "சரி; நீ போ, கண்ணு! உன் சின்ன எஜமான் எங்கும் போக மாட்டான். நாளைக் காலையில் நான் வந்து தகவல் சொல்கிறேன்" என்று கூறிக்கொண்டே அங்கிருந்து வேகமாகத் திரும்பி நடந்தான்.

சங்கக் காரியாலயத்தை அவன் அடைவதற்கும், விவேகானந்தன் அங்கு வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது. விவேகானந்தனை அப்போது பார்ப்பதற்கே மிகவும் பயங்கரமாக இருந்தது. அத்தனை கோபாவேசத்துடன் காணப்பட்டான் அவன். இதமாகவும் இனிமையாகவும் பேசி அவனை ஒருவாறு சாந்தப்படுத்திய சாரங்கன், நடந்த விவரங்களை மெள்ள விசாரித்துத் தெரிந்துகொண்டான். டாக்டர் தம் மைத்துனனைக் கோபமாகப் பேசியதோ, அதற்காக விவேகானந்தன் கோபித்துக் கொண்டு வந்ததோ அவனுக்குப் பெரிய விஷயமாகத் தோன்றவில்லை. ஜமதக்னியின் வீட்டில் நடந்த நிகழ்ச்சிகள்தான் அவனுக்குப் பெரு வியப்பைத் தந்தன. எப்படியெல்லாமோ அவனைச் சமாதானப் படுத்தித் தன் வீடு போய்ச் சேரும்படி புத்திமதி கூறினான் சாரங்கன். விவேகானந்தன் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. "கொஞ்ச காலத்துக்கேனும் நான் தனித்து வாழ முடிவு செய்து விட்டேன்; அந்த முடிவை மாற்றிக் கொள்வதற்கில்லை" என்று உறுதியாகச் சொல்லி விட்டான். இப்போதைக்கு இதற்குமேல் வற்புறுத்த வேண்டாம் என்று சாரங்கன் மௌனமாகிவிட்டான்.

அன்றிரவு அவர்கள் இருவரும் சங்கக் காரியாலயத்திலேயே படுத்துக் கொண்டனர். மறு நாள் காலையில் சாரங்கன் எழுந்தபோது அங்கு விவேகானந்தன் இல்லாததைக் கண்டு திடுக்கிட்டான். அவன் எங்கே போனான், எங்கே தங்கியிருக்கிறான்என்பதை அறியக் கடந்த ஒரு வாரமாக முயன்றும் இதுவரையில் யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. தன் உயிர் நண்பனுக்கு இப்படியொரு சங்கடம் ஏற்பட்டு அவனைப் பிரிந்திருக்கும்படியாகி விட்டதே என்று மிகவும் மனம் நொந்து போனான் சாரங்கன்.



விவேகானந்தன் இந்த ஊரை விட்டு எங்கும் போகவில்லை என்று மட்டும் அவனுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. ஏனென்றால், விவேகானந்தனின் பெயர் பொறித்த தேர்தல் விளம்பரச் சுவரொட்டிகள் இப்போது நகரெங்கும் காட்சியளித்துக் கொண்டிருந்தன. ஆனால், அவன் எங்கிருக்கிறான் என்பதைத்தான் இன்று வரையில் கண்டு பிடிக்க முடியவில்லை!

இதற்கிடையே கோமதியைப் பற்றிய விஷயமும் அவனுக்குப் பெரும் புதிராய் இருந்தது. விவேகானந்தன் தன் வீட்டை விட்டு வெளியேறி எங்கோ தனியே வசித்து வருகிறான் என்று சாரங்கன் வாயிலாகக் கேள்விப்பட்டதிலிருந்து அவளுடைய போக்கில் சில விசித்திர மாறுதல்கள் தென்பட்டன. தன் தாயின் மறைவுத் துயரைக் கூட மறந்து விட்டவள்போல் மகிழ்ச்சியோடு காணப்பட்டாள். அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு அடிக்கடி வெளியே போவதும் வருவதுமாக இருந்தாள். இப்படியிருந்த அவள், கடந்த நான்கு நாட்களாகப் பழையபடி உற்சாகமிழந்த நிலைக்கு மாறினாள். தன் தாயின் படத்துக்கெதிரே உட்கார்ந்து மணிக்கணக்கில் அழுது கொண்டிருப்பதும், எதையோ பறி கொடுத்தவள்போல் எண்ணமிட்டுக் கொண்டிருப்பதுமாக நேரத்தைப் போக்கி வந்தாள். இதைக் கண்டும் காணாததுமாதிரி கவனித்து வந்த சாரங்கனுக்கு அவளிடம் எதையுமே வாய்திறந்து கேட்கத் துணிவு பிறக்கவில்லை!......

"என்ன! என்ன!" என்று தன்னைத் தானே அதட்டிக் கேட்டுக் கொண்டே, 'ஈ - போர்டிலி'ருந்து வெடுக்கெனக் கையை உதறி நிமிர்ந்தான் சாரங்கன். கண்களின் வழியே புகுந்த ஏதோ ஒரு காரமான உணர்ச்சி, இதுவரை எங்கோ நீண்டு போய்க் கொண்டிருந்த அவனுடைய நினைவு நாக்குகளில் சுரீரென்று உறைத்ததால்தான் அப்படி விழிப்படைந்து நிமிர்ந்தான். இந்நேரம்வரை தான் 'கம்போஸ்' பண்ணிக் கொண்டிருந்த செய்திப் பிரதியை அவசரமாக எடுத்து, அதில் ஆங்கிலத்திலே எழுதப் பெற்றிருந்த செய்தியைத் தன் தமிழ் மனத்தால் பரபரப்புடன் படித்தான்:

"அடுத்த மாதம் நடக்கவிருக்கும் உப தேர்தலையொட்டி அதன் அபேட்சகர்களில் ஒருவராகப் போட்டியிடும் ஸ்ரீ விவேகானந்தன், நேற்று மாலை நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது, யாரோ சில விஷமிகள் பந்தலுக்குத் தீ வைத்துவிடவே, கூட்டம் அடிதடிக் குழப்பத்தில் முடிந்தது. மேற்கொண்டு தகவல் எதிர்பார்க்கப்படுகிறது......"

அத்தியாயம் பதினொன்று

இரவு மணி பதினொன்றிருக்கும். வெகு வேகமாக வந்த டாக்ஸி ஒன்று, நெடுஞ்சாலையிலிருந்து ஒரு சிறிய தெருவில் திரும்பத் தன் வேகத்தைக் குறைத்தது.

"டிரைவர்! இங்கேயே நிறுத்திக் கொள். நான் இறங்கி விடுகிறேன்."

டாக்ஸி நின்றது. விவேகானந்தன் கீழே இறங்கினான். அவனுடன் மற்றும் இருவர் இறங்கினர்.

"அப்போ, நான் வீட்டுக்குப் போகிறேன். நாளைக் காலை சந்திப்போம்" என்றான் விவேகானந்தன்.

"நீங்கள் இன்னும் சாப்பிடக்கூட இல்லையே, சார்!" என்று அந்தப் புதிய ஆட்கள் இருவரும் ஒரே குரலில் கூறித் தலையைச் சொறிந்து கொண்டனர்.


"ஓ....நீங்கள் இரண்டுபேரும் இன்னும் சாப்பிடவில்லையா? மறந்துவிட்டேன்!" என்றவாறு தன் ஜேபியிலிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவ்விருவரிடமும் கொடுத்து, "சரி; காலையில் சந்திப்போம்" என்று கூறினான் விவேகானந்தன்.

"பரவாயில்லை, சார்! பணத்துக்கென்ன அவசரம்?" என்று சொல்லிக் கொண்டே பணத்தைப் பெற்றுக் கொண்ட அவ்விருவரில் ஒருவன் சற்றே அருகில் வந்து, "என்ன, சார்! நான் சொன்ன விஷயமாக நீங்கள் ஒன்றுமே சொல்லவில்லையே?......" என்றான் இரகசியக் குரலில்.

"என்ன சொன்னீர்கள்? நினைவில்லையே!" என்று நெற்றியை வருடிக் கொண்டு கேட்டான் விவேகானந்தன்.

"அதுதான் சார்! நேற்று நாம் கூட்டம் போட்ட அதே மைதானத்தில் நாளைக்கு அவர்கள் கூட்டம் நடத்தப் போகிறார்கள். அதற்கு இன்றிலிருந்தே பந்தல், மேடையெல்லாம் போடும் வேலை ரொம்பவும் ஜரூராக நடந்து கொண்டிருக்கிறது......"

"நடக்க வேண்டியதுதானே? நடக்கட்டுமே" என்றான் விவேகானந்தன்.



"என்ன சார், இப்படிச் சொல்கிறீர்கள்? நேற்று நாம் நடத்திய கூட்டத்தில் அவர்கள் வந்து பந்தலைக் கொளுத்திவிட்டுக் கலாட்டா செய்தார்கள் அல்லவா? நாம் மட்டும் ஏன் சும்மா இருக்க வேண்டும்? நீங்கள் 'ஊம்' என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள்: மற்றதை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!"

முதல் ஆள் சொல்லி நிறுத்தியதை இரண்டாவது ஆள் தொடர்ந்தான்: "இதற்கெல்லாம் முன்னே பின்னே பார்க்கக் கூடாது சார்! இந்த மாதிரி வேலைகளுக்காகவே எங்களிடம் பத்துப் பையன்களைத் தயார் செய்து வைத்திருக்கிறோம்! தலைக்கு ஐந்து ரூபாய் கொடுத்தால் போதும்; அப்புறம் பாருங்களேன், வேடிக்கையை!"

"வேண்டாம், நண்பர்களே! அந்த மாதிரி காரியமெல்லாம் எனக்குப் பிடிக்காது" என்று வேகமாகத் தலையாட்டினான் விவேகானந்தன்.

"நீங்கள் புதிசு, அதுதான் இப்படிப் பயப்படுகிறீர்கள். எலெக்ஷன் என்றால் இதெல்லாம் சகஜம்தான் சார்!"

"இருக்கலாம். ஆனால், என்வரையில் அது ஒரு புனிதமான நடப்பாக இருக்கட்டும்...."

"சரிதான், போங்கள்! இப்படிப் புனிதம் இனிதம் என்று மேடையில் பேசுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும், சார்! காரியத்தில் அதைக் கடைப்பிடித்தால், வோட்டுப் பெட்டி காலியாகிவிடும்."

"பரவாயில்லை, நண்பர்களே! அப்படித் தோற்றுப் போனால் நான் கவலைப்படமாட்டேன்."

"அப்புறம், உங்கள் இஷ்டம் சார்!" என்றபடி அவ்விருவரும் டாக்ஸியில் ஏறிக் கொண்டனர்.

டாக்ஸி சென்றதும் அந்தக் குறுகலான தெருவில் இறங்கி நடந்தான் விவேகானந்தன். "சே! என்ன மோசமான ஆட்கள். இவர்களைக் கட்டி மேய்த்து அடக்குவதற்கே என் நேரம் சரியாகிவிடுகிறது. பணப் பேய்கள். கொஞ்சம் ஏமாந்தால் ஆளையே பிய்த்துப் பிடுங்கித் தின்றுவிடுவார்கள். இப்படிப்பட்டவர்களிடம் பழக வேண்டியதாகிவிட்டதே. என்ன செய்வது? வேறு வழியில்லை!" என்று வெறுப்புடன் தனக்குள் முனகிக்கொண்டே வேகநடை போட்டான் அவன்.

பசித்த ஞமலிகள் தூக்கம் பிடிக்காமல் இருளைப் பார்த்துக் குரைத்துக் கொண்டிருந்தன. அந்தகார இருளரக்கிதான் தம்மை இப்படிப் பட்டினி போட்டு வதைக்கிறாள் என்று எண்ணியோ என்னவோ அவை மூலைக்கு மூலை நின்று ஓயாமல் குரைத்துக்கொண்டே இருந்தன. அவற்றின் ஓலக் குரலால் இருளரக்கியின் கர்ப்பப் பிராந்தியமே கலங்கிச் சிதறிவிடும் போல் தோன்றியது. இவ்வாறு அந்த நாய்கள் ஊரையே இரண்டுபடச் செய்வதுபோல் குரைத்து அமர்க்களம் பண்ணிக்கொண்டிருப்பதைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல், அப்பேரொலிகளைத் தாலாட்டுக் கீதமாகக்கொண்டு ஆழ்ந்த நித்திரையில் லயித்திருந்தார்கள். தெருவின் இரு பக்கமும் படுத்துக் கிடந்த சில நடைபாதை வாசிகள்.

விவேகானந்தனுக்கும் இப்போது பசி வயிற்றைக் குடைய ஆரம்பித்தது. தேர்தல் பிரசாரத்தில் முழு நேரத்தையும் செலவிட்டுக்கொண்டிருந்த அவனுக்குச் சாப்பிடக்கூட ஓய்வு கிடைப்பதில்லை. தனி மனிதனை நின்று இவ்வளவு பெரிய காரியத்தில் ஈடுபடுவதென்றால் சாமான்யமாகி விடுமா? இப்போதுகூட அவன் எதுவும் சாப்பிடாமல்தான் வந்துவிட்டிருக்கிறான். வீட்டுக்குப் போய் உடம்பைப் படுக்கையில் கிடத்திவிட்டால் போதும் என்றிருந்தது அவனுக்கு. அத்தனை களைப்பு, சோர்வு.

புதிதாக வீடுகள் எழும்பிக் கொண்டிருக்கும் ஒரு புதிய நகர் அது. எனவே, இயற்கையன்னை தீட்டிய கேலிச்சித்திரங்கள்போல் ஒழுங்கில்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சுமார் ஐம்பது அறுபது வீடுகள் காணப்பட்டன. அவற்றில் ஒரு சில வீடுகளில் மட்டுமே மின்சார வசதி இருந்தது. தெருக்கள்கூட இன்னும் சரியாக அமையவில்லை. அதனால் தெரு விளக்குகளும் பொருத்தப் பெறவில்லை. விடியற்சாமக் கருக்கலில் குருட்டுக் கிழவி போட்ட மாக்கோலங்கள்போல் அந்தத் தெருக்கள் தாறுமாறாகச் சென்றன

ஆள் சந்தடியற்றுக் கிடந்த அந்தத் தெருவில் வேகமாக நடந்துகொண்டிருந்த விவேகானந்தன், பின்னால் யாரோ வரும் ஒலி கேட்டுச் சட்டென்று திரும்பி இருளை ஊடுருவிப் பார்த்தான். யாரும் வருவதாகத் தெரியவில்லை. மேலே தொடர்ந்து நடந்தான்.

இருளின் அணைப்பில் புதைந்து தன் வழியிலே நடந்து கொண்டிருந்த அவன் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் எல்லாம் முண்டித்துக் கிளைத்துப் படர்ந்தன. பொழுது விடிந்து பொழுது போகிறவரை தேர்தல் சம்பந்தமான வேலைகளிலேயே மூழ்கிக் கிடந்த அவனுக்கு இம்மாதிரி இரவுநேரம் வந்தால்தான் தன்னைப் பற்றி எண்ணிப் பார்க்க முடிகிறது. அப்படி எண்ணும் அநுபவம் வேதனை நிரம்பியதாக இருப்பதால் அதைத் தவிர்க்க ஒரு போராட்டத்தையே அவன் நடத்த வேண்டியிருக்கும். சில சமயம் அதில் வெற்றி கிடைக்கும்; பெரும்பாலும் தோல்விதான் நேரும். அம்மாதிரி இரவுகள் தூக்கமின்றியேகழிந்து செல்லும். இந்தவழக்கமான 'பிடி'யிலேயே இப்போதும் அவன் சிக்கிக் கொண்டான்.



'தேவகி!.... அந்த அழகான பெண், என்னை ஏன் வெறுக்கிறாள்? என்னிடம் அவள் என்ன குறை கண்டாள்? அவளுக்கு நான் அவசரப்பட்டுக் கடிதம் எழுதியது தவறாகி விட்டதா? அல்லது என் மன உறுதியைச் சோதிக்க அப்படி நடந்து கொள்கிறாளா?... சே, என்ன மடத்தனம்! அவள் என்னை விரும்பவில்லையென்பதுதான் நிச்சயமாகிவிட்டதே! இன்னுமா இந்த நைப்பாசை? இல்லை; அவள் விசித்திரப் பெண்!... திடீரென்று அவளே என்னை நாடி வந்தாலும் வருவாள்.... அதுவரை நான் ஏன் பொறுமையோடு இருக்கக் கூடாது? பாவம், என் அக்காளை நினைத்தால் தான் மனம் வேதனையடைகிறது. அத்தானை எண்ணினாலோ அழுகையே வந்து விடுகிறது. அவர்கள்தான் என்மீது எத்தகைய அன்பும் வாஞ்சையும் வைத்திருந்தார்கள். தாயும் தந்தையும் இருந்தால்கூட இத்தனை செல்லமாக நான் வளர்ந்திருப்பேனா? அப்பேர்ப்பட்டவர் சண்டைப் பகைத்துக் கொண்டு வந்து விட்டேனே. அன்றைய ஆத்திரத்தில், அத்தான் அப்படிப் பேசியதைக் கேட்கப் பொறுக்காமல்தான் வந்து விட்டேன். அவர் ஏன் எல்லை எக்கும்பில்லாத மது மாகக் கேவலமாகப் பேச வேண்டும்? நான் என்ன தவறு செய்தேன்? இல்லை; தந்தைக்குத் தந்தையாக இருந்து வளர்த்த அவர், இரண்டு வார்த்தை திட்டுவதற்கு உரிமை இல்லையா? பேசாமல் அவரிடம் போய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் என்ன? சட்! இது என்ன புத்தி? நான் ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்? அவர்கள் துணையின்றி என்றால் இந்த உலகத்தில் வாழ முடியாதா? நன்றாக வாழ்ந்து காட்டுகிறேன். இல்லையா பார்! ஐயோ, பாவம்! அந்த அசட்டுப் பயல் சாரங்கன் - என்னைப் பார்க்காமல் எப்படிப் புழுங்கிக் கொண்டிருக்கிறானோ? அவனைப் பார்க்காமல் இருப்பதற்கும் ஒரு காரணம் இருக்கிறது!...... அப்புறம்! அவள்...அந்த நாடகக்காரி கோமதி! ...சே, அவளை ஏன் நினைப்பது? அவளால் தானே அந்த அற்பன் ஜமதக்னி அறிமுகமானான்? அவன் என்னை எவ்வளவு கேவலமாகப் பேசி விட்டான்! இருக்கட்டும், அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்காமல் விடக் கூடாது!''

மறுபடியும் பின்னால் ஏதோ அரவம் கேட்கவே திரும்பினான் விவேகானந்தன். சுற்றுமுற்றும் பார்த்தான். ஒன்றுமே தெரியவில்லை. தன் மனம் செய்யும் குறளி வித்தை இது என்று எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டே மேலே நடந்தான்.

அவனுக்குச் சட்டென்று ஒரு விஷயம் அப்போது நினைவுக்கு வந்தது. அது ஒரு விசித்திரமான விஷயம். மர்மமான விஷயமும் கூட.

ஆமாம், கடந்த நான்கு நாட்களாக அவன் குடியிருந்து வரும் வீட்டு ஜன்னலின் மீது, இரவு நேரங்களில் மட்டும் யாரோ தவறாமல் வந்து ஓர் உணவுப் பொட்டலத்தை வைத்து விட்டுப் போகிறார்கள். அப்படி வைத்துச் செல்வது யார் என்று இதுவரை அவ



"ஸார்! நீங்க கதை எழுதறதை நிறுத்தப் போகிறீங்களா? இல்லே, நான் இந்த 'பீட்'டை விட்டே ஓடிப் போய் விடட்டுமா?"

னுக்குத் தெரியவில்லை. இன்னார் என்று கண்டுபிடிக்கவும் முடியவில்லை. சுவையான உணவு வகைகள் அந்தப் பொட்டலத்தில் இருந்தன. ஆனால் அவற்றை அவன் உண்பதில்லை. வெளியே தூக்கி எறிந்து விடுவான்.

எப்படி அந்த உணவுப் பொட்டலம் அங்கு வருகிறது? யார் அதைக்கொண்டு வந்து வைத்து விட்டுச் செல்கிறார்கள்? விவேகானந்தனுக்கு வேண்டியவர்கள் யாருக்குமே அவன் இந்த வீட்டில் குடியிருப்பது தெரியாது. பின்னே எப்படி அந்த உணவுப் பொட்டலம் மாயமாய் வருகிறது? - அதுவும், கடந்த நான்கு நாட்களாகத் தவறாமல்?

தன் தம்பியின் இருப்பிடத்தைச் சுந்தரியம்மாள் யார் மூலமாவது அறிந்து இப்படிச் செய்கிறாளா? அவளே நேரில் வராமல் கண்ணையிரத்தினிடம் இரகசியமாகக் கொடுத்தனுப்பி இவ்வாறு வைக்கும்படி சொல்கிறாளா? அந்தக் கோமாளி சாரங்கனின் வேலையாக இருக்குமோ? ஒருகால் தேவகியும் இப்படிச் செய்யலாம் அல்லவா? இருக்காது. ஒரு வேளை, தேர்தலில் எதிர்க்கட்சியாக நிற்கும் ஆசாமி ஏதேனும் சதி எண்ணத்தோடு இந்த உணவுப் பொட்டலங்களை அனுப்பிக் கொண்டிருப்பாரா?...

பூட்டிக் கிடந்த வீட்டைத் திறந்து உள்ளே போய் மின்விளக்கைத் தட்டி விட்டு வராந்தாவுக்கு வந்தான் விவேகானந்தன். இதுவரையில் அவன் நடந்து வந்த தெருவின் ஒரு மரத்தடியில் ஏதோ ஒரு கரிய உருவம் நின்றிருப்பது தெரிந்தது. அந்த உருவத்துக்குப் பின்னால் தொலைதூரத்தில் மற்றோர் உருவம் தயங்கித் தயங்கி வருவது லேசாகத் தெரிந்தது. சற்று முன் அவன் கேட்ட ஒலிகளுக்கு இந்த உருவங்களின் பின்தொடரல்தான் காரணமா?

அவர்கள் யாராய் இருக்கும்?

நெஞ்சுறுதி படைத்த விவேகானந்தனுக்கே ஏதோ ஒரு விதத்தில் திகில் ஏற்பட்டது. இடமோ புதிது; இரவு வேளை; தனி மனிதன்; அக்கம்பக்கத்தில் அதிக வீடுகளும் இல்லை. ஏதாவது நடந்தாலும், ஏன் என்று கேட்க நாதி இல்லை.

விவேகானந்தன் சட்டென்று கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டு உள்ளே சென்றான். அப்போதும் அவன் மனம் அமைதியடையவில்லை. சற்று நேரங் கழித்து ஜன்னல் வழியே தெருவின் இருளை ஊடுருவிப் பார்த்தான். அந்தக் கரிய உருவங்களை இப்போது அங்கு காணோம்!

நிம்மதியாகப் பெருமூச்சு விட்ட விவேகானந்தன் ஜன்னல் ஓரம் கிடந்த ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். அவனுக்கு ஒரே களைப்பாகவும் சோர்வாகவும் இருந்தது. பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. அந்தப் பசி உணர்ச்சியின் தூண்டுதலால்தானோ என்னவோ, அவனுடைய கண்கள் தாமாகவே ஜன்னல் பக்கம் திரும்பின. நேற்றுப்போல் இன்றும் அங்கு ஏதாவது உணவுப் பொட்டலம் இருக்கிறதா என்று பார்த்தான்.

அவனுக்கு இருந்த பசியில், இன்று அங்கே உணவுப் பொட்டலம் இருந்தால் கொஞ்சமும் யோசியாமல் அதை உண்டு தீர்த்து விடுவான்—அவ்வளவு பசி இப்போது அவனுக்கு! ஆனால் ஜன்னல் கவர் இன்று காலியாக இருந்தது.

சுந்தரியம்மாள் அப்போது உணவு பரிமாறுவது போன்ற ஒரு காட்சியை மனத்தில் இருத்திக் கொண்டே மெல்லக் கண்ணை மூடினான் விவேகானந்தன்.

ஒன்றிரண்டு விநாடிக்குப் பின்—

ஜன்னலுக்கு வெளியே ஏதோ ஒலி கேட்டுச் சட்டென்று கண் விழித்துத் திரும்பினான். அதே சமயம், ஜன்னல் கம்பிகளுக்கிடையே, ஒரு கை நீண்டு வந்து, உணவுப் பொட்டலம் ஒன்றை வைப்பது தெரிந்தது!

துள்ளியெழுந்த விவேகானந்தன் ஒரே தாவாகத் தாவி அந்தக் கரத்தை வெடுக்கென்று பற்றினான். மறுகணம், 'வீச்' சென்று ஓர் அலறல்! (தொடரும்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

